Sangathamil சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 07 | இருவாரந்திர் சர்வதேச மின் செய்தித்தாள் | 15.ஆகஸ்ட்.2021



"श्रीलंका में व्यवस्थित जातिसंहार चल रहा है, हम इसे बर्दाश्त नहीं कर सकते हैं या हम मूक दर्शक नहीं हो सकते हैं"।

-1983 में
ब्लैक जुलाई दंगों के दौरान
भारत की प्रधानमंत्री माननीया इंदिरा गाँधी

"It is a Systematic genocide going on in Sri Lanka We cannot tolerate it or we cannot be a Silent spectator"

Indira Gandhi
Prime Minister of India
July-1983.





தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்



MORTGAGE ALLIANCE
Access Inc.
Independently Owned & Operated | FSCO: 11404



For All Your Mortgage Needs
- Purchase
- Refinance
- First | Second Mortgage
- Equity Line of Credit

Siva Sethunathan, B.A.
Mortgage Agent
416 725 1732
8130 Sheppard Ave E Suite 209
Toronto, ON M1B 3W3

NISHANTHAN LAW OFFICE



SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney

NOTARY SERVICES

Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

RANI TAILORS & FASHIONS



25 வருடம் அனுபவம் மிக்க மற்றும்
Sri Lanka, India, Germany போன்ற
நாடுகளில் தையல் கலையில் பிரபலமான
புஸ்பராணி மணியம் அவர்கள் இப்போது
Canadaவில் சேவையாற்றுகிறார்
தொடர்புகளுக்கு:
647.836.0654 Cell
647.945.8351 Home

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.



We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.

Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING
PROFESSIONAL STEAM

CAR & VAN
உங்கள் வீடு
தேடி வந்து
செய்து கொடுக்கப்படும்


விருகள், கொண்டோக்கள், வாடகை
வசியபிடங்கள், விட்டின் படிகள், தரை
விரிப்புகள், சோபாகள், மெத்தைகள்
வாகன உட்புறம்...



இந்த விளம்பரத்தாலோ எந்த
வேலைகளும் நிரந்தரமாகாது

416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam


Annai's PRAGATI
SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.



MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1 647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

B.J டெய்லரிங்க & ஜுவலரி
TAILORING & JEWELLARY CLASSES
We provide training in
Jewellery Making & Tailoring
Classes Available
ONLINE CLASSES AVAILABLE





உங்கள் தொடர்புகளுக்கு:
416.720.4472
jegathees2007@gmail.com

SARA
TAILORS & FASHION
தையற் கலையில் 38 வருட அனுபவம் மிக்கவரின்
மேற்பார்வையில் தையல் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன
பாடத்திட்டம்: 3 மாதம், 6 மாதம், 2 வருடம்
65 வயதானவர்களுக்கு படிப்பதற்கு
$100 மட்டும்



சாரா தையல் பயிற்சி நிலைய
ஆசிரியர் திருமதி
சரஸ்வதி பாலராசா

Saree Blouse, Wedding, Birthday Garments, Flower Girl's Dresses
Ladies Garments, Maternity Gowns, Churithar, Children's Garments
Coat, Pants Hem, Alterations, Ironing
Sewing Classes (Full time & Part Time) Sewing Machine Repairs Etc.
2699 Eglinton Ave. East, Scarborough, ON. (Brimley & Eglinton)
Tel: 416-265-0025 / 647-270-1949 | Cell: 416-910-5351

K.S PAINTING & HARDWOOD



PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

SCARBOROUGH HOME Renovation INC
...your Home Improvement Specialists
24 HOUR EMERGENCY SERVICE
Theepan
Cell: 647 218 7157
VALUE PACK HOME MAKEOVER:
- All General Home Repairs
- Basement Renovation
- Carpet Installation
- Drywall Installation
- Hardwood Flooring Installation
- Washroom Remodeling
- Kitchen Cabinets
- Kitchen Cabinets Installation
- Painting
- Plumbing
- Tiling

100% SATISFACTION GUARANTEED
www:shr1.ca e-mail: y2k21@hotmail.com
At Scarborough Home Renovation, We've definitely get the Experience and the know-how to make your Dream Renovaiton...a practical Reality!

SELVAM
GENERAL PEST CONTROL
Cockroaches, Silverfish, Carpet Beetles, Moths, Fleas
Rodents, Spiders, Wasps/Bees/Hornets & Ants...
எலி, பூச்சி தொல்லையிலிருந்து விடுபட
உடங்களுக்கு உதவிட 24 மணி நேரமும்
7 நாட்களும் இலவச மதிப்பீட்டுடன் 100 வீத
உத்தரவாதத்துடன் சேவையாற்றிட அழையுங்கள்
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில்
மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச
ஆலோசனைகளும் வழங்கப்படும்



Nesan
Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage RAISING YOUR VALUE
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயட் காப்புறுதி,
வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)



RE/ON வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது
அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com



7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
* AUDIT
* REVIEW ENGAGEMENT
* NOTICE TO READER
* BUSINESS ADVISORY
* CONTROLLERSHIP SERVICES
* CORPORATE TAXES
* PERSONAL TAXES
* FINANCIAL PLANNING
* CRA AUDITS
* PAYROLL
* BOOKKEEPING



Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 304 - 5200 Finch Ave East, Scarborough, ON M1S 4Z5
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236



Please contact:
Yo K Gamar (C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

Jathu Renovation
நிறுவனத்தில் வேலைக்கு ஆட்கள் தேவை
தொடர்புகளுக்கு ராசன்:
647-532-4162, 647-821-0356

முக்கிய அறிவித்தல்
உங்கள் வணிக விளம்பரங்கள், அறிவித்தல்கள், சிறு விளம்பரங்கள்
சங்கத்தமிழ் இருவாராந்திர சர்வதேச மின் செய்திதாள்
ஊடக மக்களிடம் சென்று அடைய
இன்றே அழையுங்கள்: 437.345.4203,
sangathamilcanada@gmail.com

தமிழீழ தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

தமிழீழத் தனியரசே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையும் தெளிவும் உண்டு.
எமது நிலைப்பாட்டை எமது எதிரி மட்டுமன்றி, முழு உலகமும் நன்கறியும்.





சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபோசி (TP)
437 345 4203
மின்னஞ்சல் (Email)
sangathamilcanada@gmail.com
முகநூல் (Facebook)
Sangathamil Canada

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீடிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சி யும் செய் யப் படுகிறது. எந் தவொரு குறைபாடுகளுக் கும் பிழைகளுக் கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.



ஒரு போராளியின் குரதிச் சுவடுகள்

1988 ஆம் ஆண்டின் நடுப்பகுதி

வன்னிக் காடுகளில் எமது தலைவர் பிரபாகரனைத் தேடி இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் சல்லடை போட்டுக்கொண்டிருந்த காலம்...

காடுகளில் புகுந்து தேடுதல் வேட்டை நடத்தியபோதெல்லாம், பாரிய உயிரிழப்புக்களைச் சந்தித்த ஆக்கிரமிப்புப் படையினர் பின்னர் தமது முகாம்களில் இருந்தவாறு காட்டப்பகுதிகளை நோக்கித் தொடர்ச்சியான எறிகணை (ஷெல்) தாக்குதல்களை மேற் கொண்டிருக்கிறனர்...

எங்களுடைய முகாம் அமைந்திருந்த அலம்பில் காட்டுப் பகுதியை நோக்கித் தினமும் இடைவீடாமல் ஷெல் குண்டுகள் பாய்ந்து கொண்டிருந்தன. எனவே அந்தப் பகுதியை விட்டு அதற்குச் சமீபமான வேறொரு பகுதியில் எமது முகாமை மாற்றுவதாக எம்மில் குறிப்பிட்ட சிலர் மட்டும் அந்த இடத்துக்குப் போய்த் தற் காலிக முகாம் ஒன்று அமைத்து — நிரந்தர முகாம் அமைக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தோம்.

அந்த இடத்திலிருந்து சிறிது தூரத்துக்கு அப்பால் அருவி ஒன்று... அருவியின் மேற்குப் புறமாய்ப் பெரியவெளி ஒன்று. இப்படிப்பட்ட வெளியை "வெட்டை" என்றும் சொல்லுவதுண்டு.

அது புதிதாக அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த காட்டு முகாம், என்பதால் அப்போது தான் அங்கே கிணறு ஒன்று தோண்டும் வேலை செய்து கொண்டிருந்தோம். அதனால் எமக்குத் தேவையான தண்ணீரை, சுமார் ஒரு மைல் தொலைவில் – வாய்க்காலின் நடுவே வெட்டப்பட்ட ஐந்து அடி ஆழமான கிணற்றிலிருந்தே எடுத்து வருவோம். பெரும்பாலும் ஆனந்தி அக்கா பாதுகாப்புக் கொடுத்து முன்னே செல்ல, எங்கள் பட்டாளம் தண்ணீரை நிரப்பும் பாத்திரங்களுடன் (Barrel) பின்னே செல்லும். ஒருவர் தோளையும் மற்றவர் தோளையும் பலமாய்த் தடி ஒன்று இணைக்க — தடியின் நடுவில் நீர் நிறைந்த பாத்திரங்களைத் கட்டித் தொங்கவிட்டு இருவர், இருவராய் சுமந்து வருவோம்.

ஆனந்தி அக்கா... மன்னார் தந்த மறப்பெண்.


எம் இதயங்களில் தனக்கென்று ஒரு தனியிடத்தைப் பதிவு செய்து கொண்ட இனிய தோழி.

எப்போது நினைத்தாலும், அந்த நெடிய, உயரத்துக்கேற்ற பருமனுடன் உறுதியான உடல் வாகும் கொண்ட அவளுடைய உருவம் எம்முன் நின்று எம்மைப் பார்த்துச் சிரிப்பது போலிருக்கும்...

R.P.G போன்ற கடினமான ஆயதங்களைக் கூட லாவகமாய் இயக்குவதில் ஆனந்தி அக்கா கைதேர்ந்தவள். தனது மனவுணர்ச்சிகளை இலேசில் வெளிப் படுத்தாத அந்த வீராங்கனையின் அடி மனதில், எல்லோரிடத்திலும் ஒரு வித ஆழமான பாசம் ஊற்றெடுத்துக் கொண்டிருந்ததை அவளுடைய செய்கைகள் எப்பொழுதும் எமக்கு உணர்த்தும்.

பாரமான மூடைகளையோ, பொருட்களையோ தூக்க வேண்டுமென்றால், உடனே எல்லோருடைய வாயிலும் ஆனந்தி அக்காதான்...

"ஆனந்தி அக்கா, இதை ஒருக்காத் தூக்குங்கோ..."



"ஆனந்தி அக்கா, இதை ஒருக்காப் பிடிச்சு என்ரை தலையிலை வைச்சு விடுங்கோ..."

எல்லோருக்கும் சளைக்காமல் கை கொடுப்பாள்.

தன்னுடைய தலையில் மூட்டை ஒன்றைச் சுமந்து கொண்டே மறு கையால் இன்னொருவரின் மூட்டைக்குக் கை கொடுக்கும் அவளுடைய உடல் உறுதியை எப்போது நினைத்தாலும் வியப்போமிஞ்சும்...

உடல் மட்டுமல்ல, அவள் உள்ளமும் உறுதியின் உறைவிடம் தான்.

1985 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்காகத் தன்னை அர்ப்பணிக்கவென இவள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்ட போது, ஆனந்தி அக்காவின் பெற்றோர் கடுமையாக எதிர்த் தார்கள்.

"வீட்டை விட்டு நீ எப்ப வெளிக்கிட்டாயோ அண்டைக்கே நீ எங்கடை பிள்ளை யில்லை" எனச் சொல்லி விட்டனர்.

இவளுடைய உறுதி தளரவில்லை.

துணவுடன் தனது பாதையைத் தேர்ந் தெடுத்தாள்.

எப்போதாவது ஆனந்தி அக்காவிடம் அவள் வீட்டைப் பற்றி — பெற்றோரைப் பற்றி — யாராவது கேட்க நேர்ந்தால், பதில் எதுவும் கூறாமல் மௌனமாகி விடுவாள். தமது பெற்றோரின் நிலைப்பாடு பற்றி அவளுடைய அடி மனதில் தாக்கம் ஒன்று இருந்ததற்கு இந்த மௌனம் சாட்சி கூறும். மேலே இதுபற்றி எதுவும் கதையாமல் நாங்கள் பேச்சின் திசையை மாற்று வோம்.

இந்தத் தற்காலிக முகாமில் எம்முடன் இருந்தவர்களில் மற்றுமொருத்தி ராதை.

நீர்வேலி மண்ணில் பிறந்து, வளர்ந்து தமிழீழ மண்ணுக்காய்த் தனது உயிரையும் உடலையும் அர்ப்பணித்தவள்.

சின்ன உருவம்... மென்மையான சுபாவம்.

எதிலும் அவசரப்படாமல் பொறுமையுடன், எந்த வேலையானாலும் அதை முழுமையாகச் செய்து முடிப்பதில் கெட்டிக்காரி.

உலகப் போராட்ட வரலாறுகளைக் கூறும் பல புத்தகங்களை ஆங்கில மொழியிலேயே எழுதப்பட்டிருப்பதால் அவற்றை விளங்கிக் கொள்வதற்குரிய ஆங்கில அறிவை எம்மில் வளர்த்துக்கொள்ள வேண்டுமென்ற ஆவல் எமக்கு எப்போதும் உண்டு. ராதைக்கு எம்மிலும் பார்கக் ஆங்கிலத்தில் ஓரளவு தேர்ச்சியுண்டு. எனவே அவளுடன் வேலை செய்யும் நேரங்களில் எல்லாம் ஆங்கிலச் சொற்களுக்கு அவளிடமிருந்து அர்த்தம் தெரிந்து கொள்வோம். கிணறு தோண்டும் வேலையைச் செய்த போதே பல ஆங்கிலச் சொற்களுக்கு அவளிடமிருந்து அர்த்தம் தெரிந்துகொண்டோம் இதனால் வேலையின் பளுவும் எமக்குத் தெரியவில்லை... அந்த நேரங்கள் அறிவை வளர்க்கவும் உதவின...

எமது கானக வாழ்க்கையில் மறக்க முடியாத நாட்கள் அவை.

திடீரென்று ஒருநாள் எமது முகாமுக்குச் சிறிது தொலைவில் இருந்த வெளிப் பகுதிக்கு மேல் இந்திய இராணுவ உலங்கு வானூர்தி ஒன்று தரையிறங்கும் நோக்கத்துடன் தாளப் பதிந்து வானில் சுற்றிச்சுற்றி நோட்டம் விடத் தொடங்கியது. நாங்கள் அனைவரும் உடனே நிலை எடுத்துக்கொண்டோம். கப்டன் சதீஷ் அண்ணா தலைமையில் ஹெலி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆனந்தி அக்காவின் ஜி. 3 யிலிருந்து புறப்பட்ட ரவை ஹெலியிலிருந்த உயரதிகாரி ஒருவனுடைய கதையை முடித்தது...

இந்திய இராணுவம் இதைச் சற்றும் எதிர்ப்பாக்கவில்லை. தரையிறங்கினால் மேலும் ஆபத்து என்பதை உணர்ந்து அவ்விடம் விட்டுப்பறந்து சென்றது...

அப்பகுதியில் எமது முகாம் ஒன்று இருப்பதை அத்தச் சம்பவந்தின் மூலம் இறிந்து கொண்ட இந்திய இராணுவம் அன்று முதல் எமது முகாமைக் குறிவைத்து எறிகணைத் தாக்குதலை ஆரம்பித்தது.

சொல்லிவைத்தாற் போல - தினமும் அதிகாலை ஐந்து மணிக்கு எமது முகாமை நோக்கி, இந்திய இராணுவம் ஏவிய எறிகணைகள் "ஊய்" என்று சத்தம் எழுப்பியவண்ணம் தொடர்ச்சியாக வந்து விழுந்துகொண்டேயிருக்கும். சில நாட்

களில் தொடர்ந்து ஒரு மணிநேரம் - சில வேளைகளில் இரு மணிநேரம் எறி கணைத் தாக்குதல் நடக்கும்.

எனவே நாங்கள் தினமும் அதிகாலை நான்கு மணிக்கே எம்மால் அமைக்கப பட்டபாது காப்பான பதுங்கு குழியைத் தஞ்சம் அடைவதை வழக்கமாக்கிக் கொண்டோம்.

இதன் காரணமாக எமது காலை உணவு (ரொட்டி) தயாரிப்பு வழமையான நேர அட்டவணைக்குள் அடங்காது போய்விடும். தொடர்ச்சியான நிகழ்ச் சியாக இது இருந்தபடியால் சில நாட்களின் பின் எமது காலை உணவான ரொட்டி யை, முதல் நாள் இரவே செய்து ஒவ்வொரு வருடைய பங்கையும் அவர வர் சட்டைப்பைகளில் வைத்துக் கொள் ளுவோம்.

காலைவேளையின் "பூபாள" மாகத் தினமும் எறிகணைகள் பயங்கரச் சத்தத் துடன் எமது முகாமைச் சுற்றிவர விழுந்து வெடிக்கும்...

எங்கள் சட்டைப் பைகளில் பதுங்கியிருக் கும் ரொட்டிகள், பதுங்கு குழியில் இருந் தபடியே காலியாகும்...

தாக்குதல் ஒய்ந்தவிட்டது — ஊர்ஜித மானவுடன் முகாம் அமைக்கும் வேலை களில் மும்முரமாய் ஈடுபடுவோம்.

அன்று...

ஆடி மாதம் 03 ஆம் தேதி.

வழமைக்கு விரோதமாய் அன்றைய காலைப் பொழுது அமைதியாய் மலர்ந் தது. தின சிரி குண்டுச் சத்தங்களுடன் விடியும் அன்று பறவைகளின் பொழுது, "கீச்" ஒலியால் புதுமெருகு பெற்றது. மந்தி கள் கிளைக்குக் கிளை தாவி, கிளைகளை உலும்பித் தமது குதூகலத்தை வெளியிட் டன ஆனால் அன்று அதிகாலை ஐந்து மணிக்கு எறிகணை வந்து விழவில்லை.

அது ஒரு வித்தியாசமான அமைதி. அந்த அமைதிக்குப் பின்னர் ஏதோ விபரீதம் இருப்பதாக அடிக்கடி உள்மனம் உச்சரித் துக்கொண்டேயிருந்தது... ஏதோ ஒருவித சோகம் மனதை ஆக்கிரமிக்கவேண்டாத சிந்தனைகளை உதறிந் தள்ளிவிட்டுக் கடமைக்காக கால்கள் விரைகின்றன...

தண்ணீர் எடுத்துவரப் புறப்படுகிறோம்.

ஆனந்தி அக்கா ஜி. 3 உடன் முன்னே நடக்க — நாங்கள் பின்னால்...

நெடிதுயர்ந்த மரங்களினூடாக-காட்டின் அடர்த்தியையும் ஊடறுத்து, வளைந்தும், நெளிந்தும் - ஏறியும் இறங்கியும் - அகன் றும் ஒடுங்கியும் கிடந்த அந்த ஒன்றரை அடிப்பாதை வழியே தண்ணீர் சுமந்து முகாமை வந்தடைந்தோம்.

ஒன்றிரண்டு காவல் அரண்களை மேல திகமாகப் போடத் தீர்மானித்ததனால், நானும் வேறு சிலரும் குழிகள் வெட்டும் வேலையில் நிற்கிறோம்.

அன்றைய சமையல் முறை ராதையி னுடையது.


ராதையின் சமையல் என்றால் எங்களுக் கொல்லாம் ஒரே கொண்டாட்டம்...

ருசியான சமையலுடன் - சமைத்த பாத்திரங்கள், அந்த இடம் - யாவையும் சுத்தமாக்கி, ஒவ்வொரு பொருளையும் அதனதன் இடத்தில் வைத்து: மிகவும் நேர்த்தியாக ராதை செய்து முடிப்பாள்...

பார்க்கும் பொழுதே சாப்பிட வேண்டும் போல் இருக்கும்.

அது ராதைக்கே உரிய தனிக்கலை.

வேடிக்கையாய்ப் பேசி, மகிழ்ந்து அன் றைய மதிய உணவை அனைவரும் ரசித்துச் சாப்பிட்டோம்.



அடுத்த கணமே எமக்கு மரணம் நேர லாம் என்பதைத் தெரிந்துகொண்டும் - அந்தக் கணப்பொழுதை மகிழ்ச்சியாகக் கழிப்பதற்கு நாம் பழகிக் கொண்டவர் கள்... அதனால் தான் கானக வாழ்க் கையின் கடினங்களையும் அருமைத் தோழர்களின் உயிரிழப்புக்களையும் சகித்துக்கொண்டு எமது உன்னதமான — லட்சியத்துக்கானபோராட்டத்தை உறுதி யோடு தொடர்ந்துகொண்டிருப்பது எமக்குச் சாத்தியமாகிறது.

அன்றிரவு ஒன்பது மணிவரை முகாம் காவல் வேலை ஆனந்தி அக்காவுக்கும் ராதைக்கும் உரியது. அதன் பின் இரு வரும் வந்து படுத்துக்கொள்கிறார்கள்.

"கொமாண்டோ ரென்ற்" (Commando Tent) — என்று சொல்லப்படுகின்ற ஏழு பேர் மட்டும் படுத்திருக்கக்கூடிய சிறிய கூடாரத்தில் எனது வலது பக்கம் ஒரு தோழி - இடது பக்கம் ராதை - இன்னும் இருவர் படுத்திருக்கிறோம் - கூடாரத்துக்கு வெளியே ஆனந்தி அக்காவும் இன்னொரு தோழியும்.

அனைவரும் நித்திரையில் ஆழ்ந்துவிட்ட நேரம்...

இரவு 10 மணி இருக்கும, செவிப்பறையை உடைக்கும் பாரிய வெடிச் சத்தம் ஒன்று நித்திரையைக் கலைக்கிறது. திடுக்குற்று கண் விழிக்கிறோம்...

"ஐயோ... ஐயோ... இங்கை வாங்கோ" என்ற ஆனந்தி அக்காவின் கூக்குரல், காட்டு மரங்களில் எதிரொலித்துச் சிதறு கிறது.

சுற்றிலும் கருமை படர்ந்த இருள்...

எதுவுமே கண்ணுக்குப் புலப்படவில்லை ஆனாலும், எமது முகாமுக்குள்ளேயே எறிகணை (ஷெல்) ஒன்று விழுந்து வெடித் துவிட்டது என்பதை மட்டும் உணரக் கூடியதாக இருந்தது.

"அக்கா டோச்ச் எங்கை?...- ஒரு குரல்.

"இங்கைதான், என்ரை தலைமாட்டிலை இருக்கு... என்னாலை இருக்கு... என் னாலை எழும்பி எடுக்க ஏலாமை இருக் கு..." காயமடைந்த தோழி ஒருத்தி முனகுகிறா.

இதற்கிடையில் - ஷெல் அடிக்கிறாங்கள். பதுங்கு குழிக்குள் ஓடுங்கோ." என்று பாது காப் பரணிலிருந்து ஒரு தோழிகத் துகிறாள்.

"ஒரு எறிகணை விழுந்து எங்கள் கூடாரத் துக்கு மிக அருகில் வெடித்திருக்கிறது...'

என் அடை முழுவதும் ஈரமாய் - பிசுபிசு வென ஒட்டுகிறது... இரத்தம்!

யாருக்கோ காயம் பட்டிருக்கிறது... அதுவும் பலமானகாயமாகத்தான் இருக்க வேண்டும். இல்லையென்றால் எனது ஆடைமுழுவதும் எப்படி இரத்தம் தோய்ந்து...

"ஐயோ... ஓடிவாங்கோ... எனக்குக் காயம்பட்டிட்டுது..." — ஆனந்தி அக்கா பலமாகக்கத்துகிறாள்.

எங்கள் கூடாரத்துக்கு எல்லோரும் ஓடி வருவது - இருட்டிலும் காலடி ஓசைகளின் மூலம் உணரமுடிகிறது.

இருட்டில் அங்குமிங்கும் துழாவி "டோர்ச்சலைற்" றை எடுத்து மிதிலாக்கா படுத்திருந்த பக்கம் அடிக்கிறேன்.

மிதிலா அக்காவின் முழங்கால் பகுதியிலிருந்து இரத்தம் "குபுகுபு" என வழிந்துகொண்டிருக்கிறது...

அடுத்த ஷெல் வந்து விழுமுன் எல் லோரும் பதுங்கு குழிக்குள் போய்விட வேண்டும்.

மிதிலா அக்காவினால் நடக்கவோ, ஓட வோ நிச்சயம் முடியாது...

அவவையும் தூக்கிக் கொண்டு ஓட வேண்டும்.

ஒரு கையால் டோர்ச்லைற்றை அடித்தபடி — அவவை மெதுவாய்த் தூக்கி இழுத்துக் கொண்டு பதுங்குகுழி நோக்கி விரைகின்றேன்.

இதற்கிடையில் மேலும் இருவர் அவ்விடம் வந்துவிட, எல்லோருமாய் மிதிலா அக்காவைப் பதுங்கு குழிக்குள் கொண்டு போய்ச் சேர்க்க - இரண்டு பேர் அவவுக்கு வேண்டிய முதலுதவிச் சிகிச்சை செய் கிறார்கள். நானும், மற்றவர்களும் வெளி யேவந்து ஆனந்தி அக்கா விடம் ஓடகி றோம்...

தொடையைக் கிழித்துக் கொண்டு ஷெல் துண்டோன்று வயிற்றினுள் பாய்ந் ததனால் இரத்தம் ஆறெனப் பெருக...

தாங்கமுடியாத வேதனையில் முனகிய வாறு ஆனந்தி அக்கா அப்படியும் இப்படி யும் புரண்டுகொண்டுகிடக்கிறாள்.

எங்கள் மூடைகளைத் தன் தலையில் சுமந்து கைகொடுத்த எங்கள் ஆனந்தி அக்கா வலியால் துடிதுடித்துக்கொண் டிருக்க - அந்த வலியின்வேதனையை எங்களால் பகிர்ந்து கொள்ள முடிய வில்லையே என்ற ஏக்கத்தில் எம் இதயம் கனக்கிறது. உணர்ச்சிகளால் நெகிழ்ந்து போகவோகரைந்து போகவோ அது இடமு மல்ல...

நேரமுமல்ல...

அவவை மெதுவாகத் தூக்கிக்கொண்டு பதுங்கு குழியை நோக்கி தாங்கள் விரை வாக நடக்கத் துவங்க —

"ஊய்ங்" காரமிட்டபடி அடுத்த ஷெல் எமது முகாமை நோக்கி வெறியுடன் வருகிறது.

அப்படியே குப்புறப் படுக்கிறோம்...

பலத்த ஓசையுடன் - சற்றுத்தள்ளிப் போய் ஷெல் வெடிக்கிறது.

மீண்டும் சிறிது தூரம் போக- அடுத்த ஷெல்...

ஒருமாதிரி அனைவரும் பதுங்கு குழிக் குள் போய்ச் சேர்ந்ததும் - "ராதை எங்கே?'

"ராதை ஏன் எம்முடன் வரவில்லை?'



வீரமரணமடைந்த நிலையில் 2வது லெப் ஆனந்தி

அனைவர் மனதிலும் இதே கேள்வி...

எறிகணைகள், தொடர்ச்சியாக விழுந்த கொண்டேயிருக்கின்றன...

ஆனந்தி அக்கா வலி பொறுக்க முடியாமல் துடித்துக்கொண்டேயிருக்கிறாள்.

அந்த வேதனை ஒரு பக்கம் - ராதையைக் காணவில்லை என்று போய்ப்பார்த்து வரக் கூட முடியாமல் குண்டுமாரி பொழிந்து கொண்டிருந்தது. இதயத்தில் ஏற்படுத்திய ரணம் ஒரு பக்கமுமாய்...

தொடர்ந்து வந்த ஒரு மணி நேரமும், பதுங்குகுழியே தஞ்சம் என இருக்கி நோம்.

ஒ ரு வ ா று எறிகணை வீச்சு ஓய்கிறது.

கூடாரத்தை நோக்கி ஓடுகிறோம்.

அங்கே...

முகத்தின் ஒரு பகுதி சிதைந்த நிலையில் இரத்த வெள்ளத்தில் ராதை "ஆழ்ந்த துயிலில்" — அடங்கிப் போய்க்கிடக்கிறாள்.

பத்து மணிக்கு — முதல் விழுந்த எறி கணை — எங்கள் அன்பு ராதையை எம்மிட மிருந்துபிந்துவிட்ட சோகத்தைப் பகிர்ந்துகொள்கிறோம்...

என் ஆடைகளை நனைத்திருந்தது, என் இனிய ராதையின் குரதியா...?

இதயம் பாறையாயக் கனக்கிறது...

ஆனந்தி அக்காவின் உயிர், ஜீவமரணப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தது.

அவளுடைய உயிரையாவது காப்பாற்று வோம் என்ற நம்கிக்கையில் - எம்மால் முடிந்த சிகிச்சையைச்செய்தபோதும் - ஏற்கனவே அதிக இரத்தம் வெளியேறி விட்ட காரணத்தினால் அடுத்த நாள் - ஆடி 04-ந்தேதி அந்த இனிய உயிரும் எம்மை விட்டுப் பிரிந்தது.

போருக்குப் புறப்படும் வீர மறவர்களுக்குப் பெண்கள் இரத்தத்தால் நெற்றித் திலக மிட்டு அனுப்புவதைப் பழைய வரலாறு களில் படித்திருக்கிறோம்...

இங்கே-

தங்கள் உடலையே குருதியால் நனைத்து — தமிழீழப் போராட்டத்தை உறுதியுடன் தொடர்வதற்கு எம்மையெல்லாம் ஆசீர் வதித்துப் போயிருக்கிறார்கள் எமது வீராங்களைகள்.

ஆனந்தியும்... ராதையும்...

அவர்களது ஆசிகள் நிச்சயம் பவிக்கும்...

தமிழீழப் போராட்டம் வெற்றிவரலாறு படைக்கும்.

- சித்ரா — விடுதலைப் புலிகள் -



இன்னும் புதைகுழிகள் எழும்...

எங்கள் மண் வரண்டு
எழிலிழந்து கிடக்கிறது.
பொங்கும் நிலா கூடப்
பொழியும்; குளிராது.
தென்றல் வரும்; வீசும்
தேசம் சிரியாது.
என்றிவைகள் மீண்டும்
இதமாகும் தெரியாது.

மண்ணுக்குப் பொட்டிட்ட மாதிரியாய்
புதைகுழிகள்
எண்ணுக் கணக்கின்றி எழுகின்ற பூமியிது.
இன்னும் புதைகுழிகள் எழும்.
புலிவீரர்
கண்ணுக்குத் தமிழீழம் காட்சிதரும் வரையில்
இன்னும் புதைகுழிகள் எழும்.

எனென்றால்...
கொல்லைக்குள் வந்த குரங்கை எதிர்த்து நின்று
எல்லைக்கு அப்பால் எறிந்து கலைத்து விட்டோம்
வந்திங்கு ஆதிக்க வலையை விதித்துவரை
நிந்தித்தோம்;
நாங்கள் நிர்மூலம் செய்து விட்டோம்.
ஆனாலும் எல்லாமும் ஆச்சா... இல்லைப்பார்!
மானாகி விட்டதா மதயானை...? இல்லைப்பார்!
காட்டெருமை எங்கள் கடப்புக்குள் மேய்கிறது.
ஆனை திமிர் கொண்டு அலைகிறது.
எங்களது
சேனைக்குள் வந்தும் மதிக்கிறது.
இத்தனையும் நடக்கிறது. என்றாலும் வயல்காரர்
நித்திரையாய் கிடக்கின்ற நிகழ்வே தொடர்கிறது.
கவனம்... இனித்தானே பயணம் இருக்கிறது.
கவனம்... இனித்தானே கதையே தொடங்கிறது
வாருங்கள் ஒன்றாக வடம் பிடிப்போம்
போராட்டத்
தேரை இழுத்தெங்கள் சேசத்தை விடுவிப்போம்.

மண்ணுக்குப் பொட்டிட்ட மாதிரியாய்
புதைகுழிகள்
எண்ணுக் கணக்கின்றி எழுகின்ற பூமியிது.
இன்னும் புதைகுழிகள் எழும்
புலிவீரர்
கண்ணுக்குத் தமிழீழம் காட்சிதரும் வரையில்
இன்னும் புதைகுழிகள் எழும்.

தமிழ்மி செய்திகள்



இலங்கை தீவு முழுவதும் கொரோன மிகத் தீவரமாக பரவி வருகின்றது

– மருத்துவர் ஆ. கேதீஸ்வரன்

ஆகஸ்ட் 05.08. 2021



இலங்கை தீவு முழுவதும் தற்போது கொவிட்-19 மிகத் தீவிரமாக பரவி வருகின்றது.

இறப்புகளின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது. இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளத் தவறியவர்களாக காணப்படுகின்றனர் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:- இந்தப் பரம்பலைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள மூன்று வழிகளே உள்ளன.

முதலாவதாக அவசியமற்ற ஒன்று கூடல்களை விழாக்களை தவிர்த்துக் கொள்ளுதல். அவசியமின்றி வீடுகளுக்கு வெளியே வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

வணக்கஸ்தலங்களில் இடம்பெறும் நிகழ்வுகளை உட்பிரகாரங்களில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் மட்டுமே நடத்த அனுமதி வழங்கப்படுகின்றது.

அண்மைக் காலமாக பல ஆலயங்களில் நடந்த திருவிழாக்கள் மூலம் கொரோனா தொற்று மிக வேகமாக பரவியதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இரண்டாவதாக பொதுமக்கள் பொது இடங்களுக்கு செல்கின்ற வேளைகளில் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும்.

முகக்கவசங்களை சரியான முறையில் அணிந்திருக்க வேண்டும். கைகளை கிரமமாக தொற்று நீக்கம் செய்ய வேண்டும். சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டும்.

மூன்றாவதாக பொதுமக்கள் கட்டாயமாக தமக்குரிய தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தற்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் சினோபாம் முதலாவது தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன் தினம் மாலை வரை வடமாகாணத்தில் 462,771 பேருக்கு முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டது. இது வடமாகாணத்தில் உள்ள 30 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையில் 70 வீதமாகும். நேற்று முன் தினம் மாலை வரை யாழ். மாவட்டத்தில் 243400 (70வீதம்) பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 48564 (67வீதம்) பேரும் மன்னார் மாவட்டத்தில் 52532 (67வீதம்) பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 4032 (69வீதம்) பேரும் வவுனியா மாவட்டத்தில் 73243 (74வீதம்) பேரும் முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

வடமாகாணத்தில் இன்னமும் 30 வயதிற்கு மேற்பட்ட ஏறத்தாழ 200,000 பேர் முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. தற்போது உள்ள தீவிரமான கொரோனா பரம்பல் சூழ்நிலையில் பரம்பலைக் கட்டுப்படுத்தவும் இறப்புகளைக் குறைக்கவும் எம்மிடம் உள்ள முக்கியமான உபாயம் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதே.

இனிமேல் வைத்திய சாலைகளுக்கும் பொது இடங்களுக்குச் செல்வதற்கும் பொது போக்குவரத்துகளில் பயணிப்பதற்கும் தடுப்பூசி ஏற்றிக் கொள்வது கட்டாயமாக்கப்படலாம்.

எனவே இதுவரை தடுப்பூசி ஏற்றுக்கொள்ளாத 30 வயதிற்கு மேற்பட்ட அனைவரையும் உடனடியாக தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

வவுனியா அரச அதிபராக இருந்த சமன் பந்துலசேனவுக்கு தமிழரின் இன விகிதாசாரத்தை குறைத்தமைக்கு சிறந்த பரிசு

சார்ள்ஸ் நிர்மலநாதன்

ஆகஸ்ட் 05, 2021



அநுராதபுரம் கெப்பிட்டிக்கொல்லாவ ஜெனகவேவ கிராம பிரிவைச் சேர்ந்த 1417 சிங்களக் குடும்பங்களை வவுனியா வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளுடன் இணைத்து தமிழ் இன விகிதா சாரத்தை குறைத்தமைக்கான பரிசாகவே வவுனியா அரச அதிபராக இருந்த சமன் பந்துல சேனவுக்கு சிறீலங்கா ஜனாதிபதியால் வடக்கு மாகாண பிரதம செயலாளர் பதவி வழங்கப்பட்டதென தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

சிறீலங்கா பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன் கிழமை நடைபெற்ற வேலையாட்களின் குறைபட்ச வேதன திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் இன விகிதாசாரம் திட்டமிட்டு அழிக்கப்படு கின்றது. அதற்காகவே காணி அபகரிப் புகளும் சிங்களக் குடியேற்றங்களும் தமிழர் பகுதிகளில் அரங்கேற்றப்படுகின்றன. இதற்கு அரசில் அங்கம் வகிக்கும் தமிழ் அமைச்சர்களும் எம்.பி.க்களும் சலுகைகளுக்காக துணை போகின்றனர். இன அழைப்பை இவர்கள் மௌனிகளாக வேடிக்கை பார்க்கின்றனர். எனவே தமிழினம் அழிவதற்கு காரண மாகிவிட வேண்டாமென இவர்களிடம் வேண்டுகின் றேன்.

அநுராதபுரம் கெப்பிட்டிக்கொல்லாவ ஜனாகவேவ கிராம பிரிவைச் சேர்ந்த 1417 சிங்களக் குடும்பங்களை வவுனியா வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளுடன் இணைத்து தமிழ் இன விகிதாசாரத்தை குறைத்தமைக்கான பரிசாகவே வவுனியா அரச அதிபராக இருந்த சமன் பந்துல சேனவுக்கு சிறீலங்கா ஜனாதிபதியால் வடக்கு மாகாண பிரதம செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது. எனவே வடக்கில் தமிழ் இன விகிதாசாரத்துக்கு ஆபத்து ஏற்படப் போகின்றது.

இதேவேளை முல்லைத்தீவில் கோத்தபாய சிங்கள கடற்படை முகாமுக்கு 617 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதில் 339 ஏக்கர் காணிகள் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு இருந்த காணிகள். இக்காணியை சுவீகரிக்கின்ற நில அளவைத் திணைக்களத்துக்கு எதிராக, சிங்கள கடற்படைக்கு எதிராக அண்மையில் காணி உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டம் நடந்தியிருந்தார்கள். பாராளுமன்ற உறுப் பினர்களாகிய நாமும் கலந்து கொண்டோம். அப்போது இது தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்றை நடத்துமாறு கடற்படையிடம் கேட்டிருந்தோம். அது ஜனாதிபதியாக இருக்கலாம், பிரதமராக இருக்கலாம் அல்லது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கலாம் என்றும் கூறியதுடன் இந்தக் காணிகளை மக்களிடம் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தோம்.

இந்த 617 ஏக்கர் காணிகளின் சுவீகரிப்புக்கு கடற்படைக்கு என்ன தேவை இருக்கின்றது. இந்த 617 ஏக்கர் காணியை அபகரிப்பதன் பிரதான நோக்கம் எதிர் காலத்தில் அந்தக் கடற்படையைச் சார்ந்த குடும்பங்களை அங்கு குடியேற்றி தமிழ் மக்களின் இன விகிதாசாரத்தைக் குறைப்பதுதான். முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தம் நடைபெற்றதன் பின்னர் பல நிலங்கள் சிறீலங்கா இராணுவ வசமாகியுள்ளன. எனவே இவற்றை விடுவிக்க உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்றை அரசு ஏற்படுத்த வேண்டும் என்றார்.



சிங்கள அரசியல்வாதிகள் சீனர்களை நம்புவார்கள் ஆனால் தமிழர்களை நம்பமாட்டார்கள்

விக்னேஸ்வரன்



ஆகஸ்ட் 04, 2021

நாங்கள் கடன் பொறி ஒன்றில் அகப்பட்டுள்ளோம். அதில் இருந்து மீள வழிதேடாமல் அரசியல் பேசிக் கொண்டே காலம் கடத்தி வருகின்றோம். எங்கள் சிங்கள அரசியல்வாதிகள் விட்டில் பூச்சிகளைப் போன்றவர்கள். எரியும் நெருப்பைத் தேடிப் போய்த் தம்மை எரித்துக் கொள்ளும் சுபாவம் உடையவர்கள். அவர்கள் சீனர்களை நம்புவார்கள் ஆனால் தமிழர்களை நம்பமாட்டார்கள் என யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 2020ம் ஆண்டின் மத்திய வங்கி அறிக்கை மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிகவும் மனவருத்தத்துடன் தான் நான் 2020ம் ஆண்டின் மத்திய வங்கி அறிக்கை பற்றிய விவாதத்தில் பேச எழுந்துள்ளேன். இதுவரைகாலமும் எமது கடன்களை காலத்திற்குக் காலம் இடைவிடாமல் திருப்பிக் கட்டி வந்த நாங்கள் அந்த நற்பெயருக்கு இழுக்கை ஏற்படுத்தும் விதமாக வாயிற்படியில் காலூன்றி நிற்கின்றோம். ஏதாவது ஒரு சர்வதேச கடனை உரியவாறு உரிய நேரத்தில் கட்டாது விட்டால் அது மற்றைய சகல கடன்களையும் பாதிக்கும். அவ்வாறு நடந்தால் அது மிகப் பெரிய ஆபத்தாக உருவெடுக்கும்.

எமது கடன்காரர்கள் யாவரும் உடனே தமது கடன்களை முழுமையாக நாங்கள் திருப்பிக் கட்ட வேண்டும் என்று கேட்பார்கள். அதே நேரத்தில் அவற்றைக் கட்ட எம்மால் வேறு கடன்களைப் பெற முடியாத ஒரு ஆபத்து நிலை ஏற்படும். உண்மையில் எமக்குக் கடன்தர எவரும் முன்வரமாட்டார்கள். சீனா போன்ற ஒரு நாட்டின் அடிமை நாடாகவன்றி எம்மால் தனித்தியங்க முடியாமல் போய் விடும்.

சீன கம்யூனிசக் கட்சியின் 100வது வருடத்தை முன்னிட்டு நாங்கள் தங்க நாணயங்களை வெளிக் கொண்டு வருகின்றோம். ஏற்கனவே பல நிறுவனங்களின் முன் ஆங்கில, தமிழ் ஏன் சிங்கள மொழி கூடப் பாவிக்கப படாமல் சீன மொழியில் மட்டும் பெயர்ப்பலகைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஒரு வேளை எமக்கு நடக்கப் போவதை முன்கூட்டியே அறிந்து தான் இவ்வாறான செயல்களில் நாம் ஈடுபடுகின்றோமோ? நான் அறியேன்.

ஆனால் இவ்வாறான நடவடிக்கைகள் பூகோள அரசியலில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றது என்பது பற்றி சிந்தித்தோமா? முகத்தைப் பகைத்து மூக்கை வெட்டும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

முக்கியமாக எமக்குக் கவலையளிக்கும் ஒரு விடயந்தான் எமது மீண்டுவரும் கடன்களை அரசாங்க வருமானத்தைக் கொண்டு அடைக்க முடியாமல் இருப்பது. 2020ல் கொண்டு வரப்பட்ட வரிக் கொள்கை அரச வருமானத்தை வெகுவாகக் குறைத்தது. பொது மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தும் தற்போதைய வாழ்க்கைச் செலவின் அபரிமிதமான அதிகரிப்பானது குறித்த வரிக் கொள்கையின் நன்மைகளை மக்களுக்குக் கிடைக்கப் பண்ணாமல் ஆக்கிவிட்டது. பொருளாதார விருத்தியின்றி அரச திறைசேரி சதா காலமும் நெருக்குதலுக்கு இலக்காகி நிற்கின்றது. இவ்வாறான நிலையில் எமது கடன்களை அடைக்கப் போதுமான வருமானங்களை எம்மால் பெறமுடியாதிருப்பதால் மாதச் சம்பளங்களைக் கூடக் கட்ட முடியுமோ என்ற நிலைக்கு நாங்கள் வந்துள்ளோம்.

ஆகவே அரசாங்கம் தொடர்ந்தும் கடன் எடுக்க வேண்டிய ஒரு நிலையிலேயே தற்போது இருக்கின்றது. நாங்கள் கடன் பொறி ஒன்றில் அகப்பட்டுள்ளோம். ஆனால் அதில் இருந்து மீள வழிதேடாமல் இப்பொழுதும் அரசியல் பேசிக் கொண்டே காலம் கடத்திவருகின்றோம்.

மாண்புமிகு கெஹெலிய இரம்புக்வெல அவர்கள் அண்மையில் ஊடகங்களுக்கு ஒரு செய்தி சொன்னார். "அரசாங்கம் ஒரு பில்லியன் டொலர்களை கடன் அடைப் பதற்காகக் கட்டியுள்ளது என்பதில் பெருமை அடைகின்றேன்" என்றார். ஆனால் அவர் மிகுதி இருக்கும் 34 பில்லியன் கடன் அடைக்க வேண்டிய தொகையை எப்பொழுது கட்டப் போகின்றார் என்பது பற்றிக் கூற வில்லை.

எது எவ்வாறு இருப்பினும் எமது அந்நியச் செலாவணியின் குறைவினால் சில நிறுவனங்களால் கடன்கடிதங்கள் திறக்க முடியாது என்று கூறப்பட்டதாக அறிய நேரிட்டது. எமது அந்நிய செலாவணி அந்த அளவுக்குக் குறைந்துள்ளது அல்லவா? இப்படியே போனால் எம்மால் பெற்றோலையும் டீசலையும் இறக்குமதி செய்யக்கூட முடியாமல் போய்விடும்.

முன்னொரு காலத்தில் கலாநிதி டபிள்யு.தகநாயகா அவர்கள் பெற்றோல் விலையைக் கூட்டியமையால் மாட்டு வண்டியில் பாராளுமன்றம் வந்தார். ஆனால் தற்போதைய நிலை அதிலும் மிக மோசமானது. கையில் பணம் இருந்தால் கூட வாங்குவதற்குப் பெற்றோலோ டீசலோ இருக்காது.

முன்னெப்பொழுதும் இல்லாத அளவு நாளுக்கு நாள், வாரத்துக்கு வாரம், மாதத்திற்கு மாதம் நாம் கடதாசி பணத் தாள்களை அச்சிட்டு வந்துள்ளோம். செயற்கை முறைகளினால், சட்டத்திற்கு அமைவற்ற முறைகளினால் நாங்கள் எமது நாணயப் பெறுமதியை ஏற்றி வைத்துக் கொண்டு இருக்கின்றோம். பாதிக்கப்பட்ட மக்களின் நலனை நினைக்காது நாம் கண்டபடி செயற்பட்டு வருகின்றோம்.

எமது நாட்டு மக்களை நாங்கள் எங்கு கொண்டு வந்துள்ளோம்? பட்டினி, கடன், மன உளைச்சல் என்ற நெருப்பு எமது மக்களைத் தாக்கும் நிலையிலும் நாம் நீரோ மன்னர் பிடில் வாசித்தது போல் நடந்து கொண்டு செல்கின்றோம்.

எங்களுக்கு சேதன உரமே தேவை என்று கூறி நாம் அசேதன உர இறக்குமதியை நிறுத்திக் கொண்டோம். உயரிய சிந்தனை தான் இது. ஆனால் அவ்வாறான ஒரு காரியம் மக்களை இரசாயன உரங்களில் இருந்து பாதுகாக்கவல்ல எடுக்கப்பட்டது. எமது டொலர்களைச் சேமிக்கவே குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் வழமைபோல் அதற்கான காரணம் தேசப்பற்றின் வெளிப்பாடே என்று கூறப்பட்டது.

இவ்வாறு உர இறக்குமதியை தடை செய்ய முன் விஞ்ஞான ரீதியாக அதன் தாக்கம் ஆராய்ந்து அறியப்பட்டதா? அப்படி எனில் எந்த நிறுவனம் அதற்கான சிபார்சை அரசாங்கத்திற்கு வலியுறுத்தியது? இடைக்காலம் எதனையும் கொடுக்காது திடீர் என்று இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட எந்த அரச நிறுவனம் அறிவுரை வழங்கியது? இது பற்றிய ஆராய்வுகள் நடைபெற்றனவா? உர இறக்குமதியை உடனே இயற்றினால் எவ்வாறான தாக்கம் எமது பயிர்களின் விளைச்சலில், அறுவடையில் ஏற்படும் என்ற திட்ட அலசல் செய்யப்பட்டதா?

ஆனால் அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து நெல்லினை இறக்குமதி செய்ய உத்தேசித்துள்ளதாக நாங்கள் அறிகின்றோம். அந்த நாடுகளில் இதே இரசாயன உரம் பாவித்தே பயிர்ச் செய்கை நடைபெறுகின்றது. அப்படியானால் உர இறக்குமதியின் காரணம் மக்கள் நலம் அல்ல டொலர்களின் போதமையே என்று புலப் படுகின்றது.

எனினும் இயற்கை உரத்தை எமது பயிர் உற்பத்தியாளர்கள் தொடர்ந்து பெற எத்தகைய முன்னேற்பாடுகளை அரசாங்கம் செய்துள்ளது? இதுவரை காலமும் செயற்கை உரத்திற்குப் பழக்கப்பட்ட நிலங்கள் இயற்கை உரத்தை ஏற்று போதிய பலன் தர மூன்று அல்லது நான்கு வருடங்கள் ஆகுமல்லவா? அப்படியானால் எமது விளைச்சலில் பாரிய வீழ்ச்சியை நாம் எதிர்பார்க்கலாம் அல்லவா? அவ்வாறானால் இவற்றின் உண்மைகளை அரசாங்கம் மக்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளதா? வரலாற்றின் இவ்வாறான ஒரு இக்கட்டான நிலையில் கூட நாங்கள் அரசியல் பேசிக் கொண்டு காலத்தைக் கடத்துவதன் மர்மமென்ன?

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இரு தரப்பு சிங்கள நண்பர்களிடமும் ஒரு வேண்டுகோளை பல தடவைகள் நான் முன்வைத்து வந்துள்ளேன். அதாவது தமிழ் மக்களை உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக்கி எமது புலம் பெயர் மக்களின் முதலீடுகளுக்கு வழி அமையுங்கள் என்று கேட்டுள்ளேன்.

வெளிநாட்டில் இருக்கும் சிங்கள உறவுகளையும் உள்ளடக்கிய எமது புலம் பெயர் உறவுகள் எம்மால் வேண்டப் படின் கட்டாயமாக அந்நியசெலாவணியைப் போதியவாறு எமது உள்நாட்டு முதலீடுகளில் ஈடுபடுத்த முன்வருவார்கள். இவ்வாறான செயற்பாட்டால் எமது தற்போதைய பொருளாதார சிக்கல் நிலையை நாங்கள் போக்கிக் கொள்ளலாம். ஆனால் எங்கள் சிங்கள அரசியல்வாதிகள் விட்டில் பூச்சிகளைப் போன்றவர்கள். எரியும் நெருப்பைத் தேடிப் போய்த் தம்மை எரித்துக் கொள்ளும் சுபாவம் உடையவர்கள். அவர்கள் சீனர்களை நம்புவார்கள் ஆனால் தமிழர்களை நம்பமாட்டார்கள்!

மீண்டும் ஒரு முறை எமது சிங்கள பௌத்த அறிவுசால் சமூகத்திடம் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். தமிழர்களையும் முஸ்லீம்களையும் உங்கள் அந்தரங்கத் திற்குள் ஏற்றுக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்து போதிய முதலீடுகளை நாட்டிற்குள் வரவழையுங்கள். இதன் மூலமாக எமது அந்நியச் செலாவணிப் பிரச்சனைகளை நாங்கள் விரைவில் தீர்த்துக் கொள்வோம். இந்த நாட்டைக் காப்பாற்ற நாம் யாவரும் இணைய வேண்டிய முக்கிய தருணம் இது தான் என்று தெரிவித்தார்.

உணர்வெழுச்சியுடன் இடம்பெற்ற, செஞ்சோலைப் படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல்

14 ஆகஸ்ட்

உணர்வெழுச்சியுடன் இடம்பெற்ற, செஞ்சோலைப் படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல்.

முல்லைத்தீவு - வள்ளிபுனம், சொஞ்சோலை வளாகத்தில் கடந்த 2006ஆம் ஆண்டு, சிறீலங்கா விமான படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொடூர விமானத் தாக்குதலால் அப்பாவி மாணவிகள் 61பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.


இவ்வாறு படுகொலைசெய்யப்பட்ட அப்பாவி மாணவிகளின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள், முல்லைத்தீவு - கள்ளப்பாடு, வடக்குப் பகுதியில் அமைந்துள்ள முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் மதிப்புறு துரைராசா ரவிகரன் அவர்களது மக்கள் தொடர்பகத்தில் 14.08.2021இன்று உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.

குறித்த அஞ்சலி நிகழ்வில் படுகொலைசெய்யப்பட்ட மாணவியர்களுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, பூத்தூவி, சுடரேற்றி அஞ்சலி நிகழ்வுகள் உணர் வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் இந்த அஞ்சலி நிகழ்வில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்கள், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான மரியநாயகம் தொம்மைப்பிள்ளை, சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









தாயின் கண்ணீர்ப் பயணத்திற்கு முடிவு கொடு பத்து மாதம் சுமந்த வயிறு பற்றி எரிகின்றதே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள்

ஆகஸ்ட் 03, 2021



அம்பாறை திருக்கோவிலில் ஆர்ப்பாட்டம்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்திருக்கின்றது என கேட்டு அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் இன்று செவ் வாய்க்கிழமை (03) திருக்கோவில் குடிநிலம் செல்வ விநாயகர் ஆலை முன்றலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி த.செல்வராணி தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெற்றோர்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள் எனப் பலரும் சுகாதார நடை முறை களைப் பின்பற்றி கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தாயின் கண்ணீர்ப் பயணத்திற்கு முடிவு கொடு பத்து மாதம் சுமந்த வயிறு பற்றி எரிகின்றதே எங்கள் பிள்ளைகள் எங்கே? எங்கள் பிள்ளைகள் எமக்கு வேண்டும் என் விழிகள் மூடமுன் என் பிள்ளைகளைக் காணவேண்டும். போன்ற சுலொகங் கள் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இதன் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் கள் சங்கத்தின் தலைவி த.செல்வராணி கருத்துத் தெரிவிக்கையில் நாங்கள் மன வேதனை யுடன் வாழ்ந்த கொண்டிருக்கின்றோம் எமது தேடலுக்கு ஒரு முடிவு வரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. ஆனால் இன்னும் வரவில்லை. எனவே எங்கள் வேதனைகளை சர்வதேச நாடுகள் கண்கொண்டு பார்த்து எங்களின் பிள்ளைகளை கண்டுபிடித்துத் தருமாறு வினயமாகக் கேட்டுக் கொள்கின்றோம். எங்களால் போராட முடியாத நிலைமையிலும் நாங்கள் போராடிக் கொண்டிருக் கின்றோம் நாங்கள் இறக்கும் தருவாயிலும் எமது பிள்ளைகளைத் தேடும் போராட்டம் தொடரும்.

எமது போராட்டம் பத்து வருடத்தைக் கடந்து பதினொரா வது வருடத்தை எட்டி நிற்கும் இத்தருவாயில் எட்டு மாவட்டங்களிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை இழந்து நிற்கின்றோம்.

எமது பிள்ளைகள் அனைவரும் வலுக்கட்டாயமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர் கள் ஒப்படைக் கப்பட்டவர்கள் வாகனங்களில் இறக்கி எடுக்கப்பட்டவர்கள் வீடு வீடாய் சுற்றி வளைப்பில் பிடித்துச் செல்லப்பட் டவர்கள். இவர்கள் எங்களுக்கு மீளவேண்டும். அவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை எங்களுக்குத் தெரியவேண்டும்.

சர்வதேச நீதிமன்றத்திற்கு எங்கள் பிரச்சினைகள் கொண்டு செல்லப்பட வேண்டும். உலக நாடுகள் அனைத்தும் எங்கள் வேதனைகளைக் கண்கொண்டு பாருங்கள். எங்கள் பிள்ளைகளுக்கு ஒரு நீதி வேண்டி நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம். அனைத் துலக நாடுகளும் எங்களுடன் சேருங்கள்.

நாங்கள் இன்று எங்கள் பிள்ளைகள் கணவர் உறவுகளைத் தேடிநிற்கின்றோம். இந்த அவலம் யாருக்கும் வந்துவிடக் கூடாது. அனைவரும் எமது போராட்டங்களுக்கு வலுச்சேருங்கள். சர்வதேசமும் அனைத்துலக நாடுகளும் எங்கள் போராட்டத்திற்குத் தோள்கொடுத்து எங்கள் உறவுகளுக்கு நல்லதொரு தீர்வைப் பெற்றுத் தாருங்கள். இனிவரும் சமூதாயத் திற்கு இவ்வாறான நிலைமை வந்துவிடக் கூடாது என்றார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலுள்ள அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகள், விடுதிகள் நிரம்பியுள்ளதுடன், கொரோனா தொற்றினால் இறந்தவர்களின் சடலங்களை தகனம் செய்வதிலும் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர். திரு. சிறிபவானந்தராஜா அவர்கள்



13.08.2021 இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரியப்படுத்தியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகரித்துவரும் சூழ்நிலையில், குறைந் தளவான வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் தாதியர்களின் பங்களிப்புடன் நாளாந்த சிகிச்சைகள் வழங்கப்படுவதாகவும, கோப்பாய் கொரொனா சிகிச்சை நிலையத்தில் 430ற்கு அதிகமானோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் வைத்தியசாலையில் ஒட்சிசன் தேவை அதிகரித்துள்ள நிலையில் தேவையை பூர்த்தி செய்வதற்காக தினமும் வைத்தியசாலை வாகனங்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டு ஒட்சிசன் சிலிண்டர்கள் பெறப்படுவதாகின்றனர். யாழில் கொரோனா தொற்றால் இறந்தவர்களின் சடலங்களை தகனம் செய்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், யாழில் கொரோனா தொற்றால் உயிரிழப்பவர்களை, யாழ். கோம்பையன் இந்து மயானத்தில் மட்டுமே மின்தகனம் செய்யமுடியும் என்றும் ஒரு நாளில் 4 சடலங்களை மட்டுமே மின்தகனம் செய்ய முடிவதால் பல சடலங்கள் தகனம் செய்யப்படாது வைத்தியசாலையில் இருப்பதாகவும் அறிவித்தார்.

தொற்றுக்கால தேவையை உணர்ந்து யாழ். மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டுகோள் விடுத்தார்...

செஞ்சோலை படுகொலையின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

14.08.2021 இன்று மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது. இதில் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன், மாநகர சபை உறுப்பினர்களான வரதராஜன் பார்த்தீபன், சிவகாந்தன் தனுஜன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.









கனடிய செய்திகள்

இந்திய விமானங்களின் பயணத்தடையை நீடித்த கனடா!

ஆகஸ்ட் 10, 2021

இந்திய- கனடா போக்குவரத்துக்கான தடை செப்டம்பர் 21-ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலையை கருத்தில் கொண்டு உலக நாடுகள் இந்தியர்களுக்கு விமான போக்குவரத்து தடை விதித்தது.

இதனிடையே கனடா விதித்திருந்த தடை ஜூலை 21ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்த நிலையில் தற்போது மேலும் ஒரு மாதம்(செப்டம்பர் 21) வரை இந்தியாவுக்கான போக்குவரத்தை தடையை நீட்டித்துள்ளது.

இதுகுறித்து கனடா போக்குவரத்துத்துறை அமைச்சர் கூறுகையில், வரும் செப்டம்பர் 21 ஆம் திகதி வரை இந்தியர்களுக்கு பயண தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் மருத்துவ குழுவின் பரிந்துரையின்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனக் கூறினார்.

மேலும் இந்தியாவில் டெல்டா வகை பரவலின் காரணமாகவும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்தார்.



கனடிய-அமெரிக்க எல்லை இன்று முதல் திறப்பு


ஆகஸ்ட் 09, 2021

இரு தடுப்பூசிகளைப் பெற்ற அமெரிக்கர்கள் கனடாவிற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி அளிக்கப்படுவார்கள் என்று கனடிய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

கனடிய சுகதாரத்துறையினால் அனுமதிக்கப்பட்ட தடுப்பூசிகளான அஸ்டாசெனக்கா, பைசர், மொடோர்னா, மற்றும் ஜோன்சன் அண்ட் ஜோன்சன் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை முழுமையாக பெற்றவர்கள் எல்லை வழியான பயணத்தில் கனடாவிற்குள் அனுமதிக்கப் படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வாறு பிரவேசிக்கவுள்ளவர்கள் தடுப்பூசியை முழுமையாக பெற்று 14 நாட்கள் நிறைவடைந்திருக்க வேண்டும் என்பதோடு 72மணித்தியாலங்களுக்குள் பெற்ற கொரோனா பரிசோதனை சான்றிதழையும் வைத்திருக்க வேண்டும் என்றும் கனடிய சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் கனடாவிற்குள் பிரவேசிப்பதற்கு அத்தியாவசிய மற்ற தேவைகள் அற்ற அமெரிக்கர்களுக்கும் அனுமதி வழங்கப்படும் எனினும் அதுபற்றி தீர்மானங்களை அமெரிக்கர்களே எடுக்க வேண்டும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஸ்காபறோவில் வாகனம் மோதி பலியான தமிழ் சிறுவன்

யூலை 31, 2021

கடந்த சனிக் கிழமை ஸ்காபறோ நகரில் வாகனம் மோதி பலியான சிறுவன் இரண்டு வயதான ஆதித்தன் பிரசன்னாஎன அடையாளம் காணப்பட்டுள்ளார். ஸ்காபறோவில் தமிழர்களின் வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ளMajestic City கடைத் தொகுதியின் வாகனத் தரிப்பிடத்தில்Toyota 4 Runner வகைவாகனம் மோதியதில் இவ் சிறுவன் சம்பவ இடத்தில் பலியானார். இவரது இறுதிக்கிரியைகள்5.08.2021 வியாழக்கிழமை நடைபெற்றது. வாகனசாரதியான பெண் சம்பவ இடத்தில் ரொறன்ரோ காவல் துறையினரின் விசாரணைகளை எதிர் கொண்டார். இந்தச் சம்பவம் குறித்து காவல் துறையினர் இதுவரைகுற்றச் சாட்டுக்கள் எதனையும் பதியவில்லை.





மாணவர்களுக்கும் பாடசாலை ஊழியர்களுக்கும் தடுப்பூசிகள் கட்டாயமாக்கப்படாது: மாகாண கல்வி அமைச்சர்

ஆகஸ்ட் 03, 2021



தடுப்பூசி போடாத மாணவர்கள் வகுப்பறைகளில் தனி விதிகளை எதிர்கொள்ள மாட்டார்கள் என ஒன்ராறியோ மாகாண அரசாங்கம் உறுதிப்படுத்துகிறது.


மாகாண கல்வி அமைச்சர் Stephen Lecce, மாகாண தலைமை மருத்துவ அதிகாரி வைத்தியர் Kieran Moore ஆகியோர் இந்தத் தகவலை வெளியிட்டனர். செவ்வாய் கிழமை வெளியான ஒன்ராறியோ மாகாண அரசாங்கத்தின் மீண்டும் பாடசாலைக்குத் திரும்பும் திட்டம் குறித்து புதன் கிழமை இவர்கள் இருவரும் செய்தியாளர்களை சந்தித்தனர்.

நான்காவது அலையைத் தவிர்ப்பதற்கு மாகாணத்தின் சிறந்த வாய்ப்பாக தடுப்பூசிகள் உள்ள போதிலும், மாணவர்களுக்கும் பாடசாலை ஊழியர்களுக் - கும் தடுப்பூசிகள் கட்டாயமாக் கப்படாது என அவர்கள் தெரிவித்தனர். பாடசாலையின் எந்த வொரு நடவடிக்கைகளிலும் தடுப்பூசி போடப்பட்ட மாணவருக்கும் போடப்படாத மாணவருக்கும் இடையில் வித்தியாசமான அணுகுமுறையை எதிர் பார்க்கவில்லை என வைத்தியர் Kieran Moore கூறினார். எந்த மாணவர்களுக்கு தடுப்பூசி போடப்படுகிறது அல்லது போடப்பட வில்லை என்ற விபரமும் பாடசாலை ஊழியர்களிடம் பகிர்ந்து கொள்ளப்படாது எனவும் அவர் கூறினார்.அமைச்சர் Stephen Lecce, வைத்தியர் Kieran Moore இணைந்து கூடுதலாக 25 மில்லியன் டொலர் நிதியுதவியையும் புதன் கிழமை அறிவித்தனர். இது



பாடசாலைகளில் காற்றின் தரத்தை மேம்படுத்தும் என அவர்கள் கூறினர்

தமிழக செய்திகள்



தமிழ்நாகு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தும் சூழலை கண்மூடி வேடிக்கை பார்க்க முடியாது

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



ஆகஸ்ட் 04, 2021

தமிழ்நாடு மீனவர்கள் மீது சிறீலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்துவதை நிறுத்த நடவடிக்கை கோரி மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார். அதன் விவரம் வருமாறு: -

கடந்த ஆகஸ்ட் 1-ஆம் நாள் அன்று, கோடியக்கரை கடற் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட படகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் கலைச்செல்வன் என்ற மீனவர் தலையில் காயமடைந்து நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். மேலும் ஒன்பது மீனவர்களும் இந்தத் தாக்குதலில் இருந்து நல்வாய்ப்பாகத் தப்பியுள்ளனர்.

சர்வதேச சட்டங்களையும் நடைமுறைகளையும் பின் பற்றாமல், நமது மீனவர்கள் மீது வன்முறையைப் பிரயோகிப்பது கண்டனத்திற்குரியது. இத்தகைய சூழலை நாம் கண்மூடி வேடிக்கை பார்க்க முடியாது. இதற்கு உடனடியாகத் தீர்வுகாண வேண்டும்.

இந்தச் சம்பவம், தமிழ்நாட்டில் - குறிப்பாகக் கடலோரப் பகுதி களில் வசிக்கும் மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத் தியுள்ளது. நம் நாட்டு மீனவர் களின் உயிரையும், உடைமை களையும் பாதுகாக்க வேண் டியதும், இலங்கைக் கடற்படை சர்வதேச சட்டங்களைக் கடைப் பிடிப்பதையும் உறுதிசெய்ய வேண்டியது நமது கடமை யாகும்.



எனவே, இந்திய மீனவர்கள் மீது எவ்விதமான வன் முறையை நிகழ்த்தாமலும், அவர்களது வலைகளையும் படகுகளையும் சேதப்படுத் துவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

பல்லாயிரக்கணக்கான இந்திய மீனவர்களின் வாழ்க்கை யையும் வாழ்வாதாரத்தையும் பாதிக்கும் இந்தப் பிரச்சினைக்கு நீடித்த அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர் மீது துப்பாக்கிச் சூடு இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறல் கண்டிக்கத்தக்கது

அன்புமணி ராமதாஸ்

ஆகஸ்ட் 02, 2021

தமிழக மீனவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய இலங்கைக் கடற்படையினரை உடனே கைது செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து பா.ம.க. இளைஞரணி செயலாளர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

"வங்கக் கடலில் கோடியக்கரைக்கு அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். சிங்களப் படையினரின் இத்தாக்குதலில் தமிழக மீனவர் ஒருவர் படுகாயமடைந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இலங்கைக் கடற்படையினரின் இந்த அத்துமீறல் கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.

நாகப்பட்டினம் மாவட்டம் அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த மீனவர்கள், கடந்த 28-ம் தேதி வங்கக் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். கோடியக்கரையிலிருந்து தென் கிழக்கில் 5 கடல் மைல் தொலைவில் நேற்றிரவு அவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த சிங்களக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர்.

இலங்கை படையினரின் தாக்குதலில் இருந்து தப்ப தமிழக மீனவர்கள் படகுகளுக்குள் பதுங்கிக் கொண்டனர். கௌதமன் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகின் மீது சிங்களப் படையினர் நடத்திய தாக்குதலில், அதில் பதுங்கி இருந்த கலைச்செல்வன் என்ற மீனவரின் தலையை உரசிக்கொண்டு, துப்பாக்கி குண்டுசென்றது. இந்தத் தாக்குதலில் கலைச்செல்வன் படுகாயமடைந்து நாகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வங்கக் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் மீது இலங்கைப் படையினர் தாக்குதல் நடத்துவதும், துப்பாக்கிச் சூடு நடத்துவதும் அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. கடந்த இரு மாதங்களில் மட்டும் 7 முறை தமிழக மீனவர்கள் மீது சிங்களப் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத்தகைய தாக்குதல்களில் மீன்பிடி வலைகள் கிழிக்கப்பட் டதாலும், படகுகள் சேதப்படுத்தப்பட்டதாலும் தமிழக மீனவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் மட்டும் பல லட்சம் இருக்கும். ஆனாலும், சிங்களப் படையினரின் அத்து மீறல்களுக்கு மத்திய, மாநில அரசுகள் கண்டனம் தெரிவிக் காததுதான், தமிழக மீனவர்கள் மீது இதுபோன்ற தாக்குதல் களைத் தொடர்ந்து நடத்தும் துணிச்சலை சிங்களைப் படையினருக்கு அளித்துள்ளது.

இந்தியா - இலங்கை இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின்படி தமிழக மீனவர்களைத் தாக்குவதும், துப்பாக்கிச் சூடு நடத்துவதும் குற்றம் ஆகும். இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இலங்கை மீனவர்கள் எவரையும் இந்தியக் கடலோரக் காவல்படை தாக்குவ தில்லை. மாறாக, அவர்களைக் கைது செய்து, கண்ணியமாக நடத்துகிறது.

மாறாக, தமிழக மீனவர்களை இலங்கைப் படைகள் தாக்குவதும், துப்பாக்கியால் சுட்டு காயப்படுத்துவதும் இந்தியாவை சீண்டும் செயலாகும். இந்தியாவின் இறையாண்மைக்கு ஊறு விளைவிக்கக்கூடிய செயல்களை மத்திய அரசு வேடிக்கை பார்க்கக் கூடாது.

தமிழக மீனவர்களை சிங்களக் கடற்படையினர் தாக்கியதற் காக இந்தியாவுக்கான இலங்கைத் தூதரை இந்திய வெளியுறவுத் துறை அழைத்துக் கண்டனம் தெரிவிக்க வேண்டும். கேரளத்தின் அரபிக் கடல் பகுதியில் தமிழக மீனவர்கள் இருவரைச் சுட்டுக் கொன்றதற்காக இத்தாலியக் கடற்படையினரைக் கைது செய்ததைப் போன்று, இந்த விஷயத்திலும் தமிழக மீனவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சிங்களக் கடற்படையினரை உடனே கைது செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்".

நாகை மீனவர்கள் மீது சிறீலங்கா கடற்படையினர் துப்பாக்கிச்சூடு

நாகப்பட்டினம் மாவட்டம் கீச்சாங் குப்பம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து அக்கரப்பட்டியை சேர்ந்த கௌதமன் என்பரின் படகில் 10 மீனவர்கள் கடந்த 28-ந் தேதி கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர்.

மீனவர்கள் கோடியக்கரை கடற்பகுதி அருகே வலையை விரித்து மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது மீனவர்கள் படகு அருகே வந்த இலங்கை கடற்படையினர் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இலங்கை கடற்படையினரின் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் நாகை மீனவர் கலைச்செல்வன் என்பவர் காயம் அடைந்துள்ளார். காயமடைந்த மீனவர் நாகை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளார். எல்லை தாண்டி வந்ததால் துப்பாக்கியால் சுட்டதாக தகவல் வெளியாகியுள்ளன.

இலங்கை கடற்படையினர் எல்லைத்தாண்டி மீன் பிடித்தவர்களை எச்சரித்து வானை நோக்கிச் சுட்டதாகவும், அதில் குண்டு சிதறல் கலைச்செல்வன் தலையில்பட்டு காயம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

நாகப்பட்டினத்தை அடுத்த கீச்சாங்குப்பம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த 28.07.2021 -ம் தேதி அதிகாலை 1 மணியளவில் தி.மு.க. மாவட்ட செயலாளர் கௌதமன் என்பவருக்குச் சொந்தமான (IND TN 06 MM -10 24) என்ற விசைப்படகில் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர்.

இப்படகில் அக்கரைப்பேட்டையைச் பத்து நபர்கள் இருந் தனர். இவர்கள் நாகை மாவட்டம் கோடியக்கரைக்கு தென்கிழக்கே 5 நாட்டிக்கல் தூரத்தில் நேற்று 01.08.2021 -ம் தேதி மாலை 4.30 மணி அளவில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கை கடற் படையினர், எல்லை தாண்டி வந்து மீன் பிடித்ததாக எச்சரித்து மேற்படி படகில் இருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டதாகவும், இதில் கலைச்செல்வன் என்ற மீனவரின் இடதுபக்க தலையில் காயம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

உடனடியாக மற்ற மீனவர்கள் கலைச்செல்வனை கீச்சாங்குப்பம் மீன்பிடி துறைமுகத்திற்கு அழைத்து வந்து, அங்கிருந்து ஆட்டோ மூலம் நாகப்பட்டினம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தனர். இன்று (02.08. 2021)அதிகாலை 02.30 மணிக்கு கலைச்செல்வன் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மற்றவர் களுக்கு காயம் எதுவும் இல்லை.

இதனிடையே இலங்கை கடற்படையினர் எல்லைத் தாண்டி மீன் பிடித்தவர்களை எச்சரித்து வானை நோக்கிச் சுட்டதாகவும், அதில் குண்டு சிதறல் கலைச்செல்வன் தலையில்பட்டு காயம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.



அனைத்து சாதியினர் அர்ச்சகராவதை எதிர்ப்போரை உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு முறியடிக்க வேண்டும்!



தெய்வத் தமிழ்ப் பேரவை ஒருங்கிணைப்பாளர் பெ.மணியரசன் அறிக்கை!

கடந்த 6.7.2021 அன்று இந்து சமய அறநிலையத் துறையைச் சேர்ந்த பல்வேறு கோயில்களின் நிர்வாக அதிகாரிகள் அந்தந்த கோயிலுக்குத் தேவையான அர்ச்சகர், ஓதுவார், இசைக் கலைஞர்கள், தட்டச்சர்கள், சமயல்காரர்கள் உட்பட பல்வேறு பணிகளுக்குத் தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்குமாறு தனித்தனியே விளம்பரங்கள் கொடுத்திருந்தனர். விண்ணப்பங்கள் வந்து சேர்வதற்கான கடைசி நாள் 7.8.2021 ஆகும். விளம்பரங்களை எதிர்த்தும் தடைசெய்யக்கோரியும் அனைத்திந்திய ஆதி சைவ சிவாச்சாரியார்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ்.ஆர்.முத்துக் குமார் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதி அனிதா சுமந்த் அவர்களிடம் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு மனுவில், முத்துக்குமார் தவறான தகவல்களைத் தந்துள்ளார்.

அர்ச்சகர் பணிக்குக் குறைந்தது 10ஆம் வகுப்புத் தேர்ச்சி கோரப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஆனால் அறநிலையத்துறை அதிகாரிகள் தங்கள் கையொப்பமிட்டு தனித்தனியே கொடுத்துள்ள விளம்பரங்களில் அர்ச்சகர் பணிக்குத் தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும் என்றும் வேத ஆகம பயிற்சிப் பள்ளிகளில் படித்துச் சான்று பெற்றிருக்க வேண்டும் என்றும், வேத மந்திரங்கள் நன்கு உச்சரிக்கத் தெரிந்திருக்க வேண்டும் என்றும், 18 வயதில் இருந்து 35 வயதிற்குள் இருக்க வேண்டும் என்றும் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

மேற்படி விளம்பரங்களில் 10 ஆம் வகுப்புத் தகுதி தட்டச் சர் போன்ற பணிகளுக்கு மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. வேத ஆகமப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை மேற்படி விளம்பரங்களில் கூற வில்லை என்றும் மனுதாரர் தவறாக குற்றம் சாட்டியுள் ளார். இந்த குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம் பானவை குறிப்பிட்ட சாதியினரைத் தவிர இந்து மதத்தில் பயிற்சியும் தகுதியும் உள்ள பிற சாதியினர் அர்ச்சகர் ஆகக் கூடாது என்று தடை கோருவது, இந்திய அரசமைப்புச் சட்ட உறுப்பு 14 வழங்கும் சமத்துவத் துக்கு எதிரானதாகும். அதுமட்டுமின்றி உச்ச நீதிமன்றம் 1972 ஆம் ஆண்டு சேஷம்மாள் வழக்கில் அளித்த தீர்ப்பிலும் 16.12.2015 அன்று மீண்டும் உச்சநீதிமன்றம் தமிழ்நாடு அரசின் அனைத்து சாதியினர் அர்ச்சகராகும் ஆணை குறித்த வழக்கில் அளித்த தீர்ப்பிலும் அந்தந்த கோயிலுக்கு உரிய இந்து சமயப்பிரிவில் பிறந்தவர்கள் உரிய பயிற்சி பெற்றிருந் தால், சாதி நிபந்தனையின்றி அனைவரும் அர்ச்சகர் ராகலாம் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறை அன்னைத் தமிழில் அர்ச்சனை செய்வதையும், அனைத்து சாதியினரை அர்ச்சகராக்குவதையும் தடை செய்யக்கோரி ஸ்ரீதரன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் சில நாட்களுக்கு முன் இருநீதிபதிகள் கொண்ட அமர்வில் மனுதாக்கல் செய்து அந்த மனுவை ஏற்றுக் கொண்டு உயர்நீதிமன்றம் விசாரனைக்கு தேதி குறித்துள்ளது.

ஆதி சைவ சிவாச்சாரியார்கள் சங்க சார்பில் போட்டுள்ள இந்த புதிய மனு தவறானத் தகவல்களை கொண்டிருப் பதால் இதை விசாரணைக்கு ஏற்கக் கூடாது என்று தமிழ்நாடு அரசின் வழங்கறிஞர் வாதாடியிருக்க வேண்டும். மேலும் இதே கருத்துகளைக் கொண்ட ஒரு வழக்கு இதே உயர்நீதிமன்றத்தில் இருநீதிபதிகள் விசாரணையில் உள்ள நிலையில் இதே காரணங் களுக்காக இன்னொரு வழக்கை தனி நீதிபதி ஏற்க கூடாது என்றும் தமிழ்நாடு அரசின் வழக்கறிஞர் வாதாடியிருக்க வேண்டும். ஆனால் அவர் வழக்கு விசாரணையை வேறொரு தேதிக்கு ஒத்தி வைக் குமாறு கேட்டுள்ளார். தனி நீதிபதியும் 25.8.2021 தேதிக்கு இவ்வழக்கு விசாரணையை ஒத்திவைத் துள்ளார்.

தமிழ்நாடு அரசு போர்க்கால அவசரத்துடன் இவ்வழக் குகளை கவனித்து தனது வழக்கறிஞர்களை சரியாக வழி நடத்த வேண்டும். அதன் முதல் கட்டமாக சிவாச்சாரியார் சங்கத்தின் பொதுச்செயலாளர் முத்து குமார் போட்ட வழக்கைத் தனி நீதிபதி உடனடியாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் இரு நீதிபதிகள் அமர்வில் ஏற்கெனவே உள்ள வழக்கில் அவர் சேர்ந்து கொள்ளலாம் என்றும் கோரிக்கை வைத்து உயர் நீதிமன்றத்தை விரைவாகத் தமிழ்நாடு அரசு அணுக வேண்டும்.

1972 மற்றும் 2015 உச்சநீதிமன்ற தீர்ப்புகள் கூறியுள்ள படி தகுதியுள்ள அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கலாம் என்பதை நிலைநாட்டிச் செயல் படுத்த வேண்டும் என்று தெய்வத் தமிழ்ப்பேரவை சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

“தமிழ் அர்ச்சனையைக் கட்டாயமாக்க வேண்டும்!”

தெய்வத் தமிழ்ப் பேரவையின் செயற்குழுக் கூட்டம், இன்று (05.08.2021) காலை - குடந்தை வட்டம் - திரு வேரகம் (சாமிமலை) - சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு, அருள்திரு. இறைநெறி இமயவன் அவர்கள் தலைமை தாங்கினார். தெய்வத் தமிழ்ப் பேரவை - ஒருங்கிணைப்பாளர் ஐயா பெ. மணியரசன் முன்னிலை வகித்தார். சித்தர் மூங்கிலடியார் எனும் பொன்னுச்சாமி அடிகளார் (பதிணென்சித்தர் கருவூறார் சித்தர் பீடம், சென்னை), அருட்திரு. குச்சனூர் கிழார் (வடகுரு மடாதிபதி, இராசயோக சித்தர் பீடம், குச்சனூர், தேனி மாவட்டம்), அருட்திரு. சிம்மம் சத்தியபாமா அம்மையார் (நிறுவனர் - சத்தியபாமா அறக்கட்டளை, மேச்சேரி, சேலம்), அருட்திரு. சிவவடிவேலன் (செந்தமிழ் ஆகம அந்தணர், சென்னை), அருட்திரு. ஆசீவக சுடரொளி (ஆசீவகம் - சமய நிறுவனம், திருநெல்வேலி), அருட்திரு. வை. மோகனசுந்தரம் சுவாமிகள் (தெய்வத்தமிழ் திருமுறை வழிபாட்டு மன்றம், திருவில்லிப்புத்தூர்), அருட்திரு. க. இராசமாணிக்கம் (வள்ளலார் மன்றம், தஞ்சை), அருட்திரு. மு. சுந்தரராசு (வள்ளலார் மன்றம், புதுக்குடி, தஞ்சை மாவட்டம்), முனைவர் வே. சுப்பிரமணிய சிவா (வள்ளலார் ஆய்வாளர், சிதம்பரம்), வழக்கறிஞர் ஆ. சுபாசு சந்திரபோஸ் (புதுச்சேரி), அருட்திரு. பொன்னுச்சாமி அடிகளார் (வத்தலகுண்டு, தேனி மாவட்டம்), பொறியாளர் க. முத்துக்குமாரசாமி (திருச்சி), திரு. கி. வெங்கட்ராமன் (பொதுச்செயலாளர், தமிழ்த்தேசியப் பேரியக்கம்), திரு. க. விடுதலைச்சுடர் (தலைமைச்செயற்குழு உறுப்பினர், தமிழ்த்தேசியப் பேரியக்கம்) உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தீர்மானங்கள்

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறை வேற்றப்பட்டன.

1. தமிழ்நாட்டிலுள்ள இந்து சமய அறநிலையத்துறையின் கோயில்களில் தமிழைக் கட்டாய அர்ச்சனை மொழியாக - பூசை மொழியாக அறிவித்து தமிழ்நாடு அரசு புதிய சட்டமியற்ற வேண்டும். கடந்த காலங்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என சுற்றறிக்கையாகவும், அரசாணையாகவும் அறிவித்தார்கள். ஆனால், அது முறையாக செயல்பாட்டுக்கு வரவில்லை. எனவே, அந்தப் படிப்பினையை கற்றுக் கொண்டு, தமிழைக் கட்டாய அர்ச்சனை மொழியாக்கி புதிய சட்டம் இயற்ற வேண்டும்.

தமிழில் சிவ வழிபாடு, திருமால் வழிபாடு, சித்தர் வழிபாடு, நாட்டுப்புற தெய்வங்கள் வழிபாடு ஆகியவற்றை மேற் கொள்ள தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறையே புத்தகங்கள் வெளியிட்டுள்ளது. அவற்றை



மேலும் செழுமைப்படுத்தி, அனைத்துக் கோயில்களிலும் தமிழை அர்ச்சனை மொழியாக்க வேண்டும்.

யாராவது விரும்பிக் கேட்டால் மட்டுமே சமற்கிருத மொழியில் அர்ச்சனை செய்யும் நடைமுறையை செயல் படுத்த வேண்டும். இயல்பான அர்ச்சனை மொழியாகத் தமிழ் மொழியே இருக்க வேண்டும்.

2. தமிழ்நாட்டின் திருக்கோயில்களில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்கள் ஆவதற்கு ஆகமங்கள் தடை யில்லை என 2015 திசம்பர் 16ஆம் நாளன்று வழங்கிய தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் கூறிவிட்டது. இந்த மொழியில் தான் அர்ச்சனை நடக்க வேண்டும் என்றோ, இந்த சாதியில் பிறந்தவர் தான் அர்ச்சகர் ஆக முடியும் என்றோ ஆகமங்கள் நிபந்தனை விதிக்கவில்லை என அத்தீர்ப்பு தெளிவுபடுத்திவிட்டது.

எனவே, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கொரு அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியை தமிழ் நாடு அரசு தொடங்கி, அப்பள்ளிகளில் தமிழ் வழிபாட்டுப் பயிற்சி அளிக்க வேண்டும். ஏற்கெனவே அர்ச்சகர் பயிற்சி பெற்ற 200 பேரை அர்ச்சகர்களாக பணியமர்த்த வேண்டும்.

3. தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறை தமிழில் அர்ச்சனை நடத்தவும், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக்குவதையும் அறிவித்ததை எதிர்த்து ஒரு தனிநபர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார். அவ்வழக்கில் தெய்வத் தமிழ்ப் பேரவை தன்னையும் இணைத்துக் கொண்டு வழக்காடி, அவரின் மனுவை தள்ளுபடி செய்ய உயர் நீதிமன்றத்தை அணு குவது என்று இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

4. தமிழரின் சிவநெறிக்குப் புறம்பாக - தமிழ்ச் சமய வழிபாட்டுக்கு எதிராக - ஆன்மிகத்தையே கள்ள வாணிகம் போல் நடத்திக் கொண்டிருக்கும் ஜக்கி வாசுதேவின் ஈஷா யோகா மையத்தின் மீது உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு அமைத்து குற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஈஷா யோகா மையத்தை தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் கொண்டுவந்து, சிவ நெறிப்படி வழிபாடு நடத்த ஆவனசெய்ய வேண்டும்.

5. இந்து சமய அறநிலையத்துறையில் காணப்படும் குறைபாடுகளைக் கண்டறியவும், அவற்றைக் களையவும் உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஆணையம் அமைத்து பரிந்துரை பெற்று, தமிழ்நாடு அரசு அதனடிப்படையில் விரைவாக செயல்பட வேண்டும்.

தெய்வத் தமிழ்ப் பேரவை



ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து இலங்கை விடுதலை பெற்ற கணம் முதல் அங்கு வசித்து வரும் பூர்வக்குடி மக்களான ஈழத்தமிழர்கள், சிங்கள பௌத்த பேரின வாதத்தால் இரண்டாம்தர குடிமக்களாகவே நடத்தப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் “தனித் தமிழீழமே ஒரே தீர்வு” என்ற புள்ளியை நோக்கி நகர்ந்து வந்த தருணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சி மக்களிடையே ஒரு மாபெரும் நம்பிக்கையை வளர்த்து இருந்தது. ஈழத் தமிழர்களின் ஒருமித்த குரல் கண்டு பொறுக்க இயலாத சிங்களப் பேரினவாத அரசின் இராணுவம், விடுதலைப் புலிகளின் மீது தாக்குதல் நடத்துவதாக கூறி அப்பாவித் தமிழர்கள் கூடியிருக்கும் இடத்தில் வான்வழி மற்றும் தரைவழித் தாக்குதல் நடத்துவதை வாடிக்கையாக கொண்டிருந்ததும், அதை சர்வதேச சமூகம் கண்டும் காணாமல் போவதும் தமிழீழ நிலப்பரப்பில் இயல்பாக நடக்கின்ற ஒன்றாகிப் போனது.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள ‘செஞ்சோலை’ சிறுமிகள் இல்ல வளாகத்தில் 2006 ஆம் ஆண்டு சிங்கள பௌத்த இனவெறி அரசின் வான்படை தொடுத்த வான்வழித் தாக்குதலினால் 61 மாணவிகள் உடனடியாக அங்கே படுகொலை செய்யப்பட்டனர். மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவிகள் காயமடைந்தனர். ஆனால் சிங்கள பௌத்த இனவெறி அரசு ‘அது மாணவிகள் விடுதி அல்ல, விடுதலைப்புலிகளின் பயிற்சி வளாகம்’ என்று கூறி தனது கொலை பாதக செயலை நியாயப்படுத்த முயன்றது. ஆனால் அங்கு சென்ற மருத்துவர் குழுவும், ஐநாவின் யுனிசெஃப் குழுவும் படுகொலை செய்யப்பட் டவர்கள் அப்பாவி மாணவிகளே என்று பறைசாற்றினர்.

சிங்கள அரசு ஈழத்தமிழர்கள் மீது தாக்குதல் தொடுப்பது புதிதல்ல என்பதும், அதில் பல முறை சிறு குழந்தை களும், மாணவச் செல்வங்களும் படுகொலை செய்யப்பட் டிருக்கின்றனர் என்பதுவும் நாம் அறிந்ததுதான் என்றாலும், போராளிகளுக்கு எவ்வித தொடர்பும் இல்லாத செஞ்சோலை மாணவிகள் வளாகம், அப்பாவி பெண் குழந்தைகள் தங்கி இருக்கும் இடம் என்று தெரிந்தும் குண்டு வீசி தனது நூற்றாண்டுகால இனப்படுகொலையை தொடர்ந்து செய்தது சிங்கள பௌத்த இனவெறி அரசு.

இத்தகைய சர்வதேச போர் விதிகளுக்கு புறம்பான தாக்குதல்களும், மனித தன்மையற்ற மன நிலையுமே தமிழீழ விடுதலைப் புலிகள் தனித் தமிழீழமே ஒரே தீர்வு என்று கடைசி வரை உறுதியாக நின்றதற்கு காரணம் ஆகும். தமிழீழத்தின் நூற்றாண்டுகால போராட்டத்தில் செஞ்சோலை உள்ளிட்ட பல்வேறு வரலாற்றில் மறக்க முடியாத படுகொலை சம்பவங்களும், இறுதிப்போரில் இனப்படுகொலை செய்யப்பட்ட ஒன்றரை லட்சம் தமிழர்களின் உயிர்களே அதனை உறுதி செய்யும் சான்றாக விளங்குகிறது.

இலங்கை நிகழ்த்திய இனப் படுகொலை தொடர்பான சர்வதேச விசாரணையே இழந்த உயிர்களுக்கு ஒரே தீர்வாக அமைய முடியும். இன்றைய தினத்தில் செஞ்சோலை மாணவிகள் வளாகத்தில் உயிரிழந்த அத்தனை மாணவ கண்மணிகள் அனைவரையும் மே பதினேழு இயக்கம் நினைவு கூர்ந்து மரியாதை செலுத்துகிறது.



மறக்கமுடியாத
தமிழீழ விடுதலை மாமறவர் மதுரைஆதீனம்.
மறைந்தாரே. தமிழீழ மக்களின்.
ஆழ்ந்த இரங்கலைக் கண்ணீர் மலர்களாய்
அவர் திருவடிகளில் வைக்கிறேன்.
– காசி ஆனந்தன் –

அடுத்த 9 வருடங்களில் உலக வெப்ப நிலை 1.5 டிகிரி செல்சியஸ் உயரும்

ஐ.நா. பருவநிலை மாற்றத்திற்கான குழு

ஆகஸ்ட் 09, 2021

ஜெனீவா: பருவநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகளின் அரசுகளுக்கிடையிலான குழு, சமர்ப்பித்த அறிக்கை மனித குலத்திற்கு பல எச்சரிக்கைகளை பிறப்பிப்பது போல அமைந்துள்ளது.



பருவநிலை மாற்றம் ஏற்கனவே பூமியன் ஒவ்வொரு மூலையையும் தொட்டுவிட்டது. இது பல நூற்றாண்டு மனித அனுபவத்தை தொடர்ந்து மாற்றியமைக்க உள்ளது.

வெப்பமயமாதல் அதிகரிக்கும் போது அதன் தாக்கங்கள் தீவிரமடையும், 1.5 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் நினைத்ததை விட முன்பாகவே உயரும் வாய்ப்பு உள்ளது என்று பருவநிலை மாற்றம் குறித்த விஞ்ஞானி கள் குழு அறிக்கை வெளியிட்டுள்ளது. 2030களின் முற்பகுதியில் பூமி வெப்ப நிலை கூடி, 1.5 டிக்ரி செல்சியஸ் வெப் பமயமாதல் வரம்பை எட்டும் என்கிறது இந்த அறிக்கை. அதாவது நினைத்ததைவிட 10 வருடங்கள் முன்பாகவே இந்த நிலையை எட்ட உள்ளதாம்.

தொடர்ச்சியான கடல் மட்ட உயர்வு போன்றவை இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஐநா பொதுச்செயலாளர் அன்டோனியோ குடெரெஸ் ஐபிசிசியின் இந்த அறிக்கையை, ”மனிதகுலத்திற்கான கோட் ரெட் குறியீடு” என்று வர்ணித்துள்ளார்.

இந்த அறிக்கையிலுள்ள சில முக்கியம்சங்கள்: உலகம் வேகமாக வெப்பமடைகிறது. உலகளாவிய வெப்பம் 2030 ஆம் ஆண்டில் 1.5 டிகிரி செல்சியஸை எட்டும் பாதையில் உள்ளது. இது 2018 இல் திட்டமிடப்பட்டதை விட 10 ஆண்டுகள் முன்பாகவே நடைபெற உள்ளது.

கடல் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. 1901-1971 க்கு இடையில் சராசரியாக ஆண்டுக்கு 1.3 மிமீ என்ற அளவில் கடல் மட்டம் உயர்ந்தது இருந்தது. இது 2006-2018 க்கு இடையில் 3.7 மிமீ/வருடம் என்ற அளவுக்கு கூடியுள்ளது. அதாவது இரண்டு மடங்கை விட வேகமாக கடல் மட்டம் உயர்ந்து வருகிறது. உலக சராசரி கடல் மட்டம் 1901 மற்றும் 2018 க்கு இடையில் 0.20 (0.15 முதல் 0.25) மீ அதிகரித்துள்ளது.

1950களில் இருந்து பெரும்பாலான நிலப்பகுதிகளில் வெப்ப உச்சநிலைகள் (வெப்ப அலைகள் உட்பட) அடிக்கடி நடக்கின்றன. அதே நேரத்தில் குளிர் தீவிரங்கள் (குளிர் அலைகள் உட்பட) குறைவாக நடக்கின்றன.

மனிதனால்தான் வெப்பநிலை இந்த அளவுக்கு மாறியுள் ளது.

நகரங்கள் புவி வெப்பமடைதலின் ஹாட்ஸ் பாட்களாக இருக்கின்றன, ஏனெனில் வெப்பத்தை உறிஞ்சி வைக்கும் நீர் நிலைகள், தாவரங்கள் போன்றவை நகரங்களில் குறைவாக உள்ளன.

10 வருடங்களுக்கு ஒரு முறை மற்றும் 50 வருடங்களுக்கு ஒரு முறை கடுமையான வெப்பம், கனமழை மற்றும் வறட்சி நிகழ்வுகள் இனி, தீவிரமாக மாறும்.

தீவர வானிலை நிகழ்வுகள் அதிக அளவு நடைபெறும். தீவர வெப்ப அலை மற்றும் வறட்சி போன்றவை இருக்கலாம்.

உலக செய்திகள்

அமெரிக்க தூதுவர் தவறாக வழிநடத்தும் அறிக்கைகளை வெளியிடுகின்றார்

- கொழும்பு போர்ட் சிட்டி நிறுவனம்



ஆகஸ்ட் 05, 2021

சிறீலங்காவிற்கான அமெரிக்க தூதுவர் தவறாக வழிநடத்தும் அறிக்கையை வெளியிட்டுள்ளார் என கொழும்பு துறைமுக நகர நிறுவனம் (சிஎச்ஈசி) குற்றம் சாட்டியுள்ளது.

சமீபத்தில் ஊடகவியலாளர்களுடனான கருத்துப் பரிமாற்றத்தின் போது சிறீலங்காவிற்கான அமெரிக்க தூதுவர் அலைனா டெப்பிளிட்ஸ் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டத்தில் ஈடுபட்டுள்ள நிறுவன மொன்று அமெரிக்காவின் தடைப்பட்டியலில் உள்ளது இதன் காரணமாக அந்த நிறுவனத்துடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து எச்சரிக்கையாகயிருக்கவேண்டும் என தெரிவித்திருந்தார்.

இது குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள கொழும்பு துறை முகநகர நிறுவனம்-சிஎச்ஈசி-நாங்களோ அல்லது எங்களின் பிரதான நிறுவனமான சிசிசிசியோ அமெரிக்காவின் 2020 ம் ஆண்டு தடைபட்டியலில் இடம்பெற்றிருக்க வில்லை என குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவினால் பொருளாதார தடை விதிக்கப்பட்டுள்ள சீனா கொமினிகேசன் கொன்ஸ்டிரக்சன் நிறுவனத்தின் துணை நிறுவனங்கள் எவற்றுடனும் நாங்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என சிஎச்ஈசி போர்ட் சிட்டி கொழும்பு தெரிவித்துள்ளது.

தென்சீனாவில் மண்மீட்டாக்கப்பணிகளில் ஈடுபட்ட நிறுவனங்களையே அமெரிக்கா தடை செய்துள்ளது, கொழும்பு துறைமுக நகரத்திற்காக சிஎச்ஈசி போர்ட் சிட்டி கொழும்பு முன்னெடுத்த மண்மீட்டாக்க நடவடிக்கைகள் முற்றிலும் வேறு நிறுவனங்களாலேயே முன்னெடுக்கப்பட்டன எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகரம் குறித்த பக்கச்சார்பான புரிந்துணர்வுடன் அலைனா பி டெப்பிளிட்ஸ் வெளியிட்ட கருத்துக்களை தெளிவுபடுத்துவதே தங்களின் நோக்கம் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்ட விவகாரத்திலிருந்து முன்னாள் சிறீலங்கா கடற்படை தளபதி விடுவிப்பு

"பாதிக்கப்பட்ட மக்களிற்கான நீதியை மேலும் தாமதப்படுத்தும்" – சர்வதேச மன்னிப்புச்சபை

AMNESTY INTERNATIONAL

ஆகஸ்ட் 05, 2021

பல்லாயிரக்கணக்கான மக்கள் பல தசாப்தகாலமாக "வலுக்கட்டாயமாக காணாமல் போயுள்ளனர்" எனவும், உலகில் வலிந்துகாணாமலாக்கப்பட்டோர் எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தில் இலங்கை உள்ளதென்றும் சர்வதேச மன்னிப்புச்சபை குறிப்பிட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு மற்றும் 2009 ஆம் ஆண்டில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில், முன்னாள் சிறீலங்கா கடற்படைத் தளபதி வசந்த கரணாகொட மீது குற்றச்சாட்டு சுமத்தப் போவதில்லை என்று சிறீலங்கா சட்டமா அதிபர் திணைக்களம் புதன் கிழமை முடிவு செய்த பிறகு சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான மன்னிப்புச்சபை இந்த அவதானிப்புகளை வெளியிட்டிருக்கிறது.

11 தமிழர்கள் வலுக்கட்டாயமாக காணாமல் போனதன் பின்னணியில் சிறீலங்கா கடற்படை இருப்பதாக குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருந்தது. பல தசாப்தங்களாக பல்லாயிரக்கணக்கான மக்கள் வலுக்கட்டாயமாக காணாமல் போன நிலையில், உலகின் இரண்டாவது அதிக எண்ணிக்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் எண்ணிக்கையைகொண்டதாக இலங்கை தீவு உள்ளது.

இந்த வழக்கு சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களுக்கு நீதி வழங்க சிறீலங்கா அதிகாரிகளுக்கு ஒரு வாய்ப்பாக இருந்தது. உதவி மற்றும் ஊக்கமளிப்பது மற்றும் கட்டளை பொறுப்பின் கீழ் சம்பந்தப்பட்டவை உட்பட குற்ற நடவடிக்கைக்கு பொறுப்பு என்று சந்தேகிக்கப்படுபவை, விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன, "என்று சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசிய-பசிபிக்பிராந்தியத்திற்கான பணிப்பாளர் யாமினி மிஸ்ரா கூறியுள்ளார்.

"இந்த வழக்கு ஏற்கனவே தடைகளால் சூழப்பட்டிருக்கிறது, இன்றைய தீர்மானம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி சென்றடைவதைமேலும் பின்னடைவுக் காணவைக்கின்றது. சட்டமா அதிபர் திணைக்களம் அதன் தீர்மானத்திற்கான காரணங்களை விளக்க வேண்டும், மற்றும் சிறீலங்கா அதிகாரிகள் வலிந்து காணாமலாக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உண்மை, நீதி, இழப்பீடுகளை வழங்க வேண்டும், "என்றும் அவர் கூறியுள்ளார். "கடற்படை 11" வழக்கு 2008-2009 இல் 11 தமிழ் இளைஞர்கள் வலிந்து



காணாமலாக்கப்பட்டதை குறிக்கிறது.

மன்னிப்புச்சபையின் அறிக்கையின்பிரகாரம், 2018ஆகஸ்ட் டில் குற்றவியல் விசாரணை திணைக்களம் சிஐடி) முக்கிய சந்தேகநபராக "நேவி சம்பத்" என்ற லெப்டினன்ட் கொ கமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சியை கைது செய்தது. அப்போதைய பாதுகாப்பு தலைமை அதிகாரி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன முக்கிய சந்தேக நபர்களில் ஒருவரை பாதுகாத்ததாக சிஐடி குற்றம் சாட்டியது, மேலும் அவரை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது என்று சர்வதேசமன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும் மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private 1st Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

MORTGAGE IN ANY SITUATION

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC

www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ(Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843



எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4

Manaja

manajaskitchen.ca

MANAJA'S KITCHEN

A Fusion of Indian & Sri Lankan Cuisine



மணம், சுவை கொண்ட அறுசுவை உணவுகளை
நிபுணத்துவத்துடன் தயார் செய்து விநியோகிப்பவர்கள்.

Take Out
Birthy Parties
Picnic / Get Together
or Office Parties
Backyard Dosa Party



அனைத்து தாயக சைவ
மற்றும் அசைவ உணவுகளுக்கு
உங்கள் விருப்பப்படி சிறந்த முறையில் தயாரித்த
அறுசுவை உணவுகளை செய்து குறிப்பிட்ட
நேரத்தில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
அழையுங்கள்

FREE Delivery for orders over $150 in GTA

75 Williamson Dr., W, Ajax ON L1T 4Y4

905.427.8263



BOROS CANADIAN
PAPER CONVERTING INC.




Alan Maniam
Director

647 299 2450

235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3

boroscanadianpaper@gmail.com



மாமன்னன் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட பிரகதீஸ்வரர் கோவிலை படத்தில் காணலாம்.

வரலாற்றில் அழியாத புகழ்கொண்ட மாமன்னன் ராஜேந்திர சோழன்

மீன்சுருட்டி, ஆக.12-

வரலாற்றில் அழியாத புகழ்கொண்டவராக மாமன்னன் ராஜேந்திரன் சோழன் திகழ்கிறார். அது பற்றிய விவரம் வருமாறு:-



பிரகதீஸ்வரர் கோவில் நுழைவு வாயிலில் வைக்கப்பட்டிருந்த மாமன்னன் ராஜேந்திர சோழனின் உருவப்படம்.

கங்கைக்கரை வரை வெற்றிக்கொடி

அரியலூர் மாவட்டம் மீன்சுருட்டி அருகே கங்கை கொண்ட சோழபுரத்தில் சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமையான பிரகதீஸ்வரர் கோவில் உள்ளது. இந்த கோவில் சோழப்பேரரசர் ராஜராஜ சோழனின் மகனான முதலாம் ராஜேந்திர சோழனால் கி.பி. 1,012 முதல் 1,044 வரையிலான ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டது ஆகும். தந்தையை போல் அழியாத கீர்த்தி பெற்ற மாமன்னன் ராஜேந்திர சோழன், கங்கை நதி வரை படை அனுப்பி வெற்றிக்கொடி நாட்டியவர்.

இதைத்தொடர்ந்தே இப்பகுதி கங்கை கொண்ட சோழபுரம் என்று பெயர் பெற்றதாகவும், கங்கை நதி நீரை கொண்டு வந்து பிரகதீஸ்வரர் கோவிலுக்கு கும்பாபிஷேகம் செய்யப்பட்டதாகவும் வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும் ராஜேந்திர சோழன் தனது ஆயுட்காலத்தில் சுமார் 65 ஆண்டுகளை போர்க்களத்திலேயே கழித்துள்ளார்.

கடல் கடந்தும் சோழ சாம்ராஜ்ஜியம்

சோழ சாம்ராஜ்ஜியத்தை விரிவுபடுத்தியதில் இவருக்கு பெரும் பங்கு உண்டு. இந்தியாவின் பல்வேறு பகுதிகளை ஆட்சி செய்த ஒரே மன்னன் ராஜேந்திர சோழன் மட்டுமே. மேலும் கடல் கடந்து இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, ஜாவா, மியான்மர், தாய்லாந்து, கம்போடியா போன்ற உலகின் மூன்றில் இரண்டு பங்கு நாடுகளை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்து, உலகின் கடல் வாணிபத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது ராஜேந்திர சோழன் மட்டுமே என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

'கடாரம் கொண்டான்' உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பெயர்களும் அவருக்கு உண்டு. ராஜேந்திர சோழன் மற்றும் அவருக்கு பின் 265 ஆண்டுகள் கங்கை கொண்ட சோழபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்யப்பட்டுள்ளதாக வரலாற்றுச் சுவடுகள் தெரிவிக்கின்றன.

சிறப்புமிக்க பிரகதீஸ்வரர் கோவில்

தஞ்சை பெரிய கோவிலை போன்று நிலைத்த புகழுடன் திகழும் வகையில் கலைநயத்துடன் மிக பிரமாண்டமாக பிரகதீஸ்வரர் கோவிலை ராஜேந்திர சோழன் கட்டியுள்ளார். அக்கால போர் கைதிகள் மற்றும் வீரர்களை கொண்டு 4½ ஏக்கர் பரப்பளவில் இந்த கோவில் அமைக்கப்பட்டுள்ளது. 13½ அடி உயரமும், 62 அடி சுற்றளவும் கொண்ட ஒரே கல்லில் ஆன மிகப்பெரிய சிவலிங்கம் தமிழகத்திலேயே இந்த கோவிலில்தான் உள்ளது.

இங்குள்ள துர்க்கை அம்மன் ராஜேந்திர சோழனின் குலதெய்வம் ஆகும். மிக அபூர்வ வடிவில் அந்த சிலை வடிவமைக்கப்பட்டு உள்ளது. ராஜேந்திர சோழன் போருக்கு சென்று திரும்பியவுடன், கோவிலுக்கு சென்று துர்க்கை அம்மனை வழிபாடு செய்த பின்னரே சிவனை வணங்குவார் என்று சொல்லப்படுவது உண்டு. ஒரே கல்லில் ஆன நவக்கிரக பீடமும் இக்கோவிலின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

கொண்டாட்டம்

இந்நிலையில் அழியாப்புகழ் பெற்ற மாமன்னர் ராஜேந்திர சோழனின் பிறந்த நாளான ஆடி திருவாதிரை நாளை அரசு விழாவாக கொண்டாட வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வந்தனர். இதையடுத்து ராஜேந்திர சோழனின் பிறந்த நாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று அறிவித்தார்.

இந்த அறிவிப்பை தொடர்ந்து கங்கை கொண்ட சோழபுரம் மேம்பாட்டுக் குழுமம் மற்றும் பொது மக்கள் சார்பில் கங்கை கொண்ட சோழபுரம் உள்ளிட்ட பகுதிகளில் பட்டாசு வெடித்து, இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.



சிவஶ்ரீ சிவ.ஜனா குருக்கள்

Shiva Sri S.JANARTHANA KURUKKAL

Priest (JANA IYA)

உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து மங்கள வைபவங்களையும் ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி வைப்பதற்கு அழையுங்கள்

Tel: 647.449.6542

Email: aarthanan@hotmail.com

aarthananyathu@hotmail.com

AIR CONDITONER INSTALLATION SALE

High -Efficiency Air Conditoner Starting From $1,899

HIGH EFFICIENCY HEATING & COOLING AIR SOLUTIONS

24h EMERGENCY SERVICES

A/C Leak Check & Refilling the Gas

Repair, Service & Installation

ENERGY STAR Ductless Air Conditions

Is Your Home Keeping You COOL?



Carrier, Lennox, Comfortstar

Trane, Ameristar, Goodman

FREE 10 Years Parts Warranty

Furnance, Air Conditioner,Hot Water Tank, Tankless Water Heater, HRV

Fireplace, Attic Insulation, Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer

Call Now for FREE ESTIMATE S.Kumar 416-993-8001





1977 இல் நடந்த இனப்படுகொலைகள்

1974 உலகத் தமிழ் மாநாட்டில் 09 பேர் உயிரிழந்த நிகழ்ச்சிக்குப் பின் இலங்கை வரலாற்றில் குறிப்பிடத்தக்க திருப்பங்களில் சில நிகழ்ந்தன. 1977 கலவரத்தக்கு முன் அவற்றை ஒருபார்வை பார்த்துக்கொள்வது நல்லது.

சிரிமாவோ ஆட்சி, சிங்கள வெறியர்களை முன்னிறுத்தித் தமிழர்களை ஒடுக்கிய ஆட்சி — தமிழர்களை வெளியேற்றிய ஆட்சி அவரது ஆட்சிக் காலத்தில் 1976 இல் புத்தளம் எனும் இடத்தில் மிகப்பெரிய சிங்கள — தமிழ் முஸ்லீம் கலவரம் நிகழ்ந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டுகிறேன். சிரிமாவோ ஆட்சி பவுத்தர்களைத் தவிர வேறு எந்த மதத்தினரையும் இலங்கையில் இருந்தே ஒழித்து விடுவது என்று கொண்ட கொள்கையின் வெளிப்பாடு இந்தக் கலவரம்.

இசுலாமிய மதவழிபாட்டுக்காகப் புத்தளம் பள்ளிவாசலில் கூடிய தமிழர்களின் மீது போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தி 07 பேரைப் பலி கொண்டனர். அதையொட்டி வெளிப் பகுதிகளில் சிங்கள வெறியர்களின் தாக்குதலில் 07 பேர் உயிரிழந்தனர்.

1976-ஆம் ஆண்டு வாக்கில் தான் தமிழர் ஐக்கிய முன்னணி இதுவரை தமிழர்களுக்கான உரிமைகளைக் கேட்டக் கேட்டு அலுத்துப்போய், தொடர்ந்து சாவுகளையும், மீள முடியாத வேதனைகளையும் சந்தித்து விட்டு முதன் முதலாக, தமிழ் ஈழம் என்ற கோரிக்கையை முன்வைத்தது. கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF – Tamil United Liberation Front) என்று பெயர் பெற்றது. இது தந்தை செல்வா எனும் தமிழ்ப் பெரியார் காலத்திலேயே தொடங்கப் பெற்றது.

எதிர்பாராத வகையில் தமிழர் வாழ்வில் ஒருபேரிடி வந்தது. அது 1977இல் தந்தை செல்வா மறைந்ததாகும். 03.06.1977 இல் தந்தை செல்வாவின் சாம்பல் திருமலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது ஏற்பட்ட மோதலே சிங்கள — தமிழ்க் கலவரமாகியது.

இந்நிலையில் 21.07.1977 இல் பொதுத்தேர்தல் நடந்தது. இதுவரை ஆட்சியிலிருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி — சிரிமாவோ கட்சி — படுமோசமாகத்தோற்றது மட்டுமின்றி 08 இடத்தை மட்டுமே பெற்றதால் எதிர்க்கட்சி என்ற மதிப்பையும் இழந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழ விடுதலையைத் தேர்தல் கோரிக்கையாக வைத்தப்போட்டியிட்டு 18 இடங்களைக் கைப்பற்றியது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் ஈழ விடுதலைக்கு ஒப்புதல் அளித்தன. ஜெயவர்த்தனேயின் ஐக்கிய தேசிய கட்சி பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு வந்தது.

இந்தப் பின்னணியை மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். தேர்தல் முடிந்து ஒரே மாதந்தான் - இனக்கலவரம் வெடித்தது. 1958க்குப்பின் மிகப் பெரிய இனக்கலவரம் 1977இல் நடந்தது தான். (1983 இனிமேல்தானே வருகிறது) இனத்துவேசம் வெகுவாகக் கிளப்பப்பட்டு வன்முறை நாடெங்கும் தலை தூக்கியது. தோற்றுப்போன சிரிமாவோ கட்சியிலிருந்து வெறியர்களுக்கு ஆத்திரம் தோன்றிவிட்டது. வெற்றி பெற்ற ஐக்கியதேசிய கட்சியைக் கலங்க ஆடிக்க வேண்டும் எதிர்க்கட்சி என்ற மதிப்பையும் பறித்து அந்த இடத்தில் அமர்ந்த தமிழர் கட்சிக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும். ஐக்கிய தேசிய கட்சிக்கு அதிக அளவில் வாக்களித்த தமிழர்களுக்குத் தங்கள் கோபத்தை உணர்த்த வேண்டும்.


இது தான் இனக்கலவரத்துக்கு அடிப்படையாக இருந்தது. நல்ல பாம்பு கடித்தால் என்ன, சாரைப்பாம்பு கடித்தால் என்ன — கடி வாங்கியவன், மண்டையைப் போட வேண்டியவன் தமிழன் தானே! சிங்கள வெறியன் சிரிமாவோவுக்கு வேண்டியவனாக இருந்தால் என்ன ஜெயவர்த்தனேவுக்கு வேண்டியவனாக இருந்தால் என்ன - இழப்பும், துயரும் தமிழனுக்குத் தானே?

ஜெயவர்த்தனே ஆணவத்தோடு பேசியபேச்சும், சிங்கள வெறியர்களைப் கிளப்பி விட்டது. ஆனால் தமிழர் தலைவர் பேசிய பேச்சும், தமிழ் ஈழ விடுதலைக்கோரிக்கையும் தான் சிங்களர்களை உசுப்பி விட்ட என்று ஜெயவர்த்தனே கலவரத்தைச் திசை திருப்பினார். இந்த கலவரத்தில் ஏற்பட்ட கொலைகள், கத்திக்குத்துகள், கற்பழிப்புகள், இந்துக்கோவில் இடிக்கப்பட்டது ஆகியவற்றை அரசு அமைத்தசன்சோனி (Sansoni) குழு பட்டியலிட்டுக் காட்டி உள்ளது.

போலீசார் அத்து மீறல்கள் இதில் அதிகமாகவே இருந்தன. 1974 உலகத் தமிழ்மாநாட்டில் போலீசார் வரம்பின்றி நடந்ததை விசாரிப்பதற்குக் கூட ஒரு குழுவை நியமிக்க அரசு மறுத்து விட்டது. இதனால் போலீசாருக்குக் குளிர்விட்டுப் போய்விட்டது. ஏன் சிரிமாவோ ஒரு குழு அமைக்கவில்லை என்பதைப் பின்னர் பேசுவோம், 1976-இல் வங்கி ஊழியர் பரராசா போலீசார் சுட்டதால் இறந்தார். மரண விசாரணை செய்த நீதிபதி தொடர்புடைய போலீசாரை நீக்கி வைக்க உத்தவிட்டார். ஆனால் அரசு அவர்களை விடுதலை செய்தது. போலீசாருக்குத் தெம்பு கூடிவிட்டது. அரசே மறைமுக ஊக்கம் தரும் போது ஆட வேண்டியது தானே?

இந்த இனக் கலவரத்தில் 300 பேர்வரை உயிரிழந்தனர் (ஆனால் உயிரிழந்தவர் தொகை 1500 மேல்), 10, 000 பேருக்கு மேல் காயமடைந்தும், கால, கை இழந்தும் அரை குறையாயினர். சொத்துகளை இழந்து பாதிக்கப்பட்டோர் 80, 000 தமிழர்களுக்கு மேல் என்று மதிப்பிடப்பட்டது. தமிழ் மக்கள் இழந்த சொத்துகளின் மதிப்பு 70 கோடி (1977இல்) வரையில் இருக்கும்.

இனி; கலவரத்துக்கு உள்ளே புகுந்து நிகழ்ச்சிகளை அலசுவோம்! சிவில் உடையில் இருந்த போலீசார் கண்-டக்டர் யேசுதாசனைப் பிடரியில் அடித்து மயக்கமடைந்த பின்


ஆரம்பம் : எரிந்த பனையோலைக் குடகும்

ஒருகுளத்தில் தூக்கிவீசினர். யாழ் நகரின், புதிய சந்தை உலக நாகரிகப் பொருள்களின் கிடங்கு என்பார்கள். அங்கிருந்த பாய்க் கடையில் போலீசார் வைத்த தீ தான் இலங்கை எங்கணும் இனக்கலவரம் நடப்பதற்கு ஏற்றி வைத்த முதல் தீ. ஆகஸ்டு 15, 1977 இரவு 1:40 மணி (இந்தியர்கள் இந்தியா சுதந்தரக் கொண்டாட்டம் போட்ட அதே நாளில் இலங்கையில், யாழ்ப் பாணத்தில் தீவைப்புத் தீருப்பணி தொடங்கியது) கையில் கம்பித் தடிகளுடன் வந்த அந்தக் குண்டர்கள் பாய்க்கடைக்கு நெருப்பு வைத்தால் சந்தை அழியும் என்ற சிந்தையோடு செயலாற்றினர். இன்னும் பல கடைகள் கொளுத்தப்பட்டன.


சிதைந்து கவிழ்ந்த சிவகுமாரன் - சோமசுந்தரப் புலவர்

சோமசுந்தரப் புலவர், திருவள்ளுவர், அவ்வையார் சிலைகள்


வான் நோக்கும் வள்ளுவர் - நிலம் நோக்கும் ஔவை

அடித்து நொறுக்கிச் தேசப்படுத்தப்பட்டன. ஒரு முதியோரை அடித்து அவரின் கையை ஈவிரக்கமின்றி உடைத்திருந்தார்கள். தள்ளாடும் அந்தப் பெரியவரைத் தக்க எந்தக் கல் நெஞ்சக் காரனுக்கும் மனம் வராது. காவலர்கள் என்று பெயர் வைத் திருந்தும் மக்களைக் காக்கா விட்டாலும் குற்றமில்லை — தாக்காமலாவது இருக்கலாமே என நாம் கருதுகின்றோம். ஆனால் அவர்கள் காவலர்கள் அல்ல, காக்கி உடையில் இருந்த சிங்களக் கயவர்கள் இனவெறி பிடித்து ரவுடிகள் என்பதை நினைவில் கொள்கிறோம்.

குண்டாந்தடிகளோடு அவர்கள் நிற்கவில்லை. துப்பாக்கி களையும் தூக்கிப் பிடித்தனர். நல்லூர் வடக்கைச் சேர்ந்த பாக்கியராசா சுடப்பட்டார். இரண்டு நாள் கழித்துத்தான் உறவினர்கள் பிணக்கிடங்கில் அவரது உடலைப் பார்த்துக் கதற முடிந்தது. போலீசாரின் டிரக்கில் வந்த போலீசார் சுட்டதால் வண்ணார் பண்ணை ஆனந்தவேல் கொல்லப்பட்டார். போலீசார் தாக்குதலால் வெருண்டோடிய முதியவர் அந்தோணி பிள்ளை என்பவர் வீதியில் விழுந்து உருண்டார். அதன்பின் அவர் எழவில்லை.


துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான இளைஞர்கள்
பாக்கியராசா (ரவி) - ஆனந்தவேல்.

யாழ்ப்பாணத்தில் நடந்த இந்த நிகழ்ச்சிகள் இந்த அளவோடு ஓய்ந்திருக்கும். ஆனால் தென்னிலங்கையில் உள்ள சிங்கள வெறியர்கள் மிகத் தவறான வாந்திகளைக் கிளப்பி விட்டு இனக் கலவரத்தை வெடிக்க வைத்தனர், ஆகஸ்டு 17 நள்ளிரவில் அனுராதபுரம் புகைவண்டி நிலையத்தில் கொழும்பு — யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் - கொழும்பு, கொழுப்பு — தலைமன்னார் விரைவு வண்டிகள் மூன்றும் சந்திக்கும் நேரம். கையில் போத்தல்கள், தடிகளுடன் குண்டர்கள் பலர் கத்திக் கொண்டே ஓடிவந்தனர்.

"தெமளு அப்பிட்ட காவா" (தமிழன் எங்களை அடித்து விட்டான்) "யாபானே தெமளு அப்பிட்ட காவா" (யாழ்ப்பாணத் தமிழன் அடித்துவிட்டான்) என்ற கூச்சலோடு ஒரு கும்பல் ஓடிவந்து, வெறியோடு தாக்கியது வண்டியில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனை வரும் அலறினர். இரத்தம் சொட்டச் சொட்ட ஆண்கள் அடிவாங்க, தாலிக்கொடியிலிருந்து தாங்கள் அணிந்திருந்த நகை அனைத்தையும் பெண்கள் கழற்றிக் கொடுக்க, சிலர் பெட்டியை எடுத்தும் எடுக்காமலும் விழுந்தடித்து இறங்கி இருளில், ஓடிமறைய போலீசார் வந்து துரத்தியும் கலவரம் ஓயாத நிலையில் அனுராதபுரம் அல்லோலகல்லோலப்பட்டது.

பிறகு இலங்கை முழுவதும் கலவரம் பரவியது. தமிழர் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டன. தமிழர்களின் வீடுகள் தகர்க்கப்பட்டன, கண்ணில் பட்ட தமிழர்கள் அனைவரும் காடையர்களால் தாக்கப்பட்டனர். உயிரிழந்தோர் காடுகளில் ஓடி ஒளிந்தோர் அதிகம். பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். ஆண்கள் சுடப்பட்டும் வெட்டப்பட்டும் வீழ்ந்தனர். வன்செயல்கள் உச்சமடைந்ததால் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

திரிகோணமலையில் 22.08.1977, 23.08.1977 ஆகிய இரண்டு நாட்களிலும் 19 தமிழர் பிணங்கள் மருந்துவ மனைக்குக் கொண்டு வரப்பட்டன. அதுமட்டு மின்றி 28.08. 1977 இல் சம்பளம் வாங்கிக் கொண்டு வந்த பசுபதி இராசதுரை, மார்க்கண்டு, சித்திரவேலு ஆகிய இளைஞர்கள் வீட்டுக்குவரும் வழியில் சம்பளத்தையும் பறிகொடுத்து உயிரையும் பறி கொடுத்தனர். கண்-டக்டர் கணபதிப்பிள்ளை சீவரத்தனம் குத்திக் கொலை செய்யப்பட்டு வீதி ஓரத்தில் கிடந்தார். இப்படியாகக் கலவரங்கள் பலர் உயிரையும், உடமையையும் காலி செய்து கொண்டிருந்தன.

ஜெயவர்த்தனேயின் ஒப்புதலும் உறுமலும்

பிரதமர் ஜெயவர்த்தனே கலவரம் எதையும் கட்டுப்படுத்த முடியவில்லை என அலறினார். (அவர் இப்போது தான் அலறுகிறார் என்றில்லை. 1977 இல் ஆட்சிக்கு வந்ததில் இருந்தே இந்த அலறல் தான்)

பாராளுமன்றத்தில் அவர் பேசிய பேச்சிலிருந்து சில பகுதிகளைப் பார்ப்போம். அவர் -
பிரதமர் பேசுகிறார்,
"பொல்லாங்கு விளைவிக்கக் கூடிய எந்தவொரு சூழ் நிலையையும் கொள்ளையடிப்பதற்கும், கொலை செய்வதற்கும் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக்கொள்ளும் தீயோர் ஒருசிலர் உளர். இத்தகைய போக்கானது இந்த நாட்டில் கடந்த அண்மைக் காலங்களில் வளர்ந்து கொண்ட வந்திருப்பது போலத் தோன்றுகிறது. இதை நாம் உறுதியாகத் தடுத்து நிறுத்தாவிடில் எவ்வகையிலும் முன்னேற்றம் காண்பது எமக்கு கஷ்டமாக இருக்குமென தான் கருதுகிறேன்". (தடுத்து நிறுத்திய இலட்சணம் தெரிகிறதா? இந்த நிலையில் இன்னும் 6 ஆண்டுகள் இவர் குப்பை கொண்ட வேண்டும்)

அவரே பாராளுமன்றத்தில் சில புள்ளி விவரங்களைத் தருகிறார்:-

"மாத்தளையில் தமிழர் ஒருவரின் மதுபானக்கடையொன்றும் தமிழ்க் கடையொன்றும் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. அனுராத புரத்தில் பட்டினப்பகுதியில் ஏறத்தாழ 100 தமிழர் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன. தமிழர் மூவர் கொலை செய்யப்பட்டு உள்ளனர். கெக்கிராவையில் 3 கடைகளும், நொச்சியாகமவில் 10 கடைகளும் எரிக்கப்பட்டிருக்கின்றன குயியாப்பிட்டியில் 5 தமிழ்க்கடைகள் கொள்ளையடிக்கப் பட்டிருக்கின்றன. மகோவில் 18 தமிழ்க் கடைகளும் 5 முஸ்லீம் கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டன. கல்க முவவில் தமிழ்த் திரைப்பட மாளிகையொன்று தீயிடப்பட்டுள்ளது. மீரிகமவில் 7 தமிழ்க்கடைகள், பாணந்துறையில் 17 தமிழ்க் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன".
(பிரதமர் தந்த புள்ளி விவரத்தில் நானே பலவற்றை விட்டிருக்கிறேன் கட்டுரை நீளுமெ என்றஞ்சி)

பிரதமர் தொடர்ந்து பேசுகிறார்:
"எனவே நாம் வெளியிடும் இவ்விவரங்கள் எவ்வகையிலும் மகிழ்ச்சி தருவன அல்ல, அப்பாவி மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். அவர்களின் சொத்துகள் கொள்ளையடிக்கப் படுகின்றன என்பது எம் எல்லோருக்குதம் துன்பம் தருகின்றது. இவ்விவரங்களில் இருந்து கொள்யைடிக்கப்பட்டனவெல்லாம் தமிழ் மக்களது கடைகள் என்பதையும் காயமடைந்தவர்கள் எல்லாம் தமிழ்மக்கள் என்பதையும் நீங்கள் காண்கிறீர்கள். இவர்களில் ஒருவர் முஸ்லிம் ஆவார் என நான் நினைக் கிறேன். ஆயினும் மற்றைய எல்லோரும் தமிழ் மக்களாகவே இருந்திருக்கின்றனர்".

பிரதமர் இப்படித் தெளிவுபடுத்தினார். தமிழர்கள் தாக்கப்பட்டனர் என்பதைப் பகிரங்கரமாக ஒப்புக்கொண்டார் அனால் தமிழர் களைப் பாதுகாக்கவும் கலவரங்கள் நடக்காமல் தடுக்கவும். வன்முறையில் ஈடுபடுபவர்களை ஒடுக்கவும் எந்த நடவடிக் கையும் அன்றும் எடுக்கவில்லை - இன்றும் எடுக்கவில்லை என்பதைத்தான் 1983- கலவரம் காட்டுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் வன்முறையை எழுப்பும் வித்தில் பேசினார் என்றும் பிரதமர் குற்றம் சாட்டினார். பிறகுதான் ஜெயவர்த்தனே தான் ஒரு சிங்களன் என்பதைக் காட்டினார்.

"நீங்கள் சண்டையிட விரும்பினால் நாங்களும் சண்டையிடத் தயார். சமாதானமே என்றால் சமாதானமே. போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம், என்று உறுமினார். தான் பேசுவது தமிழ் மக்களுக்கு ஆறுதல் அளிப்பதற்குப் பதிலாக, சிங்களர்களுக்கு மேலும் தூண்டுதலாக அமையும் படியே அவர் பேசினார். அவரது பேச்சு மூன்று மொழிகளிலும் ஒலி பரப்பப்பட்ட அதேவேளையில் நகரங்கள் கிராமங்கள் எங்கும் தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர். பதினைந்து நாட்கள் தொடர்ந்து கலவரம் நடந்தது. ஜெயவர்த்தனேயின் ஆணவப் பேச்சு தமிழ் மக்களின் அழிவுக்கு வித்திட்டது. (இந்த முறையும் அப்படித்தானே)

இதன் விளைவாக 800 தமிழர்கள் அனுராதபுரத்திலிருந்து அகதிகளாக யாழ்ப்பாணம் வந்தனர். தென்னிலங்கை யிலிருந்து மேலும் 1200 பேர் அகதிகளாக வட பகுதிக்கு வந்தனர். கண்டியில் 3500 தமிழர்கள் அகதி முகாம்களில் தள்ளப்பட்டனர். கொழும்பிலிருந்து 1900 அகதிகள் மூன்று கப்பல்களில் காங்கேசன் துறைக்கு வந்து சேர்ந்தனர்.

திட்டமிட்ட சதி

இந்தக் கலவரம் சிங்களப் போலீசாரும், சிங்களக் காடையரும் சேர்ந்து திட்டமிட்ட சதியின் விளைவே ஆகும். வவுனியாவில் பொறியியல் பிரிவில் உதவி மேற்பார்வையாளராகப் பணியாற் றியவர் மங்களேசுவரன் என்பவர். அவருடைய கிராமம் வவுனியா அருகில் உள்ள கூலாங்குளம். அதற்குப் பக்கத்து ஊர் கொக்குவெளி. இதில் சிங்களர் அதிகம் இவரிடம் நீண்ட காலம் வேலை செய்த இரு சிங்களவர்கள் ஒரு நாள் இரவில் இவரைச் சந்தித்துக் கூறிய செய்தி இதோ:-

இன்று மாலை 4:30 மணிக்கு வவுனியா போலீசார் எமது கிராமத்திற்கு (கொக்குவெளி) வந்து பல இளம் வாலிபர்களை அழைத்து நாம் இன்று இரவு வவுனியா நகரத்தில் உள்ள கடை, வீடு எல்லாம் எரித்த உடைத்து கொள்ளையடித்துத் தமிழர் களை விரட்டப் போகிறோம். நீங்களும் உங்கள் பக்கத்துக் கிராமங்களைக் கொள்ளையடித்து வீடுகளை எதித்தத் தமிழர்களை விரட்டுங்கொ என்று கூறி விட்டுச் சென்றார்கள்.

ஆகவே நீங்கள் தயவுசெய்து இங்கு இருக்காதீர்கள்"
இவ்வாறாக அவர்கள் இரகசியமாகத் தெரிவித்தனர். மங்களேசுவரனும் தன் குடும்பத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டு போய் விட்டு விட்டு ஊர் திரும்பினார். துப்பாக்கியோடு தற்காப்புடன் இருந்தார். அவர் எதிர் பார்த்தபடியே அன்று இரவு கொள்ளை தீவைப்பு நிகழ்ச்சிகள் நடந்து இருக்கின்றன. இதைவிட அங்கு தமிழர்களுக்கு எதிரானசதிக்கு வேறு எடுத்துக்காட்டு இருக்க முடியாது.

கலவரத்தின் காரணங்கள்

இந்த இனக்கலவரத்துக்கும் போலீசாரின் மூர்க்கத்தனமான தாக்குதலுக்கும் பலகாரணங்கள் உள்ளன. அவை தமிழர் பிரச்சனை என்ன என்பதை, தெளிவாகக் காட்டக் கூடியவை.

1. ஐக்கியதேசியக்கட்சியின் வெற்றிக்கு காரணமாக இருந்தவர்கள் தமிழர்கள். அதனால் அவர்களை ஒழிக்க சிறீலங்கா சுதந்தரக் கட்சி வெறியர்கள் எண்ணினர். கண்டி பாராளுமன்ற உறுப்பினர் (M.P) சேனநாயகா "கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்த தமிழர்களின் வீடுகளும் கடைகளுமே உடைக்கப்பட்டுள்ளன. தேர்தலில் தோல்வி கண்ட சுதந்தரக்கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் இங்கு குழப்பம் புரிந்ததற்கு என்னிடம் படமூலமான ஆதாரம் உள்ளது. இதனால் உன் தொகுதியில் 6 ஆயிரம் தமிழர்கள் பாதிக்கப் பட்டார்கள்" என்று குறிப்பிட்டார். "இது இனக்கலவரம் என்ற போர்வையில் நடந்த அரசியல் சதி" என்று அரசு அறிக்கை விட்டது.

சிறீலங்கா கட்சியின் தோல்வியும் வெறுப்பும்

2. ஜெயவர்த்தனே அரசே சிறீலங்கா கட்சியைச் சேர்ந்த சிலரைக் கைது செய்து விசாரித்தது. தோல்வியைச் சகித்துக் கொள்ள முடியாத சிறீலங்கா கட்சியின் ஒரு பிரிவினரே நாட்டைப் பற்றிக் கவலைப் படாமல் கலவரத்துக்குத் தூபமிட்டனர்" என்று ஜெயவர்த்தனே அரசின் பொறுப்பான ஒருவரே அறிக்கை விட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வெற்றி

3. ஆளுங்கட்சி ஒரேயடியாகக் கவிழ்ந்து எதிர்க்க கட்சியாகவும் ஆகமுடியாமல் போன நிலையல் தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) எதிர்க் கட்சியாகவும் 18 பேராகவும் அமர்ந்ததை இன வெறிச் சிங்களவர்களால் சகிக்க முடியவில்லை. யாழ்ப் பாணம் போலீஸ் வடிவில் தீ மூட்டப்பட்டதற்கும், கலவரம் யாழ்ப்பாணப் பகுதியில் தொடங்கியதற்கும் இதுவே காரணம்.

பொறுப்பற்ற போலிப் போலீசார்

4. கலவரங்களை உருவாக்கித் திட்டமிட்டு, ரவுடிகளை ஏவிவிட்டுப் பெருமளவில் நாடு முழுவதும் அமளியை உண்டாக்கியவர்கள் காக்கி உடை அணிந்தும் கடமை, கண்ணியம் உணராமல் சிங்கள வெறிய ராகவே இயங்கிய போலீசார் தான். இவ்வளவு தூரம் நிலைமை மோசமடைந்ததற்குக் காரணம் யாழ்ப் பாணம் போலீஸ் உயர் அதிகாரிகள் தமது கடமையிலிருந்து முழுமையாகத் தவறி விட்டது தான் என்றும், யாழ்ப்பாணத்தில் முதல் நாள் இரவும், மறுநாளும் நடந்த தீ எரிப்பு நிகழ்ச்சிக்கே தெரியும் என்றும் அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் கறிப் பிட்டார். உயர் - போலீஸ் அதிகாரிகள் கண்முன் பாகவே சீருடையில் இருந்த போலீசார் சட்டையில் போலீஸ் இலக்கங்கள் இல்லாமல் செயலாற்றினார். அப்போதுதானே யாரையும் அடையாளம் காட்ட முடியாது என்பது அவர்கள் சூழ்ச்சி. பாராளுமன்ற உறுப்பினர் (M.P) மூன்று பேர் சென்ற காரைப் போலீசார் மறித்துப் திருப்பி அனுப்பியதுடன், ஒரு பேருந்து வண்டியைக் கொண்டு வந்து நிறுத்திக் கொண்டு ஒரு நகைக் கடையை உடைத்து அதில் இருந்த நகைகளை மூட்டையாகக் கட்டி பேருந் துகளில் ஏற்றிக்கொண்டு போனார்கள்.

சிங்களர்களை எதிர்த்து எந்தச் சமயத்திலும் தமிழர்கள் தாக்குதல் நடத்தவில்லை, தற்பாதுகாப்புக் காகக் கூடச் செய்யவில்லை. தமிழர்கள் உரிமம்

(Licence) பெற்று வைத்து இருந்த துப்பாக்கிகளைக் கூடப் போலீசார் பறிமுதல் செய்து விட்டனர். போலீசார் காவலுக்கு நின்ற நேரத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நேரத்திலேயே யாழ்ப்பாணம் "கோணேஸ்வரா கபேயும், பிள்ளையார் ஸ்டோரும்" தீ மூட்டப்பட்டுத் தரை மட்டமாக்கப்பட்டன. 1983 - இல் போலீசாரோ முன் நின்று தமிழர்களை வதைத்தார்கள் என்றால் அவர்கள் 1977 — ஆம் ஆண்டிலேயே அதற்கு ஒத்திகை பார்த்தார்கள் என்பதை உங்களுக்கு உணர்த்ததான் இவ்வளவு விரிவாக எழுதவேண்டியுள்ளது.

வவுனியாவில் போலீஸ் நிலையத்துக்கு அருகில் இருந்த வர்த்தக நிலையங்கள் பட்டப் பகலில் தீக்கிரையாக்கப்பட்டன. கடந்த ஆண்டு சூன்மாதம் பண்டார வன்னியன் சிலை திறப்பு விழாவில் பேச சபாநாயகர் இராசாராம் நான், டாக்டர் அல்வை நடராசன், நடிகர் விசயகுமார், நடிகை மஞ்சுளா ஆகியோர் சென்றிருந்தபோது 1977ல் பாதிக்கப்பட்ட அந்த இடங்களைப் பார்த்து மனத்துக்குள் வெதும் பியிருக்கிறேன். இதுபற்றிய மரண விசாரணை செய்த யாழ்மாவட்ட நீதிபதி கே. வி. நவரத்தனம் " கலவரத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் போலீசார் தான்" என்று தீர்ப்பளித்தார்.

பிரதமர் ஜெயவர்த்தனேயே 1977ஆம் ஆண்டின் போலீசாரைப் பற்றிய பாராளுமன்றத்தில் சொன்ன செய்திகளை ஒவ்வொரு தமிழனும் நெஞ்சில் பதித்துக் கொளள் வேண்டும். அப்போது தான் பின்னைய (1981, 1983) கலவரங்களில் அவர்களது பங்கு என்ன என்பது விளங்கும்.

அவர் கூறியதன் சாரம் பின்வருமாறு: -
"போலீஸ் படையில் அரசியல் ரீதியான நியமனங் களே (அதாவது கட்சிக்காரர்களே — அதுவும் சிறீலங்கா சுதந்தரக் கட்சிக்காரர்களே) அதிகம் இடம் பெற்றுள்ளனர். இதனால் அப்படையின் ஒழுக்கம் சீர்கேடடைந்து உள்ளது. போலீஸ் நிலையத்துக்குப் புகார் செய்யச் சென்றவரையே போலீசார் லாக்கப்பில் அடைத்துள்ளனர். போலீசாரின் கட்டு மீறிய செயல்க ளுக்கு இனவாதம் காரணமல்ல, சிரிமாவோ அம்மை யார் அவர்களுக்கு அளித்துள்ள பயிற்சியே அதற்கு அடிப்படையாகும். (செய்திகள் வாசிப்பவர் ஜெயவர்த் தனே) போலீஸ் படையில் அவர்கள் காலத்தில் 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் வரையில் ஆட்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலோ னோர் போலீஸ் படையில் இருந்து கொண்டே சுதந்தரக் கட்சியின் உறுப்பினராகவும் இருந்துள் ளனர். இவர்களே வன்செயலுக்குத்துணையான நின்றுள்ளனர். இந்த வியாதிக்கு வைத்தியம் கண்டாக வேண்டும். அவர்கள் அனைவரையும் வீட்டுக்கு அனுப்பி வைக்கவே நான் விரும்புகிறேன்".

ஜெயர்வத்தனேயா இப்படிப் பேசியவர் என்று நமக்கு வியப்பாக இருக்கும். அன்று சுதந்தரக் கட்சி உறுப் பினர்கள் போலீஸ் வேலை பார்த்தார்களாம். இன்று ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் போலீஸ் வேலை பார்க்கிறார்களா?

நரி வலம் போனால் என்ன? இடம் போனால் என்ன? மேலே விழுந்து கடிக்காமல் போனால் நல்லது. சிங்கள நரி — அது சிரிமாவோ நரியாக இருந்தாலும். ஜெயவர்த்தனே நரியாக இருந்தாலும் - தமிழன் இரத்தத்தை, தொடர்ந்து குடித்துக் கொண்ட தானே இருக்கிறது? சிங்கள இதழான "நம் தேசம்" கூறிய செய்தி இன்னும் பயங்கரமானது, "சிரிமாவோ ஆட்சிக் காலத்தில் போலீஸ் படையில் சேர்க்கப் பட்ட போலீசார் பலர் அடிப்படைத் தகுதி தராதரம் இன்றி நியமிக்கப்பட்டதாகவும், குற்றவாளிகள் என நீதிமன் றத்தில் தண்டனை பெற்றவர்களும் போலீஸ் வேலைக்குச் சேர்க்கப்பட்டனர் என்றும் கூறிகிறது". இவ்வளவு போதாதாவேலி பயிரை மேய்வதற்கு?

அதிபரின் அசட்டை

5. தமிழர்கள் தாக்கப்பட்டபோது யாழ் அரசாங்க அதிபர் விசபாலா செய்தி தெரிந்தும் நேரில் வராமலும் தக்கமுறையில் செயலாற்றாமலும் முழங்காவில் எனும் ஊருக்கு முகாம் புறப்பட்டுப் போய் விட்டார். இவரது அசட்டையே மூலகாரணமாக அமைந்தது.

வதந்திகள்

6. சிங்களவெறியர்கள் பரப்பிய வதந்திகள் மேலும் பலரை வெறி கொள்ளச் செய்தன "உண்மைக்குப் புறம்பாகத் தீய சக்திகள் பரப்பும் எந்த வாந்தியையும் நம்பவேண்டாம்" என்று அரசே அறிக்கை விட்டது. எல்லாம் முடிந்த பிறகு அறிக்கை விட்டு என்ன செய்ய?

7. அகலவத்தை உறுப்பினர் மெரில் காரியவாசம் "துட்ட கமனு (சிங்கள முரட்டுத் தலைவன்) இறந்து விட வில்லை. ஒவ்வொரு சிங்களன் இதயத்திலும் வாழ்கிறான். சிங்கள இளைஞர்கள் இன உணர்ச்சி பெற்றால் துட்டகமுனுர்கள் - செயற்படுவார்கள்" என்று பேசிய பேச்சு வெறியை மூட்டி விட்டது. ஜெயவர்த்தனேயின் ஆணவப் பேச்சும் இந்த வெறிக்குக்காரணம்.

இவ்வாறாக 1977 இனக்கலவரங்கள் இரத்தம் தோய்ந்த தன் அடிகளை ஆழப் பதித்து விட்டு ஓய்ந்தன. ஆனால் அவற்றின் ஈரம் இன்னும் காயவில்லை. இன்று வரை காயவில்லை...!

பேராசிரியர் தமிழ்க்குடிமகன் - "செந்நீர்க் கடலில் ஈழத் தமிழன்"
20-09-1983



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE
FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%


கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Certified Insolvency Counsellor

DSC DEBT SOLUTION CANADA
55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 647-797-1991
www.debtsolutioncanada.ca

ஈழத் தமிழ் மக்களின் வரலாற்றில் 1977 மற்றுமொரு இருண்ட நாள்

சுமார் 1500க்கும் அதிகமானவர்கள் அழிக்கப்பட்டுள்ளார்கள் என்ற அதிர்ச்சியூட்டும் உண்மைகள்

இனப்படுகொலைகளை தடுக்கத் தவறும் பட்சத்தில் அவை பிற்காலத்தில் பன்மடங்கு மூர்க்கமான இனப்படு கொலைகளுக்கு வழிவகுத் திருக்கின்றன என்ற வரலாற்று உண்மையை 1977 தமிழ் இனப்படுகொலை உணர்த்துகிறது. ஈழத் தமிழ் மக்களின் வரலாற்றில் மற்றுமொரு இருண்ட நாள் 1977. முதன் முதலில் இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய இன அழிப்பு கலவரம் மேற்கொள்ளப்பட்ட நாளாகும்.

தமிழர்களுக்கு துரும்பையும் கொடுக்கக்கூடாது என்று இன்றுபோல் அன்றும் தலைவிரத்தாடினர். இந்த நிலையில் தமிழ் தலைவர்கள் தனிநாடே தீர்வு என்ற நிலைக்கு தள்ளப்பட்டனர். இதன் அடிப்படையில் 1974இல் தமிழ் கட்சிகள் அனைத்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் ஒன்றிணைந்தன.

இவ்வாறு ஒன்றிணைந்த தமிழ் தலைமை 1976இல் வட்டுக்கோட்டையில் கூடி தமிழ் ஈழம் என்ற தனிநாட்டை

கறுப்பு நிகழ்வாக இடம்பெற்றுள்ளது.

ஒரு அரசே தன்னுடைய பிரசைகளை இவ்வாறு இன அழிப்பு செய்ய உத்தரவிட்டதன் மூலம் இலங்கை அரசு தமிழ் இன ஒடுக்குமுறையை மிகவும் திட்டமிட்ட ரீதியில் மேற் கொள் ளுகிறது என்ற கசப் பான உண் மை அம்பலமானது. இந்த இனப்படுகொலைக்கு ஊக்குவித்த இலங்கை அரசு பின்னர் இதனைக் காட்டிலும் பன்மடங்கு கொடிய 1983 இனப்படுகொலைக்கு ஊக்குவித்தது.



1977 நாடாளுமன்றத் தேர்தலில் வடக்குக் கிழக்குப் பகுதியில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழத் தனிநாடு கோரிக்கையை முன்வைத்தது. இன ஒடுக்குமுறையாலும் உரிமை மறுப்பினாலும் பாதிக்கப்பட்ட வடகிழக்குத் தமிழ் மக்கள் இலங்கை அரசினால் தீர்வு முன்வைக்கப்படாத நிலையில் தனிநாட்டுத் தீர்மானத்திற்கு வந்தனர்.

இலங்கையின் சுதந்திரத்திற்காக சிங்களவர்களைக் காட்டிலும் முன்னின்று போராடிய ஈழத் தமிழ் மக்கள் சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு ஆளாகினர். சிறுபான்மை இனம் என்ற காரணத்தினால் அவர்களுக்கான ஆட்சி அதிகாரங்கள் மத்தியில் மறுக்கப்பட்டன. மக்களின் வாழ்வியல் கட்டமைப்புசார் உரிமைகளை பெரும் பான்மையினம் மறுத்து தனது வசமாக்கியது.

தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த வடகிழக்கில் சிங்கள பௌத்த அரசாட்சியினால் பல்வேறு இன ஒடுக்குமுறையும் உரிமை மறுப்பும் மேற் கொள்ளப் பட்டது. 1956இல் தனிச்சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்டதும் வடகிழக்கு ஸ்தம்பித்தது. பின்னர் தமிழ் மக்கள் தமது பகுதிக்கான சுய அதிகாரங்களைக் கோரிப் போராட்டங்களில் ஈடுபட்டார்கள்.

இதேவேளை தமிழ் மக்களின் பெரும் பான்மை ஆதரவைப் பெற்ற தமிழரசுக் கட்சி சமஸ்டி ஆட்சி முறையை வடகிழக்கில் அமுல்படுத்துமாறு இலங்கை ஆட்சியாளர்களிடம் கோரியது. தனிச்சிங்களச் சட்டத்தை கொண்டு வந்த பண்டார நாயக்க பின்னர் சமஷ்டியே தீர்வென்றும் கூறும் நிலைக்கு வந்தார். இதனையடுத்து அவருக்கும் தந்தை செல்வாவுக்கும் இடையில் ஒப்பந்தங்கள் நடைபெற்றன.

எனினும் சமஷ்டியை நடைமுறைப்படுத்தும் தமிழர் களுக்கு அதிகாரங் களை கொடுக்கும் நிலை ஏற் படவில் லை. சிங் கள பௌத்த இனவாதிகள்

அடைவதே இலட்சியம் என்ற வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானத்தை எடுத்தனர். இந்த தீர்மானத்திற்கு ஆதரவு வழங்குமாறு கோரி இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் அவர்கள் போட்டியிட்டனர். 1977 ஜூலை 21இல் நடைபெற்ற தேர்தலில் வடகிழக்கு மாகாணத்தில் அனைத்துத் தேர்தல் தொகுதிகளிலும் வெற்றி பெற்று, அதிக உறுப் பினர் களைக் கொண் டு இலங் கை பாராளுமன்றத்தில் இரண்டாவது கட்சியாக உரு வெடுத்தது.

இதனையடுத்து அப்போதைய ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசாங்கம் தமிழ் இனப்படுகொலைக்கு வித்திட்டது. இனவெறியர்களைத் தூண்டி வடகிழக்கிற்கு வெளியில் வசிக்கும் தமிழ் மக்களை படுகொலை செய்யுமாறு அறிவிறுத்தியது. அனுராதபுரம், புத்தளம், கொழும்பு, மலையகம் உள்ளிட்ட பகுதிகளில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்தப் படுகொலையில் சுமார் 400 தமிழர்கள் கொல்லப்பட்டதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமானவர்கள் அழிக் கப் பட் டதாக அரசசார் பற்ற நிறுவனங் கள் மேற் கொண் ட ஆய் வுகளில் தெரிய வந் துள் ளது. அவைகளின் புள்ளி விபரங்களின்படி சுமார் 1500க்கும் அதிகமானவர்கள் அழிக்கப்பட்டுள்ளார்கள் என்ற அதிர்ச்சியூட்டும் உண்மைகள் அரசசினால் மறைக் கப்பட்டள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அப்போதைய அரசாங்கம் முன்னெடுத்த சன்சோனி ஆணைக்குழு (Sansoni Commission) வெறும் 300பேர்தான் கொல்லப்பட்டனர் என்று கூறியது. எவ்வாறொனும் தமிழ் மக்கள் எதிரான இன அழிப்பு என்பதன் மூலம் ஒரு இனத்திற்காக எதிராக மேற் கொள் ளப் பட் ட இந் த படுகொலைச் சம் பவம் இலங்கையில் தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முதல் இனப்படுகொலைச் சம்பவம் என்று வரலாற்றின்

தமிழ் மக்களின் ஜனநாயக வெளிப்பாடுகளுக்குப் பதிலாக இன அழிப்பை மேற்கொள்ளும் இனவாத மேலாதிக்கப் போக்கு தமிழர்களின் இன விடுதலைப் போராட்டத்தை மேலும் மேலும் பலப்படுத்தியது. இலங்கை அரசியலில் தமிழர்கள் வெளிப்படுத்தும் ஜனநாயகக் குரலுக்கு அவர்கள் வெட்டிச் சரிக்கப்படுவதே பதில் என்றே இலங்கை அரசு செயலில் காட்டியது. பிரிந்து செல்லுதலே இன அழிப்புக்கும் ஒடுக்குமுறைக்குமான தீர்வு என்று தமிழர்கள் தீர்மானித்தனர்.

இப் பேடுகொலை இடம் பெற்று 44 வருடங் களின் பின்னரும் ஈழத் தமிழ் மக்கள் ஜனநாயகக் குரலில் தமது உரிமையைக் கோரினாலும் வடகிழக்கில் வன் முறையை திணிக்கும் தெற்கின் இனவாதச் செயற்பாடுகள் தீவிரத்துடன் உள்ளன.


இன்றும் குறைந்தபட்சமாக வடகிழக்கு மக்கள் சமஷ் டியை கோரி வருகிறார்கள்.

அதனையும் தனிநாடு என்று சித்திரிக்கும் சிங்களப் பேரினவாதிகள் அதற்கு எதிராகவும் கடுமையாக செயற்பட்டு தம் அரசியலை முன்னெடுக்கின்றனர்.

இவ்வாறு இனப்படு கொலைகளை மேற்கொண்டு, தமிழ் இனத்திற்கான உரிமையை மறுத்து அவர்களை மேலாதிக்கம் செய்து அடக்கி ஒடுக்க நினைப்பதும் மீண்டும் மீண்டும் அழிவையும் இன முரண்பாடு களையுமே தந்துள்ளது.

தமினிப்படுகொலை வரலாற்றில் இடம்பெற்ற 1977 ஆவணிப் படுகொலையை ஈழத் தமிழர்கள் நினைவு கூறும் இன்றைய நாளில், தமிழர்களின் உரிமைகளை அவர்களிடமே கொடுத்து அவர்களை மேலாதிக்கம் செய்யாத ஒரு அணுகுமுறையை சிங்கள தேசம் மேற்கொள்ளுமா?

1977 ஆகஸ்ட் மாதம் தமிழின அழிப்பின் புகைப்பட காட்சிகள் யாழ்ப்பாணம்




ஆரம்பம் : எரிந்த பனையோலைக் கடகம்




தீயில் கருகிய ஜீப் வண்டி




கொள்ளையடிக்கப்பட்ட 'லக்சலா'




(மேல்) அடையாளம் காணப்படாத உயிர்ப்பலி.
(கீழ்) உதாரணத்துக்கு ஒரு சைக்கில்.




எரிந்து... உடைந்து ... சிதறி....




பாவிகள் இட்ட தீயில் பாழடைந்த தையல் கடைகள்



எரிந்து முடிந்த பழைய மாக்கற்



அடித்து நொருக்கப்பட்ட மோட்டார் வண்டி.



வலது காலை இழந்த வரதராசன்



வந்து சேர்ந்த அகதிகளில் ஒரு பகுதியினர்



தொடைகளைத் துளைத்த சன்னங்கள் - எதிர்வீரசிங்கம்



துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான இளைஞர்கள்
பாக்கியராசா (ரவி) - ஆனந்தவேல்.



வான் நோக்கும் வள்ளுவர் - நிலம் நோக்கும் ஔவை



சிதைந்து கவிழ்ந்த சிவகுமாரன் - சோமசுந்தரப் புலவர்

1977 ஆகஸ்ட் மாதம் தமிழின அழிப்பின் புகைப்பட காட்சிகள் யாழ்ப்பாணம்





வல்வை படுகொலையின் 32 ஆவது நினைவு தினம்

வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் புரிந்த அட்டுழியங்கள்!!!

1989 ம் ஆண்டு ஓகஸ்ட் 2 ஆம் திகதி வல்வெட்டித் துறையில் இருக்கும் ஊரிக்காடு, பொலிகண்டி இராணுவ முகாம்களிலிருந்து புலிகளை அழிக்கும் நோக்குடன் புறப்பட்ட இந்திய படைகள் அப்பாவி மக்கள் மீது தனது வெறியாட்டத்தினை வழமை போல தொடங்கியது.

ஓகஸ்ட் 2 ஆம் திகதி இச் சம்பவம் நடைபெற 3, 4 திகதிகளில் வல்வெட்டித்துறையிலும் அதைச் சூழ உள்ள பகுதிகளிலும் ஊரடங்கு சட்டத்தினை பிரகடனப்படுத் திவிட்டு வெறியாட்டம் ஆடினர். யாருமே வல்வெட் டிதுறைக்குள் போகவே, அங்கிருந்து தப்பி வரவோ முடியவில்லை. வெறியாட்டம் முடிந்து இந்திய இராணுவம் முகாம்களுக்கு திரும்பிய பின் வல்வெட்டித்துறைக்கு சென்று பார்த்தவர்களால் நடைபெற்ற கொடூரங்களை ஜீரணிக்க முடியவில்லை.

63 பொதுமக்கள் சுட்டும், வெட்டியும், எரித்தும் கொல்லப்பட்டிருந்தனர். இதில் பலர் நிலத்தில் கிடத்தி முதுகில் சுடப்பட்டிருந்தனர். ஆண், பெண், முதியோர் வேறுபாடு இன்றி.

100 பேர் அளவில் காயமடைந்திருந்தனர்.

123 வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டன.

45 கடைகள் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டன.

வல்வை சனசமூக நிலையம் (நூலகம்) தீயிடப்பட் டிருந்தது, பல ஆயிரக்கணக்கான நூல்கள். தளபாடங்கள் கொழுத்தப்பட்டிருந்ததுடன் நூலகத்தில் இருந்த காந்தி, நேரு, நேதாஜி, இந்திராகாந்தி போன்ற தலைவர்களின் படங்கள் கூட நொருக்கப்பட்டு தீயிடப்பட்டு இருந்தன.

176 மீன்பிடி வள்ளங்கள் எரிக்கப்பட்டன.

எங்கும் சடலங்கள், அவல ஓலங்கள், தீக்கொழுந்துகள், காயமடைந்த, கொல்லப்பட்ட உறவினர்களின் அவலக் குரல்கள். காலங்கள் பல சென்றாலும் இன்றும் வல்வெட்டி துறை மக்களின் மனங்களில் ரண வடுவாக அச்சம்பவம் இருந்து வருகிறது. ஒரே குடும்பத்தில் 3 பேர் கூட கொல்லப்பட்டிருந்தனர்.

வல்வெட்டிதுறையில் நடைபெற்ற இக்கோர தாண்டவம் பற்றி எந்த ஒரு இந்திய ஊடகமும் செய்தி வெளியிட வில்லை. இன்று கூட எத்தனை இந்தியருக்கு இது பற்றி தெரியும் என்பது கேள்விக் குறியே?

முதன் முதலாக லண்டனில் இருந்து வெளிவரும் FINANCIAL TIMES இன் டெல்லி நிருபர் DAVID HOUSEGO நேரில் சென்று பார்த்த பின்பே FINANCIAL TIMES இன் 17.08.89 இதழில் இச்செய்தி வந்தது.


அதன் பின்னரே லண்டனில் இருந்து வெளிவரும் TELEGRAPH பத்திரிகையும் 13.08.89 இல் இச் செய்தியைப் பிரசுரித்திருந்தது. 24.08.89 லேயே இந்தியாவில் இருந்து வெளிவரும் INDIAN EXPRESS பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இந்திய அரசானது திட்டமிட்டே இச் செய்திகளை இந்தியாவில் இருட்டடிப்பு செய்தது இதற்கு இந்திய பத்திரிகைகள், பிற ஊடகங்கள் யாவும் துணை போயிருந்தன. தமிழர் எனும் காரணத்தினால் இந்திய அரசோ, இலங்கை அரசோ இவர்களுக்கு நீதி வழங்க முன்வரவில்லை.

2.3.4-08.1989 வல்வைப் படுகொலை

இந்திய ஆக்கிரமிப்பாளர்களால் (IPKF) 02.08.1989 அன்று வல்வையில் படுகொலை செய்யப்பட்ட மக்கள்







TAX ANALYST

ACCOUNTING | BOOKKEEPING | & MORE



- Affordable and Reliable Services
- Experienced Accountants
- Presonal & Corporate Tax
- Tax Planning / Audit Appeal
- HST/GST/WSIB
- Bookkeeping & Payroll
- UBER/LYFT Tax Filling

CRB/CERB HELP

OFFICE
416-898-8879

CALL FOR APPOINTMENT
416-838-2826

105Consumers Drive.
Whitby ON L1N 1C4

115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6

www.taxanalyst.ca
kannan@taxanalyst.ca

Allstate.
You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



Raji Linghan
Ajax Agency
15 Westney Road, N
(416) 817 5060
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316

இப்போது வந்துவிட்டது!

தற்போதைய வைரஸ் தொற்று காலத்தில்

உங்கள் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து அனைத்து நோய்களிலும் இருந்து உங்களைப் பாதுகாக்க வெளிவந்துவிட்டது

"3 Spoon 100 ஆயுள்"

உள் அடங்கும் பொருட்கள்: உள்ளி, இஞ்சி, தேசிக்காய், வினிகர், தேன், கருஞ்சீரகம்

இவை அனைத்தும் ஆயுள்வேத ஆகம முறைப்படி தயாரிக்கப்பட்டது. இதன் மருத்துவ குணங்கள் சொல்லில் அடங்காது.
அதிகாலை 3 கரண்டி அருந்தி அனைத்து நோய்களில் இருந்து விடுதலை பெறுங்கள். சிறுவர் முதல் பெரியோர் வரை அருந்தலாம்.
சுவையானது, கனேடிய அங்கீகாரம் பெற்றது. இப்போது அனைத்து தமிழ் குரோசரி (Grocery) கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: Raj - 416.388.5054

நீங்கள் எதிர் பார்த்திருந்த பானம்!

Benefits:

1. இரத்தக்குளாய் அடைப்பை நீக்குகிறது
2. இரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது
3. நீரிழிவு நோயாளர்களுக்கு மிகவும் உகந்தது
4. உடலில் உள்ள தேவையற்ற கழிவை அகற்றி குடலை சுத்தமாக்குகிறது
5. உடல் பருமனை குறைக்கிறது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்
6. மலச்சிக்கலை அறவே நீக்குகிறது. வயிற்றுப் புண்ணைக் குணப்படுத்தும்
7. தூக்கமின்மையை இல்லாமல் ஆக்குகிறது.
8. உடலில் உள்ள அதிகப்படியான கொழுப்பினைக் குறைக்கிறது
9. உடல் சோர்வை நீக்குகிறது

பருகும் முறை:

நன்றாகக் கலக்கி ஒவ்வொரு நாளும் அதிகாலையில் மூன்று கரண்டி அருந்தவும்.
பொருட்கள்: உள்ளி, இஞ்சி, தேசிக்காய், வினிகர், தேன், கருஞ்சீரகம்
Note: நீங்கள் இரத்தக்குழாய் அடைப்பிற்காக மருத்துவரால் சத்திர சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டால், 6 மாத காலத்தில் இரத்தக் குழாய் அடைப்பை அறவே நீக்குகிறது.

3 ஸ்பூண்
100 ஆயுள்
3 Spoon100 Life

(சுவையானது)

ஒவ்வொருவரும் அருந்த வேண்டிய பானம்

ஆயுள் வேத ஆகம முறைப்படி தயாரிக்கப்பட்டது.

மருந்து உணவல்ல, உணவே மருந்து.

Heart Attack இல் இருந்து பாதுகாக்கிறது.

NOW $ 20
$ ~~35~~



1. Removing the blood vesse blockae.
2. regulates bood flow
3. Good for diabetes people
4. Remove your body's unnecessary wast
5. Reduces obesity and increases resistance
6. Eliminate constipation, cures ulcer
7. Reject lack of sleep
8. Excess fat in the body dissolve
9. Elima=inate body fatigue

Ingredients: Garlic, Lemon, Vinegar, Ginger, Honey and Black Jeera

Buying Locations: For Distribution Call **416-388-5054** / Montreal No: **514-589-7617**
Soon all Grocer Stores: Scarborough -Markham - Mississauga - Brampton - Ajax

Now Available Stores: **New Spiceland, Pasumai Santhi, Suncity Supermarket, Poorani Villas, Vasantham Super Market**




உலகில் பேரழிவை கொண்டு வரும் பருவநிலை மாற்றம்

கார்ப்பரேட் முதலாளிகளின் லாப வெறிக்கு பலியாக்கப்படும் பூமி



அண்மையில் வெப்பம் மற்றும் வறட்சி காரணமாக வடஅமெரிக்காவில் ஏற்பட்ட தீ, அட்லாண்டிக் பகுதி முழுவதும் புகை மூட்டத்தை ஏற்படுத்தியது. மத்திய தரைக்கடலில் நீடித்த வெப்ப அலைகளினால் மத்திய துருக்கி மற்றும் கிரீசில் பேரழிவு தரும் தீ பரவியது. சைபீரியாவில் ஆர்க்டிக் கடல் பனி குறைந்தது. பிறகு, மீண்டும் பெரிய காட்டுத்தீ ஏற்பட்டது.





கடந்த ஜூலை மாதத்தில் மட்டும், ஜெர்மனியில் இரண்டு மாதங்களில் பெய்ய வேண்டிய மழை இரண்டே நாட்களில் கொட்டித்தீர்த்தது. அதே நேரத்தில் மத்திய சீன மாகாணமான /ஹனானின் சில பகுதிகள் ஆண்டு சராசரியைவிட அதிக மழைப் பொழிவை நான்கே நாட்களில் கண்டன.

பருவநிலை மாற்றத்தால் கடந்த 2,000 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு தற்போது உலகம் மிக வேகமாக வெப்பமாகி வருகிறது. இதன் காரணமாக, உலகெங்கிலும் வறட்சி, காட்டுத்தீ, மழை வெள்ளம் போன்றவை ஏற்பட்டு மனித குலம் பல்வேறு அழிவுகளை சந்தித்து வருகின்றது. இந்நிலையில் ஐ.நா.வின் காலநிலை மாற்றம் குறித்த சர்வதேச அரசுகளுக்கு இடையேயான குழுவின் (IPCC – Intergovernmental Panel on Climate Change) அறிக்கை கடந்த ஆகஸ்ட் 9ஆம் தேதி 2021 அன்று வெளியானது. 200க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகளால் தொகுக்கப்பட்ட இந்த அறிக்கையை உலகின் 195 நாடுகள் அங்கீகரித்துள்ளன. தற்போதைய கார்பன் உமிழ்வு (Carbon Emission) விகிதம் நீடித்தால் நிலைமை இன்னும் வேகமாக மோசமடையும் என்றும் மனித இனம் இன்று தேர்வு செய்யும் வழிமுறைகளைப் பொருத்தே இவ்வுலகின் எதிர்காலம் அமையும் என்றும் இவ்வறிக்கை தெளிவுபடுத்துகிறது.

உலக வெப்பநிலை

1850 முதல் பதிவுசெய்யப்பட்ட வெப்பநிலையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் தான் உலகின் அதிகமான வெப்பம் பதிவாகியுள்ளது. ஐபிசிசி அறிக்கையில் உலகின் சராசரி வெப்பநிலை இனி 2.1 °C இல் இருந்து 3.5 °C வரை உயரும் என்று தெரிவித் துள்ளது. இது 2015 பாரிஸ் பருவநிலை மாற்றம் ஒப்பந் தத்தில் கையெழுத்திட்ட நாடுகளால் நிர்ணயிக் கப்பட்ட 1.5°C – 2°C வரம் பை விட அதிகம். சர்வதேச நாடுகள் தங்கள் கார்பன் உமிழ்வை தீவிரமாக கட்டுப் படுத்திடும் பட்சத்தில் கூட வரவிருக்கும் ஆண்டுகளில் உலக வெப்பநிலை 1.5°C வரம்பைவிட அதிகமாக உயரும் என்று அறிக்கை கூறுகிறது.

உருகும் பனிப்பாறை, உயரும் கடல் மட்டம்



1990களில் இருந்து ஆர்க்டிக் கடலில் உள்ள பனிப் பாறைகளின் உருகுதலுக்கு கார்பன் உமிழ்வு மிகப்பெரும் காரணியாய் உள்ளது. 1,000 ஆண்டுகளில் இருந்ததை விட கடந்த பத்தாண்டுகளில் ஆர்க்டிக்கடல் பனி மிக வேக மாக உருகி உள்ளது. இந்த நூற்றாண்டில் இமயமலை யில் பனி மூடிய பகுதிகள் மற்றும் பனிப் பாறைகளின் அளவுகள் குறையும் என்றும் திபெத்திய பீடபூமி மற்றும் இமயமலையில் மழைப்பொழிவு அதிகரிக்கும் என்றும் ஐபிசிசி அறிக்கை எச்சரிக்கின்றது.

உலக வெப்பநிலை உயர்வு 1.5°Cல் கட்டுப்படுத் தப்பட்டாலும், உலகெங்கிலும் உள்ள கடல் மட்டம் அடுத்த சில ஆண்டுகளில் 2-3மீட்டர் வரை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 11,000 ஆண்டுகளில் பார்த்திடாத வேகத்தில் கடல் வெப்பமடைந்துள்ளது.

1901-1971 இடைப்பட்ட காலத்துடன் ஒப்பிடுகையில் சமீபத்திய கடல் மட்ட உயர்வு விகிதம் சுமார் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. கடலோரப் பகுதிகள் இந்த நூற்றாண்டு முழுவதும் தொடர்ந்து கடல் மட்ட உயரும் என்றும், இது தாழ்வான பகுதிகளில் அடிக்கடி கடுமை யான வெள்ளம் மற்றும் கடலோர அரிப்புக்கு வழி வகுக் கும் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது. 100 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்ந்து வந்த தீவிர கடல் மட்ட மாற்றங்கள் இனி ஒவ்வொரு ஆண்டும் நிகழக்

கூடும். இதன் விளைவாக கோடிக்கணக்கான மக்கள் வசிக்கும் கடற்கரை வாழ்விடங்கள் மோசமான பாதிப் புகளுக்கு உள்ளாகும்.

ஆசியாவின் நிலவரம்

◆ 1850-1900 உடன் ஒப்பிடுகையில் குளிரின் தீவிரம் குறைந்து, வெப்பத்தின் தீவிரம் அதிகரிக்கும் போக்கு அடுத்து வரும் ஆண்டுகளில் தொடரும்.

◆ கடல் வெப்ப அலைகள் தொடர்ந்து அதிகரிக்கும்.

◆ ஆசியாவின் பெரும்பகுதிகளில் சராசரி மழைப் பொழிவு அதிகரிக்கும்.


◆ ஆசியாவின் மத்திய மற்றும் வடக்குப் பகுதிகளில், மேற்பரப்பு காற்றின் சராசரி வேகம் தொடர்ந்து குறையும்.

◆ இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் பனிப்பாறைகள் மற்றும் பருவகால பனிகாலம் மேலும் குறையும்.

◆ ஆசியாவின் உயர் மலைகளில் பனிப்பாறை உருகி மழைநீருடன் கலந்து ஓடுவது (Glacier runoff) இந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை அதிகரிக்கும். பின்னர் பனிப் பாறைகளின் இழப் பின் காரணமாக ஓட்டம் குறையலாம்.

◆ ஆசியாவைச் சுற்றியுள்ள கடல் மட்டம் உலக சராசரியை விட வேகமாக அதிகரித்துள்ளது. இந்த "சராசரி கடல் மட்டம்" தொடர்ந்து உயரும் .

◆ இந்த நூற்றாண்டில் வெப்ப அலைகள் மற்றும் ஈரப்பதமான வெப்ப அழுத்தம் மிகவும் தீவிரமாக இருக் கும்.



Projections at 1.5°C, 2°C, and 4°C global warming

Changes relative to the 1850–1900 in annual mean surface temperature, total precipitation (Dec–Feb, DJF), and total precipitation (Jun–Aug, JJA). Last column shows the total number of days per year with maximum temperature exceeding 35°C.

◆ கோடை மழை மற்றும் பருவ மழை மாறுபட்ட இடைவெளியுடன் பெய்யும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள பருவகால மாற்றங்கள், கொரோனா பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் பாதிப்பிற்கு உள்ளாக்கும்.

குறிப்பாக, இந்தியாவின் தெற்கு பகுதிகளில் மழை அதிகரிப்பு கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. தென்மேற்கு கடற்கரையில், மழைப்பொழிவு சுமார் 20 சதவீதம் அதிகரிக்கலாம். வெப்பநிலை 4 டிகிரி செல்சியஸ் அதிகரித்தால், இந்தியாவில் ஆண்டுதோறும் மழைப்பொழிவு சுமார் 40 சதவீதம் அதிகரிக்கும். சென்னை, கொச்சி, கொல்கத்தா, மும்பை, சூரத் மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய ஆறு இந்திய துறைமுக நகரங்களில் கடல் மட்டம் 50 செமீ உயர்ந்தால், கிட்டத்தட்ட 2.86 கோடி மக்கள் வெள்ளத்தினால் பாதிக் கப்படுவார்கள். எனவே வெப்ப அலைகள், புயல்கள், சீரற்ற பருவ மழை, குடிநீர் பற்றாக்குறை, வெள்ளம் மற்றும் ஆக்ஸிஜன் பற்றாக்குறை என்று அனைத்து வகையான பேரிடர்களுக்கும் அரசு தகுந்த முன்னேற்பாடுகளுடன் தயாராக இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

இன்று நாம் அனுபவித்து வரும் வெப்பமயமாதலில் 25 சதவிகிதத்திற்கும் மேலான வெப்பத்தின் காரணம் மீத்தேன். இது, வளிமண்டலத்தில் வெளியிடப்பட்ட 20 ஆண்டுகளில் கார்பன் டை-ஆக்சைடை விட 80 மடங்கு அதிக புவி வெப்பமடைதலை ஏற்படுத்தியுள்ளது.


ஐபிசிசி கடந்த 30 ஆண்டுகளாக புவி வெப்பமடைதலின் ஆபத்துகளை பற்றி எச்சரித்து வந்தாலும், மாற்று எரிசக்தி வழிமுறைகளுக்கும் கார்பன் உமிழ்வை நிறுத்து வதற்கும் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கங்கள்



இன்னும் எடுக்கவில்லை. இதன் விளைவாகவே பல நூற்றுக்கணக்கான உயிரிழப்புகள் மற்றும் பல்லாயிரம் கோடி பொருளாதார இழப்புகளும் ஏற்பட்டுள்ளன.

இந்த பருவநிலை மாற்றம் குறித்த அறிக்கையை "மனித இனத்திற்கான சிவப்பு குறியீடு" என்று ஐ.நா தலைவர் கூறி உள்ளார்.

கார்ப்பரேட்டுகளின் தீராத பசி



பூமி பந்தின் நுரையீரல் என்று அழைக்கப்படும் அமேசான் காடுகளை கார்போரேட்டுகளின் லாப பசிக்காக தொடர்ந்து அழிக்கப்படுகிறது. மாட்டிறைச்சி ஏற்றுமதியில் உலகின் முதல் இடத்தில உள்ள பிரேசில் அமேசான் காடுகளை அழித்து மாட்டு தீவினத்திற்காக சோயா பயிர் செய்து வருகிறது. சுமார் 20மூ காடுகள் ஏற்கனவே அழிக்கப் பட்டுவிட்டன. 25%க்கு மேல் அழிக்கப்பட்டால் அமேசான் காடுகளை மீட்டெடுப்பது கடினம் என்று வல்லுநர்கள் எச்சரித்து வருகின்றனர். பிரேசிலின் அதிபர் பொல சோனரோ தங்கள் நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக அமேசானை அழித்திட தங்களுக்கு முழு உரிமை உள்ளது என்று பேசி வருகிறார்.

தொழில் புரட்சியின் வெற்றி சின்னமாக கொண்டாடப்படும், உலகின் மிக பெரிய தொழில் துறையான, ஆட்டோ மொபைல் துறை மட்டுமே புவி வெப்பமயமாவதற்கு பெரும் பங்களிக்கிறது. பன்னாட்டு ஆட்டோமொபைல் கார் போரேட் டுகள் தங் கள் எல் லையில் லா லாப குவியலுக்காக உலகம் முழுவதும் தனி நபர் போக்கு வரத்து வழக்கத்தை தொடர்ந்து கவர்ச்சிகர விளம்பரங்கள் மூலம் வளர்த்து வருகின்றனர். ஒப்பீட்டளவில் குறை வான மாசு வெளியிடும் பொது போக்குவரத்து முறையை மக்களின் சிந்தனையில் இருந்து அகற்றிவிட்டனர். இதன்மூலம், ஆட்டோமொபைல் நிறுவனங்கள் தங்கள் வாகன விற்பனை செய்து லாபம் கொழுக்கின்றனர்.

வாகன உற்பத்தியில் அதிகமாக பயன்படுத்தப்படுவது இரும்பு மற்றும் அலுமினியம். உலகம் முழுவதும் இந்த கனிமங்களை தோண்டி எடுக்க இயற்கை நிலைகள் அழிக்கப்படுகின்றன. அடுத்தபடியாக, நெகிழி மற்றும் ரப்பர் பயன்படுத்தப்படுகிறது. இந்த துறைக்கான ரப்பர் உற் பத்திக்காக அழிக்கப் படும் காடுகள் ஏராளம். பயன்படுத்தப்பட்ட வாகனங்களில் இருந்து கழியும் நெகிழிகளின் குவியல் ஒரு புறம் வளர்ந்து கொண்டே உள்ளது.

இதை தாண்டி, இந்த வாகனங்களில் பயன்படுத்தப்படும் எரிபொருளுக்காக அழிக்கப்படும் இயற்கை ஒருபுறமிருக்க அவை கக்கும் மாசு மறுபுறம். மலிவு கடன்கள் மூலம் நுகர்வோர்களிடம் விற்கப்படும் வாகனங்களை இயக்கிட சாலைகள் போதுவதில்லை. இதற்காக, சாலை விரிவாக் கம் செய்திட அழிக்கப்படும் மலை பாறைகள். இப்படியாக ஒரு துறையால் ஏற்படும் இயற்கை பாதிப்புகளே ஏராளம்.

மற்றொரு உதாரணமாக, கைபேசி உற்பத்தி துறையை கூறலாம். ஓராண்டில் இரண்டு அல்லது மூன்று கைப் பேசிகளை மாற்றும் நுகர் வு கலாச் சாரத் திற் கு கார் பொரேட் நிறுவனங்கள் மலிவான கடன்கள் மூலம் உருவாக்கி உள்ளன. கைபேசி உற்பத்தியில் கோபால்ட், சிங்கு, கேட் மியம், தாமிரம், லித் தியம் போன்றவை பயன்படுத் தப்படுகின்றன. இதில் பல அரிய வகை கனிமங்கள். கோபால்ட் உற்பத்திக்காக ஆப்பிரிக்க காங்கோ நாட்டு காடுகள் அழிக் கப் படுகின் றன. கார் ப் பரேட்களால் உள் நாட்டு போர்களும் தூண்டப் படுகின்றன.

இப்படி இயற்கையை அழித்து உருவாக்கப்படும் ஒரு கைபேசியை அல்லது வாகனத்தை உடனுக்குடன் மாற் றக்கூடிய நுகர்வு கலாச்சாரத்தை தங்கள் தொடர் லாப வளர்ச்சிக்காக கார்ப்பரேட்கள் வளர்த்து வருகின்றன. கார்ப்பரேட்களின் லாப குவியலே பருவநிலை மாற்றத் திற்கான அடிப்படை காரணி. அந்த கார் ப் பரேட் முதலாளிகளின் லாப பசியை மையப்படுத்திடாமல் இயற் கை அழிவை பேசுவது ஏமாற்று வேலை.

நன்றி - மே 17 குரல் இணையம்



437-345-4203

DESIGNS SERVICES

Advertisement Design
Logo Designs
Banner Design
Business Card Design
Poster Design
Flyers Design
Brochure Design
&
Much more...

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

WEXFORD
WELLNESS CARE INC.



We treat all car accident injuries!

- Massage Therapy
- Physiotherapy
- Orthopaedic
- Acupuncture
- Chiropractic
- Orthotic

We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)

Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location

Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)



வாங்குவீர்... வாழ்வு தருவீர்!

பெண் தலைமைத்துவ குடும்பங்களினதும்
போரில் அவயங்களை இழந்தோருக்கான
தற்சார்புப் பொருளாதார மேம்பாடு எமது நோக்கம்

முன்னாள் போராளிகளினதும் துணையிழந்த பெண்களினதும்
தயாரிப்புகள் கலப்படங்கள் அற்ற பாரம்பரிய முறைத் தயாரிப்புகள்,
உடல் நலம் காப்பவை.
நம் தாயகப் பொருட்களைக் கொள்வனவு செய்து தாயக மக்களின்
பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் உள்ளங்களுக்கு நன்றி

முள்ளிவாய்க்காலில் இருந்து...



"உணர்வினில்
தாய் மண்
வாசமும்
உணர்வோடு
தாய் மண்
நேசமுமாய்"



Tel: 416-558-2111
nam.thayagam@gmail.com
3031 Markham Road, Unit 35, Scarborough. M1X 1L9 (Markham & Passmore)

சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

"இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்."



Amman Women & Child Development Center
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai 4 67 490 4955

Hermans Girls Home
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai 97 76 058 5344

Jesus Lives Girls Home
Main St., Kalmuanai - Amparai 01 94 67 492 1161

Methodist Girls Home
Wesly School Rd, Kalmuanai - Amparai 94 67 222 9182

RKM Sharatha Girls Home
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai 05 94 67 222 3600

Seephe Divi Child Delelopment Centre
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai 94 67 226 1144

Sri Indasara Child Development Centre
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai 94 27 562 2919

St. Maryís Boys Home
Yard Rd, Kalmunai - Amparai 01 94 71 354 5782

Swami Vipuilanantha Boys Children Development Centre
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai 94 67 227 7514

Canaan Harvest Childrenís Home
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla 94 77 229 2022

Up Country Children Home
19/6, Badulupitiya Rd - Badulla 94 55 222 3335

Arutpani Girls Home
Beach Rd, Navakkuda - Batticaloa 94 77 6849

Assisi Boys Home
Main Rd, Kurukulmadam - Batticaloa 94 65 225 0313

Benthel Boys Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Benthel Girlís Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Bethel Girls Children Home
Vipulanada Rd, Valichenai - Batticaloa 94 77 515 3078

Eravur Children Care Home
Meerakerny Rd, Eravur - Batticaloa 94 77 996 6345

Good Shepherd Children Home
Post Office Rd, Valaichenai - Batticaloa 94 65 225 7400

Hari Boys Home
New Kalmuani Rd - Batticaloa 94 65 222 3653

Jeevananthan Girls Home
Main Rd, Pudukuduirippu - Batticaloa 94 65 365 0438

Kattankudy Boys Home
Kattankudy 01 - Batticaloa 94 65 224 5308

London Sivan Kovil Girls Home
Main Rd, Settipalayam - Batticaloa 94 65 205 6336

Managayarkarasi Girls Home
Maruthadi Rd - Batticaloa 94 65 205 7310

Manikkavasagar Boys Home
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa 94 77 191 3037

Methodist Girls Home
Bar Rd, Kotamunai - Batticaloa 94 65 222 5402

Miyani Boys Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 459 0298

Miyani Girls Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 792 6410

Pariyowan Boys Home
Trinco Rd, Santhurukondan - Batticaloa 94 05 222 2524

Ramakrishana Boys Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Ramakrirushana Girls Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Sakthi Girls Home
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa 94 65 225 0745

Shakthi Girls Home
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa 94 65 364 2290

Shanthi Bawan Girls Home
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa 94 65 222 2524

Spaks Girls Home
Main Rd, Periya Kallaru - Batticaloa 94 67 222 1875

Thilahawathiyar Girls.Children Home
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa 94 77 629 8461

Thilahawathiyar Girls Home
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa 94 65 225 1166

Thiruniyanasampathar Gurukulam
Main Rd, Kaluthavalai - Batticaloa 94 65 225 0277

Trust Village Womens Development Center
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa 94 76 789 7573

Vidhyajothi Boys Home
Central Rd - Batticaloa 94 77 481 6576

Vipulanantha Children Home

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101
Vivehanada Children Home
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442
Yoga Suwami Saiva Girls Children Home
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420
St.Joseph Elders Home
Trinco Rd- Batticaloa 94 71 851 1951
Swami Vipulananthar Elder Home
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202
Ozanam Centre
Sathurukondan - Batticaloa 94 65 365 8636
Uthayam Association of Visually Handicapped
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

Elim Boys Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824
Elim Girls Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962
Forth Sq Girls Child Development Center
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109
Hindu Board Boys Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304
Hindu Board Girls Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082
Holy Family Girls Child Development Center
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270
Karunai Girls Child Development Center
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334
Karunalayam Annai Krishnabai Girls C. D. C.
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873
Karunalayam Boys Children Development Center
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002
Salvation Army Girls Child Development Center
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696
SOS Village Child Development Center
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711
Sri Pramanatha Girls Child Development Center
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004
Thurkkapuram Girl Child Development Center
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894
Valluvar Girlsí Child Development Center
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513
Mother Teresa Elder Home Amithi Illam
Kondavil - Jaffna 94 21 223 0302
Sivapoomi Elders Home
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230
Sivapoomi School ForChildren with Special Needs
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894
Vaalvagham-Home for the Vissually Handicapped
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

A**ruvucholai Boys Child Development Center**
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313
Aropanam Boys Child Development Center
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088
Gandhi Nilaya Chidren Home & Training Centre - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461
Holy Family Girls Child Development Center
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115
Karuna Nilayam Girls Child Development Center
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836
Mahadeva Saiva Boy Child Development Center
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121
Mahadeva Saiva Girls Child Development Center (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119
Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118
Sencholai Boysí Child Development Center
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308
Sencholai Girlí Child Development Center
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504
Thangamma Elders Home -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619
Trist Children Home
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694
Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162
Association. to Empowerthe Special Needs Children
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776
Killinochchi Special Needs Newtwork
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

Annai Girlsí Child Development Center
Uppukulam - Mannar 94 23 222 2483
Anpu Sakotharar Boys Child Development Center
Keeri - Mannar 94 77 534 4427
Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center
Pesalai - Mannar 94 23 205 0095
Sivanarul Boys Child Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998
Sivanarul Girls Children Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804
Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

Saradha Mission Child Development Center
Kirigalpotta - Matale 94 66 205 1721
St. Francis Child Development Center
Vihaara Rd - Matale 94 77 438 4851

Anpu Boysí Child Development Center
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502
Barathy GirlChild Development Center
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234
Ladani Girls Child Development Center
Silawaththai - Mullaitivu 94 77 422 8853
Nallayan Girls Child Development Center
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034
Pari Girlsí Child Development Center
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034
Iniya Vazhvu Illam
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

Happy Home Child Development Center
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174
Maranatha Child Development Center
Hatton - Nuwara Eliya 94 51 222 2489
Rainbow Child Development Center
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680
Shalom Child Development Center
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

Annai Saratha Children Home
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506
Anpu Illam
167, Central Rd - Trincomalee 94 26 222 1214
Four Square
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170
Grace Girls
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644
Hasanath Boys
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
Hasanath Girls
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
My Fatherís House Boys Children Homes
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861
Rawlathul Athfal
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438
Rewathe Child Development Center
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328
Sivayogasamayam Swami Gangadaranatha Children Home
64 Main St. - Trincomalee 94 26 222 2049
Sri Sanmuga Boys 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234
Sri Sanmuga Girls 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521
Thapovanam Boys
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
Thapovanam Girls Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
Deva Anpu Children Home
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859
Hindu Anpakam Children Home
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683
Salvatorian Girls Home
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577
Sri Ahilandeswary Children Home Kovilkulam - Vavuniya 94 24 222 1685
Mother Teresa Elder Home Pampaimadu -Vavuniya 94 24 205 4494
Sivan Elders Home
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827
Thanagamma Eleders
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766



மட்டக்களப்பு மாவட்டம் மயிலந்தனையில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 ஆம் திகதி சிங்கள இராணுவத்தினர் நடத்திய தாக்குதல் ஒன்றில் ஒரு வயது தொடக்கம் 25 வயது வரை யிலான சிறுவர்கள், ஆண்கள் பெண்கள் உள்ளிட்ட 35 பேர் கொல்லப்பட்டனர்.

இராணுவ கட்டளைத் தளபதி உள்ளிட்ட 7 இராணுவத்தினர் விடுதலைப்புலிகளின் கண்ணிவெடி தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டமைக்குப் பழி தீர்க்கும் வகையிலேயே மயிலந் தனை கிராமவாசிகள் மீது இராணுவத்தினர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

மயிலந்தனை கிராமத்திற்குள் புகுந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், கத்திகள் கோடரிகள் என்பவற் றினால் வெட்டியும் கொத்தியுமே கிராமவாசிகள் படுகொலை செய்யப்பட்டதாக கண்கண்ட சாட்சிகள் தெரிவித்திருந்தனர்.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற அடையாள அணிவகுப்பு ஒன்றில் இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக 24 சிங்கள இராணுவத்தினர் அடையாளம் காட்டப்பட்டிருந்தனர். பின்னர் இந்த வழக்கு பொலன்னறுவைக்கும் அங்கிருந்து கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கும் மாற்றப்பட்டிருந்தது. இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த இராணுவத்தினருக்கு பொலன் னறுவையில் பாதுகாப்பு இல்லையென்று காரணத்தைக் காட்டியே வழக்கு கொழும்புக்கு மாற்றப்பட்டிருந்தது.

கொழும்பில் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணைகளில் அன்றைய யுத்த மோதல் சூழலில் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு மத்தியில் கண்கண்ட சாட்சிகளான 30 பேர் கொழும்பு மேல் நீதிமன்றத்திற்குச் சென்று சாட்சியங்கள் அளித்திருந்தனர். இந்த வழக்கும் எதிரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க 7 பேர் கொண்ட அறங்கூறும் அவையோர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. விசாரணைகளின் முடிவில் எதிரிகளான 24 இராணுவத்தினரும் குற்றமற்றவர்கள் என அறங்கூறும் அவையயோரினால் தீர்மானிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

அறங்கூறும் அவையோரின் முடிவுகளை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்த வழக்கு விசாரணைக்குத் தலைமை தாங்கிய தமிழராகிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி வேண்டுகோள் விடுத்த போதிலும், சுமார் 3 மணித்தியாலங்கள் நடைபெற்ற ஆலோசனைகளின் பின்னர், அறங்கூறும் அவையினர் மீண்டும் இந்த வழக்கின் எதிரிகள் குற்றமற்றவர்கள் என உறுதி செய்திருந்தனர்.

1992 ஆம் ஆண்டு நடைபெற்ற மயிலந்தனை படுகொலை களுக்கு சுமார் பத்து வருடங்களின் பின்னர் 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி அந்த வழக்கின் எதிரிகள் குற்றமற்றவர்கள் என்ற தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்தப் படுகொலைச் சம்பவமானது, அன்றைய காலப்பகுதியில் பெரும் பதட்டத்தையும் பதைபதைப்பையும் தமிழர் பிரதேசங் களில் ஏற்படுத்தியிருந்தது. கண் கண்ட சாட்சிகள் மட்டுமல் லாமல், சிங்கள இராணுவத்தினரின் தாக்குதலில் படுகாய மடைந்து பின்னர் உயிர் நீத்தவர்களின் மரண வாக்குமூலங் களும் கூட, கொழும்பு மேல் நீதிமன்ற விசாரணைகளின் போது முன்வைக்கப்பட்டிருந்தது. ஆயினும் குற்றவாளிகள் என எவரும் காணப்படவில்லை. தண்டனை வழங்கப்படவு மில்லை. மாறாக எதிரிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த தீர்ப்பையடுத்து, மயிலந்தனை கொலை வழக்கை மேன்முறையீடு செய்ய வேண்டும் என்று அப்போதைய சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆயினும் அவர் அறங்கூறும் அவையோரின் முடிவுக்கமைய வழங்கப்படுகின்ற தீர்ப்பு ஏற்றுக்கொள்ளப்பட் வேண்டும் என்ற மரபு ரீதியான வழக்கத்தைக் காரணம் காட்டி மேன்முறையீடு செய்ய மறுத்துவிட்டார்.







திராய்க்கேணி படுகொலை நாள் - 06.08.1990

அம்பாறை மாவட்டத்தில் தமிழரை இனச்சுத்திகரிப்பு செய்த நாள். மறக்கமுடியாதா விசேட அதிரடிப்படையும்ஈ முஸ்லிம் ஊர்காவல் படையின் பாசிச படுகொலைக்கு துணைபுரிந்த கறுப்பு அத்தியாயம். சுற்றிவர வயல்நடுவெ இயற்கை வனப்பான கற்றறிந்த தமிழரை அட்டப்பள்ளத் துடன் சார்ந்த தமிழ் கலாசரத்தை எடுத்துக்காட்டிய தமிழர் பூமி.

சுற்றிவர சகோதரர் என்று பிட்டும் தேங்காப்பூவும் ஒற்றுமை பேசி மொத்தமாக ஒரு இனத்தின் வேரின் சிறுவர் கர்ப்பணி பெண்களின் கற்பு சூறையாடப்பட்டு தோல்மேல் தோல் கைபோட்டு பழகிய பல முஸ்தாபக்கள் முகமட்டால் கபலீகரம் செய்யப்பட்ட பூமி.

அக்கரைப்பற்று பாலமுனை முஸ்லிம் ஒரு புறம் அட்டாளச் சேனை முஸ்லிம் மறுபுறம் மாவடிப்பள்ளிருந்து கல் முனைக்குடி முஸ்லிம் ஊர்கவால் படைகளால் சுற்றிவர எங்கும் ஓடமுடியாமல் மடத்தயடி மீனாட்சியம்மனுக்கு இரத்த அபிசேகம் செய்த நாள்.

ஓரிரண்டு குடும்பம் காரைதீவு தமிழ்பூமியை தேடிவர நிந்தவூர் சதுப்பு நிலத்தினூடாக ஓடிவரும் போது கல் முனைக்குடி மாவடிப்பள்ளி காக்காமாரால் சதுப்புநிலத்தில் புதைத்து மண்ணுக்கு இரையாக்கிய நாள்.

ஒரு ஊரின் அச்சானியான ஆலயம் பாடசாலை, வயல் தீக்கிரையாக்கப்பட்டு அம்பாறை மாவட்ட தமிழரை சிறுபான்மையாக்கியநாள்.

முஸ்லிம் ஜிகாத் ஊர்காவல் படையும் காரைதீவு விசேட அதிரடிப்படையும் சேர்ந்து 47 தமிழர்களைப்படுகொலை செய்தனர்.

சிறப்பு இராணுவத்தினரின் உதவியுடன் திராய்க்கேணி கிராமத்தினுள் நுழைந்த முஸ்லிம்கள் அங்குள்ள கோயிலில் தஞ்சமடைந்திருந்த 47 தமிழர்களை படுகொலை செய்தனர். வீடுகளினுள் வைத்து முதியவர் கள் பலர் உயிருடன் தீவைத்துக் கொளுத்தப்பட்டனர். 350 வீடுகள் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் தீக்கிரையாக் கப்பட்டன.

சரோஜா என்ற 13 வயதுச் சிறுமி ஒருத்தி கடத்தப்பட்டு பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டாள். காலை ஏழு மணிக்கு ஆரம்பமான இப்படுகொலை நிகழ்வுகள் மத்தியானம் வரை நீடித் திருந்தது. இப்படுகொலைகளை அடுத்து அக் கிராமத்தில் இருந்து வெளியேறிய மக்கள் காரைதீவு அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டு 4 ஆண்டுகளுக்குப்



பின்னரே ஊர் திரும்பினர்.

இப் படுகொலைகள் குறித்து முழுமையான விசாரணைகள் வேண்டும் எனக் குரல் கொடுத்த திராய்க்கேணி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஈ. மயிலைப்போடி என்பவர் 1997 ஆம் ஆண்டில் படுகொலை செய்யப்படார்.

2003 அக்டோபர் 12 ஆம் நாள் திராய்க்ணோ பெரியதம் பிரான் கோயில் பகுதியில் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் அங்குள்ள குழி ஒன்றில் மனித எச்சங்கள் பலவற்றக் கண்டுபிடித்தனர். இவ்வெச்சங்கள் திராய்க்கேணிப் படுகொலைகளில் கொல்லப்பட்டவர் களினதாய் இருக்கலாம் என உள்ளூர் மக்கள் தெரிவித் தனர். இது தொடர்பான விசாரணைகள் எதுவும்



இடம்பெறவில்லை.

முன்னிலையில் சாட்சியமளித்திருந்தார்.



கொல்லப்பட்டவர்களில் மூன்று குழந்தைகளும் அடங் கியிருந்தன. எட்டு மாத குழந்தை விஜயகுமார், 3மாத குழந்தைகளான பிரியா, வேணுதாஸ் ஆகியோரையும் இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவல்படையினரும் இரண்டு துண்டுகளாக வெட்டி எரியும் நெருப்பில் போட்டனர் என இச்சம்பவத்தை நேரில் கண்டவர் தெரிவித்திருந்தார். இச்சம்பவத்தில் 8 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். கொல்லப் பட்டவர்களில் பெண்களில் இவர்கள் மிகக்கொடுமையாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப் பட்டதாக கூறுப்படுகிறது. 25 வயதுடைய ஜீவமலர் என்ற பெண்ணின் கையில் இருந்த மூன்று மாத குழந்தை பிரியாவை பறித்தெடுத்து வெட்டி வீசிய முஸ்லிம் ஊர்காவல் படையினர் அப்பெண்ணை இழுத்து சென்று பாலியல் பலாத்காரம் செய்த பின் வெட்டி கொன்றனர்.

இது போன்று கிழக்கில் பல நடைபெற்றது.

மறுநாள் அம்பாறை மாவட்டத்தின் தமிழ் பிர தேசங்களிலும் முஸ்லிம் ஊர்காவல் பாடையினரால் கொடுறம் நடத்தப்பட்டது.

பரம்பரை பரம்பரையாகத் தமிழர்கள் வாழ்ந்து சூறை யாடப்பட்டு இன்று சிதைவுக்குள்ளான கிராமங்களாகப் பாலமுனை, பாணமை, மீனோடைக்கட்டு, ஒலுவில், நிந்தவூர், சம்மாந்துறை, சரவாகு, தீகவாவி, மாந் தோட்டம், கொண்டா வெட்டுவான், பூரணி, செம்மணிக் குளம், தங்கவேலாயுதபுரதம், உடும்பன்குளம் முனலானவை காணப்படுகின்றன.

மத வணக்கத்தலங்களில் நிகழ்த்தப்பட்ட இந்த வன் முறைத் தாக்குதல்கள் தமிழ், முஸ்லீம் உறவுக்குத் குந் தகம் விளைவிக்கும் செயல்களாக அமைந்தபோதிலும் எவராலும் தடுத்து நிறுத்தப்படவில்லை; கண்டிக்கப்பட வில்லை.

இவை தவிர இக்காலப்பகுதியில் தமிழ், முஸ்லீம் இன மோதல்களால் ஏராள மான இந்து ஆலயங்கள் சுவடுகள் இன்றி அழித்தொழிக்கப்பட்டன.

திராய்க்கேணி தாக்குதலால் அங் கிருந்த மக்கள் தற்போது கூட தமது ஊர் அடையாளத்தை இழந்து கல்முனை, காரைதீவு, திருக்கோயில் போன்ற பிரதேசங்களில் வாழ்கின்றனர் வேதனையுடன்.

இந்த போர்க்குற்றங்கள், இனப் படுகொலைகள் பற்றி தமிழர் தரப்புக் கூட இப்போது பேசுவதை மறந்து விட்டதோ என்று எண்ணத்தோன்றுகிறது.

ஆனால் இதில் தமிழர் ஒன்றை உணரவேண்டும் யாழ்ப்பாணத்தில் உயிராபத்துகள் இல்லாமல் முஸ்லிம் களை வெளியேற்றியதற்கு விடுதலைப்புலிகள் பலதடவை மன்னிப்பு கேட்டனர். ஆனால் தமிழர் மீது முஸ்லிம்களால் செய்யப்பட்ட கொலைக்கு எந்த பள்ளிவாசல் முஸ்லிம் அரசியல் வாதிகள் மன்னிப்பு கேட்காதது மிக வேதனைப் படவேண்டியது. — புனிதபூமி



HDVA வழங்கும்

Event Sponsor



Matt Nadarajah
Sales Representative
647-968-6136

August 20 வெள்ளி
August 21 சனி
August 22 ஞாயிறு

SUMMER
Taste of தமிழ்
TAMIL

வர்த்தகச் சாவடிகள்
சிறுவர் விளையாட்டுக்கள்
கலை நிகழ்ச்சிகள்

ஸ்காபரோ முற்றவெளியில்
Morningside & Finch

ALL DAY FREE ADMISSION

Mega Tuners
Supersons

Powered by
Ceylingo Financial Group
MORTGAGE - RE FINANCE
Siva Ratnasingam
416 520 1214, 416 430 0111

Platinum Sponsor
JASMITHA JEWELLERY
JKR SALON & VIDEO

416.558.1579 | 437.245.7404

மூதூர் தன்னார்வ தொண்டு பணியாளர்களின் படுகொலை

04.08.2006



மாவிலாறு யுத்தம் தொடங்கப்பட்டு சுமார் நான்கு நாட்களுக்குள் திருகோணமலை மாவட்டத்தை மாத்திரமல்ல, உலக நாடுகளையே கதிகலங்க வைத்த மூதூர் படுகொலையென வர்ணிக்கப்படும் அக்ஷன் பாம் தொண்டர்களான 17 பேர் கொல்லப்பட்டடார்கள். அவர்களின் உயிர்கள் பற்றிக்கப்பட்டு இன்றுடன் 15 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

இப்படுகொலையில் அக்ஷன் பாம் தொண்டர்களான முத்துலிங்கம் நர்மதன், சக்திவேல் கோணேஸ்வரன், ரிச்சட் அருள்ராஜ் சிங்கராஜா பிறீமஸ், ஆனந்தராஜா மோகனதாஸ் ரவிச்சந்திரன், ரிஷிகேசன், கனகரத்தினம் கோவர்த்தனி, கணேஷ் கவிதா, செல்லையா கணேஷ் சிவப்பிரகாசம் ரொமிலா, வயிரமுத்து கோகிலவதனி, அம்பிகாவதி ஜெயசீலன், கணேஷ் ஸ்ரீதரன், துரைராஜா கேதீஸ்வரன், யோகராஜா கோடீஸ்வரன், முரளீதரன் தர்மரட்ணம், ஏ.எல். மொகமட் ஜப்பா, ஆகியோர் படுகொலை செய்யப்பட்டார்கள்.



மூதூர் பொது வைத்தியசாலைக்கு அருகில் இயங்கிவந்த அக்ஷன் பாம் எனும் சர்வதேச தொண்டர் நிறுவனத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த மேற்படி 17 பணியாளர்களையும் ஆயுதம் தரித்த சீருடைக்காரர்கள் (சிறீலங்கா ஆக்கிரமிப்பு படை) நிறுவன வளாகத்தக்குள் நுழைந்த நிலத்தில் குப்புறப்படுக்கப் பண்ணி பின்பக்கமாக தலையில் சுட்டு படுகொலை படுத்தியதாக அன்றைய செய்திகள் தெரிவித்தன.

இந்தப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டபோது தாங்கள் கடமையாற்றும் சர்வதேச தொண்டர் நிறுவனத்தை அடையாளப்படுத்தும் சீருடைகள் அணிந்து இருந்ததுடன் நிறுவன வளாகத்துக்குள்ளேயே பல நாட்கள் தங்கியிருந்துள்ளனர். மாவிலாறு யுத்தம் மூண்டதன் காரணமாகவும் உக்கிரமான போர் வெடித்த நிலையில் வெளியில் செல்ல முடியாமலும் மாற்றார் வந்து பாதுகாப்பு வழங்க முடியாத நிலையில் நிறுவன வளாகத்துக்குள் சுமார் மூன்று நாடகள் உணவின்றி, உறக்கமின்றி, பாதுகாப்பைத் தேடமுடியாமல் அடைபட்டுப்போய்க் கிடந்த அவர்களுக்குத்தான் ஆகஸ்ட் 4ஆம் திகதி அந்தக் கொடூரம் நடந்தது. இப்படுகொலையில் பலியானவர்களின் மணம் புரியாத 4 இளம் பெண்கள், ஏனைய 13 போரும் ஆண்களாவர்.

படுகொலை செய்யப்பட்ட பணியாளர்கள் விபரம், இப்படு கொலையைக் கேள்வியுற்ற பல்வேறு சர்வதேச அமைப்புக்கள், மனித உரிமை ஸ்தாபனங்கள், ஆர்வலர்கள், கதிகலங்கிப் போனர்கள், சர்வதேச செஞ் சிலுவைச் சங்கம் ஐ.நா. வின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் ஆலயம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட்ட பல அமைப்புக்கள் இப்படுகொலையை, வன் மையாகக் கண்டித்தன. மனித குலவரலாற்றில் கண்மூடித்தனமான காட்டுமிராண்டித்தனம் என அவை சாடியிருந்தன.


அக்கொடூரக் காட்சியைப் பார்த்த சிலர் இப்படி விவரணம் செய்தார்கள். மனித மூளைகள் தரையெல்லாம் சிதறிக் கிடந்தன. மனித சரீரத்தின் உன்னதமான பார்வை மணிகள் பரவிக் கிடந்தன என அக்காட்சியை சம்பவம் நடைபெற்றதற்குப் பின் பார்த்தவர்கள் அழுது புலம்பியதாக அந்நாளிலே செய்தி வெளியிட்ட ஏடு ஒன்று தெரிவித் திருந்தது. கடந்த 26 வருடகால வரலாற்றில் இவ் வாறானதொரு கொடுமையான படுகொலை நடந் ததில்லையென பிரான்ஸ் நாட்டில் இயங்கி வரும் பட்டினிக்கு எதிராக செயற்பட்டுவரும் அமைப்பான ACF தெரிவித்திருந்தது.

ஆண்டுகளாகிய தீர்வு கிடைக்காத மூதூர் தன்னார்வ தொண்டு பணியாளர்களின் படுகொலைகள்!





துயரத்திலே துடிக்கும் தமிழீழத்துக்கு அயர்லாந்து சொல்லும் வரலாறு...



20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அயர்லாந்தில் பல இயக்கங்கள் தோன்றின, பிரித்தானியாவுடன் பொருந்தி ஒன்றாக வாழலாம் என்று பேசும் ஐக்கிய வாதிகள். சுயாட்சிக் கோரிக்கை அணியினர். பிரிந்து வாழ்பதே வழியெனப் பேசும் குடியரசுவாதிகள் என மூன்று அணிகள் முறைத்து வளர்ந்தன.

போராட்டத்தின் கூர்மை பிரித் தானியாவை அச்சுறுத்தத் தொடங்கிய வேளையில் மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சியை அயர்லாந்துக்கு வழங்கலாமென 1880 களின் நடுப்பகுதியில் அன்றைய லிபரல் அரசாங்கத்தின் ஒருபகுதியினர் குறிப்பிட்டனர்.

1885 இல் இத்தகைய சட்டமூலம் ஒன்று பொதுமக்கள் சபைமுன் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டமூலம் பட்டபாடு, தமிழ் மக்களின் பேரால் சிறீலங்காவில் கொண்டுவரப்படும் சட்டமூலங்கள் பட்ட, படுகின்ற, படப்போகின்ற பாட்டுக்குச் சற்றும் சளைத்ததல்ல. பிரிந்து பேசிப் பேசியே முதகிற் குத்தமுயலும் அரசியற் சாணக்கியத்தின் அவதாரமாகவே இந்தச் சட்டமூலமும் விளங்கியது.

சுயாட்சிச் சட்டமூலம் பொதுமக்கள் சபையால் மறுக்கப்பட்டது. பெரும்பான்மை வாக்குகளினாலே தோற்கடிக்கப்பட்டது. 'இதை நிறைவேற்றியே தீருவேன்' என வீரமுழக்கமிட்டார் லிபரல் அரசாங்கப் பிரதமர். 1893 இல் பொதுமக்கள் சபையில் 'சட்டமூலம்' நிறைவேற்றப்பட்டது. ஆனால், பிரபுக்கள் சபை அதை மறுத்துப் புறந்தள்ளியது. அடுத்துவந்த 'பழைமைவாத அரசு' நெய்யொழுகப் பேசி, நெய்போலவே வழுக்கி, சுயாட்சிக் கொள்கையின் முனை முறிக்கும் வேலையிலே திறமையாகச் செயற்பட்டது. பேச்சுக்கள், முறிவுகள், ஒப்பந்தங்கள் கிழிவுகள், சட்ட வரைபுகள், ஏமாற்றுக்கள் என்று 1948 இற்குப் பின்னர் சிங்களப் பேரினவாதத்தாற் செய்யப்பட்ட, செய்யப்படுகின்ற ஏமாற்று வேலைகளை எப்படித் தமிழர்கள் படித்தார்களோ அயர்லாந்தினரும் அப்படியே படித்தார்கள் தமிழ் அரசியல்வாதிகள் எப்படி ஏமாந்தனரோ அவ்வகையிலேயே அயர்லாந்து அரசியல்வாதிகளும் ஏமாந்தனர்.

பேச்சுவார்த்தைகளால் இனிப்பயனில்லையெனப் புரிந்துகொண்ட அயர்லாந்து இளைஞர் அரசியலிலே தீவிரங்காட்டத் தொடங்கினர். ஏமாந்தவர் முதுகிலே எப்போதும் சவாரிவிடத் தயங்காத பிரித்தானியா, எழுந்து குமுறுகின்ற விடுதலைச் சூறாவளியைத் தணிக்கும் முயற்சியில், 'சில உரிமைகளை வழங்கும்' சீர்திருந்தங்கையைச் செய்ய முன்வந்தனர்.

பெரும்வரையறைகளுடன் 1914 இல் சுயாட்சிச் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டது. சயாட்சியவாதிகள் முழுநிறைவோடு தலையசைத்தாலும் குடியரசுவாதிகள் போர்க்கொடி தூக்கினர். முற்றுமுழுதான குடியரசு ஒன்றே அயர்லாந்தை மீளவிக்கும் என முழங்கத் தொடங்க, சுயாட்சி வாதிகளுக்கும் குடியாட்சி வாதிகளுக்குமிடையே முரண்பாடு பெருகத் தொடங்கியது. இரண்டு அணியினருக்கும் சமரசம் செய்ய இடையில் நுழைந்தவர் பூனைகளுக்கு அப்பம் பகிர்ந்து கொடுத்த குரங்காகினர். குடியரசை நேசிக்கும் சில தீவிர இயக்கங்கள் ஆயதக் கிளர்ச்சியில் ஈடுபட்டாலும் அது மூர்க்கத்தனமாக அடக்கப்பட்டது. கிளர்ச்சியாளர் 15 பேர் சாவொறுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். இந்தச் சொவுகள் குடியரசு அணியினரின் வலுவைப் பெரிதும் பெருக்கியது.

1918 இல் அயர்லாந்தில் பொதுமக்கள் சபைக்கான தேர்தலில் இந்தவலு 'பளிச்சென' வெளிப்பட்டது. மொத்தமாகவிருந்த 105 இடங்களில் 73 ஐக் குடியரசு அணியினர் பெற்றுக்கொண்டனர். ஐக்கிய அணியினர் 26 இடங்களைக் கைப்பற்றச் சுயாட்சி அணியினருக்கு 6 இடங்கள் மட்டுமே கிடைத்தன. தேர்தலில் பெற்றி பெற்றால் பிரித்தானியாவின் பொதுமக்கள் சபையைப் புறக்கணிப்போமென வாக்குறுதி அளித்திருந்த குடியரசு அணியினர் தமது வாக்குறுதிப்படி 'அயர்லாந்துக் குடியரசை' அறிவிக்கை செய்து தமது குடியரசுத் தலைவராக இமென் டிவலராவைத் தேர்ந்தெடுத்தனர். இதன் விளைவாக 1918 முதல் 21 வரை 'ஆங்கிலோஐரிஸ்' யுத்தம் நிகழ்ந்தது.

15 பேர் முதல் 25 பேர்வரையான குழு குழுவாகப் பிரிந்து குடியரசுப் போராளிகள் போர் புரிந்தனர். கரந்திருநது தாக்குதல், பிரித்தானிய அரசின் முதன்மை யைங்களைத் தகர்த்தல், தொடர்புகளை அறுத்தல், உணவு வழிகளை அடைத்தல் என இலக்கு வைத்த தாக்குதல்கள் விரிந்து கொண்டன. 'கெரில்லா' என்ற பெயர் கேட்டாலே அரசு படைகளுக்கு ஈரல் நடுங்குமளவுக்கு மறைநிலை அதிரடித் தாக்குதல்கள் அரச படைகளை அழிக்கத் தொடங்கின. போராட்டத்தைக் கைவிட்டுப் பேசுவோம் எனக் குடியரசு வாதிகளும் அழைப்பை ஏற்றுக்கொண்டனர்.

ஆதர் கிரிபித், மைக்கல் கொலின்ஸ், இமென் டிவலரா ஆகிய தலைவர்கள் பேச்சுவார்த்தையிற் கலந்துகொண்டனர். மதத்தைக் காரணங்காட்டி அயர்லாந்துக்கான முழுவிடுதலையைப் பிரித்தானியா மறுத்தது. Irish Free State என்னும் திட்டத்தையும் முன்வைத்தது. இதன்படி

1. வட அயர்லாந்து பிரித்தானியாவுடன் இணைந்த மாகாணமாகத் தொடர்ந்தும் இருக்கும்.

2. தென் அயர்லாந்துக்குப் பிரித்தானிய முடியின் கீழான சுதந்திரம் வழங்கப்படும். இது கனடாவுக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தையும், 1948 இல் இலங்கைக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தையும் ஒத்ததாகும்.

புரட்டஸ்தாந்து மதத்தைப் பேணுபவர்கள் என்ற காரணத்துக்காக வட அயர்லாந்தின் சுதந்திரம் மறுக்கப்படுவதையும், முற்று முழுதானதற்ற சுதந்திரமே தென் அயர்லாந்துக்குக் கிடைப்பதையும் இமென் டிவலரா உட்படப் பல குடியரசு அணியினர் எதிர்த்தனர் எனினும் குடியரசு அணியின் பெரும்பான்மை இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டதால் 1921 இல் இவ்வுடன் படிக்கையில் ஆர்தர் கிரிபித், மைக்கல் கொலின்ஸ் ஆகியோர் கையொப்பமிட இவர்கள் தலைமையில் 1922 இல் Irish Free State என்ற பெயரில் தென் அயர்லாந்து அரசு உயிர்த்தது.

இத்துடன் அயர்லாந்தின் போராட்டம் முடிந்ததா?



1922 இல் Irish Free State என்ற பெயரில் தென் அயர்லாந்து அரசு உயிர்த்தபோதும் வட அயர்லாந்து வடக்கு, கிழக்கு என இரண்டு பிரிவுகளாகத் துண்டிக்கப்பட்டதை எதிர்ந்து இமென் டிவலரா உள்ளிட்ட குடியரசுவாதிகளின் ஒரு பிரிவினர் போராட்த் தொடங்கினர்.

ஐரிஷ் குடியரசுப் படையின் ஒரு பிரிவினர் (IRA) புதிய தென் அயர்லாந்து அரசின் படையாக மாற்றம் பெற மறு பிரிவினர் படைக்கலம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டனர். ஊர் இரண்டுபட்டாற் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதுபோல, பிரித்தானியா தனது பரித்தாளும் சூழச்சியில் குறிப்பிடத்தக்களவு பெற்றிகண்டது. ஒரு தாயக விடியலைக் கருத்திற்கொண்டு உருவான ஐரிஷ் படை ஒருவர் மண்டையை ஒருவர் உடைத்துக்கொண்ட இந்த உள்நாட்டுப் போர் 1922 முதல் 23 வரை நடந்தது. இப்போரைத்தான் வரலாற்று வல்லுனர்கள் அயர்லாந்தின் உள்நாட்டுப் போர் என அழைக்கின்றனர்.

தென் அயர்லாந்து அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த ஆர்தர் கிரிபித், மைக்கல் கொலின்ஸ் ஆகிய பெருந் தலைவர்களில், ஆர்தர் கிரிபித், 1922 செப்ரொம்பர் முதல் வாரத்தில் இயற்கைச் சாவடைந்தார். கைக்கல் கொலின்ஸ் அதே மாதப் பிற்பகுதியில் அரசபடைப் பாசயையைப் பார்வையிடச் சென்றபோது குண்டுத்தாக்குதலாற் கொல்லப்பட்டார். எனினும், இந்த உள் நாட்டுப் போரில் தென் அயர்லாந்தின் அரச படைகள் வெள்ளியைக் கண்டன. மறுபிரிவினர் தோல்வியுற்றாலும் தாங்கள் இலக்கைக் கைவிடவில்லை.

1932 ஆம் ஆண்டு இமென் டிவலரா தென் அயர்லாந்தின் தலைமை அமைச்சரானபோது ஒரு பெரிய திருப்பம் நிகழ்ந்தது. பிரித்தானிய முடிக்கு விசுவாச அறிக்கை செய்தல் என்னும் முறை முற்றாக நீக்கப்பட்டது. 1938 இல் பிரித்தானியப் பதை தளங்கள் அகற்றப்பட்டதும் தேசாதிபதிக்குப் பதிலாக அயர்லாந்துக்குப் பொறுப்பான 'அதிபர்' என மாற்றம் கொண்டுவரப்பட்டது. Irish Free State எனபது அயர்லாந்து எனப் பெயர் இறுதியாக மாற்றம் செய்யப்பட்டது.

இமென் டிவலரா 1932 ஆம் ஆண்டில் தலைமையமைச்சரானபோது வட, தென் அயர்லாந்துப் பிரிவினையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த IRA பிரிவினர் இவருக்கு எதிராகவும் தமது செயற்பாடுகளைச் செய்யத் தவறவில்லை. இமென் டிவலராவும் இவர்களை ஒடுக்கும் செயற்பாடுகளைச் செய்யவேண்டியே இருந்தது. எனினும் 1948 இல் குடியரசு தோற்றம் பெற்றதோடு எதிர்பாளர்கள் அயர்லாந்துக் குடியரசுக்கெதிரான தமது செயற்பாடுகளை நிறுத்திவிட்டு வட, தென் அயர்லாந்தின் இணைப்பிற்கான போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கத் தொடங்கினர், முன்னெடுத்தும் வருகின்றனர்.

அயர்லாந்தின் ஒருபகுதி விடுதலை பெற்ற குடியரசு ஆகிவிட்டபோதும், இன்னொரு பகுதி இன்னமும் பிரித்தானிய முடியின் கீழேதான் இருக்கின்றது. அதனை விடுவிக்கத் துடிக்கும் போராளிகளின் துப்பாக்கிகள் இன்னமும் நெருப்பைக் கக்கிக் கொண்டுதான் இருக்கின்றன.

- களத்தில் 25.01.2001 -

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின்
நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள்
அறிவித்தல்களையும்,
மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

விளம்பரம் என்பது
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு

437.345.4203

2022 உலக வணிகம்
Ulaga VANIKAM
Tel: 437 345 4203
www.ulagavanikam.com
ulagavanikam@gmail.com

I TOUCH CAR WASH LTD
Professional Auto Detailing
HAND CAR WASH
WE SPECIALIZE IN:
. Interior / Exterior
. Wash & Vacuum
. Interior Shampoo
. Leather Treatment
. Engine Shampoo
. High Speed Buff
. Waxing / Polishing
. Headlight Restoration
. Auto Tinting
. Ceramic Pro
. Insurance Approved

புதிய இடத்தில் புதிய பொலிவுடன்
GRAND AUTO SERVICES
ALL REPAIRS & MANINTENACE ALL KIND OF CARS
உங்கள் வாகனங்களின் சகலவிதமான
திருத்த வேலைகளையும் தரமான முறையில்
திருத்திக்கொள்ள நாங்குகள்
Free Estimates, All Mechanical & Electrical Repairs
Muffler Work, Body Work & Painting
Friendly Services, Quality Workmanship & Guaranteed

We also install car Audio Systems,
Alarm Systems, Auto Glass & Seat Covers
If You are looking for a used Car, let us know
We can find you the best car in Town
Rust Proofing & Undercoating (Save you Body)
GOOD NEWS
Touch-up & Body Work on lease return cars
All kind of Mechanical Work, Call Us

Call: Louis
Tel: 416.757.7891 Dir: 647.831.2709
Email: itouchcarwash43@gmail.com
435A Midwest Road, Unit 5A, Scarborough ON M1P 3A6


HEADED LIGHT RESTORATION
We use only natural quality high-end
products on all our vehicles

BEST QUALITY WORK FOR REASONABLE PRICES!
OUR AIM IS TO SATISFY THE CUSTOMERS

தமிழீழ மண்ணில் சிங்களக் குடியேற்றங்கள்

ஒரு நோக்கு

சி. வரதராஜன்
கலைமாணி (சிறப்பு - பொருளியல்)



அறிமுகம்

எந்த ஒரு நாட்டிற்கும் இறுதியாக இரண்டு மூல வளங்கள் காணப்படுகின்றன. அந்த நாட்டின் காணிகளும் அதன் மக்களுமே அந்த மூல வளங்கள் ஆகும். காணி என்பது ஒரு தேசிய மூல வளம். எங்கு அமைந்திருந்தாலும் காணி என்பது மிகப் பெறுமதி வாய்ந்ததும் வரையறுக்கப் பட்டதுமான ஒரு மூல வளம் ஆகும். நீண்ட காலமாகவே மனித சமுதாயத்தின் வாழ்க்கை, அதன் முன்னேற்றம் என்பவற்றுடன் காணி நெருங்கிய தொடர்புடையதாக இருந்து வந்துள்ளது. இதன் விளைவாகவே காணி தொடர்பான கொள்கைகளும் பிரச்சினைகளும் மனித சமூகத்தில் மிக முக்கியமான இடத்தினை வகித்து வந்துள்ளன. காணிப் பிரச்சினையைச் சரியான முறையில் கையாள்வதன் மூலமே ஆள்பவர்களினதும் ஆட்சிகளினதும் சமூக பொருளாதார முறைகளினதும் வெற்றி தோல்விகள் நிர்ணயிக்கப்படுகின்றன என்ப தனைக், கடந்த கால வரலாறு பல்வேறு தடவைகள் எமக்கு எடுத்துக் காட்டியுள்ளது.

1815 இல் கண்டி ஒப்பந்தம் கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து இலங்கை பிரித்தானியர் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1840 ஆம் ஆண்டில் முடிக்குரிய காணிகளில் அத்துமீறிய குடியேற்றம் தொடர்பான சட்டம், காலனித்துவ அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து அரசாங்கத்தின் காணிக் கொள்கைக்கு சட்ட முறையான அங்கீகாரம் கிடைத்தது. கண்டி, வெல்லச மாகாணங்களில் காணப்பட்ட விடு தலைப் போராளிகளின் கிராமியப் பொருளாதாரத்தினைச் சிதைப்பதே, இச்சட்டத்தின் உண்மையான நோக்கமாக இருந்தது. 1818 ஆம் ஆண்டுக் கலவரமும் அதனைத் தொடர்ந்த மக்கள் எழுச்சியும், ஆள்பவர்களின் மனதில் பாதுகாப்பற்ற உணர்வு ஒன்றினை ஏற்படுத்தியது. இதனால், கெரில்லா போர் முறையில் ஆற்றல் கொண் டிருந்த விடுதலை வீரர்களின் புகலிடமாக இருந்த மத்திய மலை நாட்டை, ஏனைய பிரதேசங்களுடன் இணைப்பது என, அரசாங்கம் தீர்மானித்தது. இப்பின்னணியிலேயே காலனித்துவக் காணிக் கொள்கை உருவாக்கப்பட்டது. 1840 ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் மக்களின் குடியிருப்பிற்குள்ளாகாத காணிகள் அனைத்தும் முடிக் குரிய காணிகளாக மாற்றப்பட்டன. இதற்கும் மேலாக மக்களின் உடைமையாகவுள்ள காணிகளைக் கூட முடிக்குரியதாக மாற்றுவதற்கு ஏதுவாக, 1897 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கக் காணிகள் கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது. இச் சட்டத்தின் 24 ஆம் பிரிவு பின்வருமாறு கூறுகின்றது: "தான் உண்மையாகக் குடியிருக்கும் காணிக்குமேல் எவரேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காணித்துண்டுகளுள் குடியேறி இருப்பார்களேயானால் அக்காணிகள் அவர்களது உடைமையாக மாட்டா". பாரம்பரிய காணி உடைமை களை நசித்துச் சிதைப்பதாக இச்சட்டத்தின் பரிவுகள் அமைந்திருந்தன. பாரம்பரியமாகக் குடி மக்களின் உடைமையாகக் காணப்பட்ட காணிகள் அவர்களிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்டன. இத்தகைய காலனித்துவக் காணிக் கொள்கைகளின் பயனாகக் காணி அற்ற நிலையும், விவசாயிகள் இடையே வறுமையும் ஏற் படலாயின். தமது காணிக் கொள்கை விளைவித்த பாதகமான தாக்கங்கள் பற்றி சுமார் ஒரு நூற்றாண்டின் பின்னரே பிரித்தானியர் உணரலாயினர். காணிக் கொள்கையில் மாற்றம் கொண்டு வரப்படல் வேண்டும் என, இலங்கைத் தலைவர்கள் வற்புறுத்தத் தொடங்கினர். இந்நிலையில் 1927 ஆம் ஆண்டு முதலாவது காணி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இவ்வாணைக்குழுவின் சிபார்சுகளின் விளைவாக 1935 ஆம் ஆண்டு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது. வேக மான காணிக் குடியேற்ற யுகம் ஒன்றின் தோற்றத்திற்கு இச் சட்டம் வழிவகுத்தது. எந்த விதமான அடிப்படை மாற்றமும் இன்றி இன்னும் இக் கொள்கை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

சுதந்திரத்தின் பின்னர், இரண்டு காணி ஆணைக் குழுக்கள் இதுவரை இலங்கை அரசாங்கத்தினால் நியமிக் கப்பட்டன.

1. 1959 ஆம் ஆண்டு காணி ஆணைக்குழு
2. 1987 ஆம் ஆண்டு காணி ஆணைக்குழு

இலங்கைத் தீவின் மொத்த நிலப்பரப்பு 6, 570, 134 ஹெக்டேயர் (16, 228, 230 ஏக்கர்கள்) ஆகும். இவற்றுள் 5, 403, 899 ஹெக்டேயர் (13, 347, 630 ஏக்கர்கள்) காணி அரசுக்குச் சொந்தமானவையாகும். மிகுதி 1, 166, 235 ஹெக்டேயர் (2, 880, 600 ஏக்கர்கள்) காணி தனியாருக்குச் சொந்தமானவை ஆகும். எனவே இலங்கையில் மொத்தக் காணிகளில் 82.3 சத வீத மானவை அரசுக்குச் சொந்தமானவையாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு காணியுடைமையில் ஏறத் தாழ தனி உரிமையினைக் கொண்டுள்ள அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற காணிக் கொள்கை, நாட்டில் பல சமூக பொருளாதார விளைவுகளை ஏற்படுத்துவனவாக அமைந் துள்ளது.

1935 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறுபட்ட பெயர்களிலான குடியேற்றத் திட்டங்கள் மூலம் காணிகளின் மறு பகிர் வினை அரசாங்கம் மேற்கொண்டது.

1. பாரிய குடியேற்றத் திட்டங்கள்
2. உயர் நிலக் குடியேற்றத் திட்டங்கள்
3. கிராம விரிவாக்கத் திட்டங்கள்
4. இளைஞர் குடியேற்றத் திட்டங்கள்
5. காணிக் கொடைகள் (சிறப்பு ஏற்பாடுகள்)
6. அத்துமீறிய குடியேற்றங்கள் ஒழுங்கு படுத்துதல்
7. நடுத்தர மட்டத்திலான நீர்ப்பாசனத் திட்டங்கள.
8. மழை நீர்ப்பாசன பண்ணை அபிவிருத்திக் குடியேற்றத் திட்டங்கள்.

மேற் கூறப்பட்ட பெயர்களிலான பல்வேறு பட்ட திட்டங்கள் மூலம் அரசாங்கத்தினால் காணி பகிர்ந்தளிக்கப்பட்டு, மக்கள் குடியமர்த்தப்பட்டனர். காணி அற்றோருக்குக் காணி வழங்குதல், இதன் மூலம் காணிப் பகிர்வில் நிலவும் சமன் இன்மையைக் குறைக்கத்தக்க வகையில் காணி மறு பகிர்வினை மேற்கொள்ளுதல், உற்பத் தியினை குறிப்பாக நெல் மற்றும் உப உணவு உற்பத் தியினை பெருக்குதல், கிராமிய மட்டத்தில் நிலவும் வேலையின்மையை நீக்குதல், மக்களின் வருமான மட்டத்தினை அதிகரிக்கச் செய்வதன் மூலம் கிராமிய வறுமையினை நீக்குதல், பிரதேச ரீதியான அபிவிருத் தியினை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு பட்ட அபிவிருத்தி நோக்கங்கள் கருதி 1935 ஆம் ஆண்டி லிருந்து பல்வேறுபட்ட குடியேற்றத் திட்டங்கள் இலங்கை யின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இலங்கை அரசாங் கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டன.

1936 - 1988 காலப் பகுதியில் இலங்கை முழுவதும் 813, 495 ஹெக்டேயர் காணி அரசாங்கத்தினால் பகிர்ந்தளிக் கப்பட்டது. இக் காணிகள் 1, 439, 407 ஆட்களுக்குப் பகிர்ந்து ஒதுக்கப்பட்டது. ஆனால் இக் குடியேற்றத் திட்டங்கள் மூலம் அதனது அபிவிருத்தி நோக்கங்கள் அடையப்பட்டனவா என்ற வினா, இக்குடியேற்றத் திட்டங் கள் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே எழுப்பப்பட்டு வந்துள்ளது. இன்று இலங்கையின் கிராமியத் துறையில் காணப்படும் பின்வரும் நிலைமைகள் இப் பெறுமதி வாய்ந்த வினாவிற்கு விடையாக அமையும்.

- 27 சதவீதமான குடும்பங்கள் காணிகள் அற்ற வையாக உள்ளன.
- 42.4 சதவீதமான காணி உடைமைகள் இரண்டு ஏக்கருக்கும் குறைவானவை ஆகம்.
- 82 சதவீதமான கிராமியக் குடும்பங்களின் மாதாந்த வருமானம் 400/- ரூபாவிற்கும் குறைவாகக் காணப்படுகின்றது.
- 44 சதவீதமான குடும்பங்கள் 200/- ரூபாவிற்கும் குறைவான மாத வருமானத்தை மட்டுமே பெற்று வருகின்றன.
- தோழில் அற்றோரில் 70 சதவீதத்தினர் விவசாயி களாகக் காணப்படுகின்றனர்.

இவையெல்லாம் எவ்வாறு நிகழ்ந்தன? சகல அரசாங் கங்களதும் அபிவிருத்தித் திட்டங்களில் காணி முக்கிய இடம் பெற்றிருந்த போதிலும் காணியின்மை, கிராமிய வறுமை, வேலையின்மை ஆகிய பிரச்சினைகள் மோசமடைந்துள்ளன என்பனையே இத் தரவுகள் கட்டு கின்றன. இத் தரவுகள் - தகவல்கள் எமக்குப் புலப்படுத்தும் உண்மை என்னவெனில், அரசாங்கத்தினால் பல் வேறுபட்ட பெயர்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட குடியேற் றத் திட்டங்கள் தமது அபிவிருத்தி நோக்கங்களை அடையத் தவறி விட்டன என்பதேயாகும். இந்நிலையில் தொடர்ந்து பதவிக்கு வருதம் எந்த வொரு அரசாங்கமும், குடியேற்றத் திட்டங்கள் தொடர்பான கொள்கையினை நடைமுறையினை மாற்றாமல் 1935 ஆம் ஆண்டி லிருந்து இன்று வரை ஒரே மாதிரியாகப் பின்பற்றியமைக் குக் காரணம் என்ன? அவ்வாறாயின் அரசாங்கம் தமது குடியேற்றத் திட்டங்கள் மூலம் வேறு ஏதாவது வெளிப்படுத்தாத - வெளிப்படுத்த முடியாத நோக்கங் களில், வெற்றியடைந்துள்ளதா? இலங்கை அரசாங்கத் தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட பாரிய குடியேற்றத் திட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட பாரிய குடியேற்றத் திட்டங்களில் 340 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது (1956 ஆம் ஆண்டு வரை) என, 1959 ஆம் ஆண்டு காணி ஆணைக்குழு கணிப்பிட்டது. ஆனால் அரசாங் கத்திற்குக் கிடைத்த வருமானம் 25 மில்லியன் ரூபா மட்டுமேயாகும், எனவே இக்குடியேற்றத்திட்டங்கள் பொருளாதார ரீதியில் பெருமளவு தோல்வியே கண்டுள் ளன. அவ்வாறாயின் 1935 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலான காலப்பகுதியில், கல்லோயாத் திட்டம் வரை வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த பல்வேறுபட்ட குடியேற்றத்திட்டங்களினால் நிறைவெற்றப் பட்டது என்ன? இப் பெறுமதி வாய்ந்த வினாவிற்கு விடை காண்பதே, இக் கட்டுரையின் நோக்கமாகும்.



வடக்குக் கிழக்குப் பிரதேசம் ஓர் அறிமுகம்

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வடக்கு, கிழக்கு பிர தேசங்கள் என்பது இலங்கைத் தீவின் வட பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் பரந்துள்ளன. இவ் வடக்கு கிழக்குப் பிரதேசங்களின் மொத்த நிலப் பரப்பு 18,323 சதுர கிலோ மீற்றராகும். இவ்வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் உள்ள பெரிய உள்நாட்டு நீர்ப பரப்பு 558 சதுர கிலோ மீற்றராகும், எனவே வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மொத்தப் பரப்பளவு 18, 831 சதுர கிலோ மீற்றர் ஆகும். இது இலங்கைத் தீவின் மொத்தப் பரப்பளவில் 28.8 சதவீத மாகும். இப்பிரதேசம் முழுவதும் வரண்ட வலயமாகவே கருதப்படுகின்றது. இவ் வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் நிர்வாக ரீதியாக 8 மாவட்டங்களைக் கொண்டுள்ளன.

1.வட மாகாணம்
(அ) யாழ்ப்பாணம்
(ஆ) கிளிநொச்சி
(.) வவுனியா
(ஈ) மன்னார்
(உ)முல்லைத்தீவு

2. கிழக்கு மாகாணம்
(அ) மட்டக்களப்பு
(ஆ) அம்பாறை
(இ) திருகோணமலை

1881 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின் படி வடக்கு கிழக்குப் பிரதேசங்களின் மொத்தச் சனத்தொகை 4,30055 பேராகும். 1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி மொத்தச் சனத்தொகை 2, 084, 655


பேராகும். வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் சனத் தொகையின் இனரீதியானஅமைப்பினை

இனம்	1881 தொகை	1881 சதவீதம்	1981 தொகை	1981 சதவீதம்
இலங்கைத் தமிழர்	364, 889	84.9	1, 356, 546	65.00
முஸ்லிம்கள்	53,417	12.4	366, 267	17.6
இந்தியத் தமிழர்	-	-	74, 616	3.6
சிங்களவர்	7, 326	1.7	278, 829	13.4
ஏனையோர்	4, 423	1.0	8, 397	03
வட, கிழக்கு பிரதேசம்	430,055	100	2, 084,655	100

பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

1881 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி இந்தியத் தமிழர் தொகை இலங்கைத் தமிழர் தொகைக்குள் அடங்கி உள்ளது.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் கிழக்கு மாகாணத்திலேயே முதன் முதலில் அதிகளவில் குடியேற்றத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவ்வகையில் 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித்திட்டமே, முதலில் ஆரம்பிக்கப்பட்ட பாரிய குடியேற்றத் திட்டமாகும். பட்டிப்பளை என்ற பாரம்பரிய தமிழ்ப பெயரைக் கொண்ட பிரதேசம், கல்லோயா என்று பெயர் சூட்டப்பட்டு, 1949 ஆம் ஆண்டு கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டத்தின் எதிர்பார்ப்புக்



களாப் பின் வருவன அமைந்திருந்தன.

1. இத் திட்டத்தின் நீர் வடிகாலமைப்பின் கிழ் 855 சதுர கிலோ மீற்றர் (330 சதுர கிலோ மைல்) பரப்பளவு பிரதேசம் வரும்.

2. 48,600 ஹெக்டேயர் (1,20,000 ஏக்கர்) நிலப் பரப்பு நீர்ப்பாசன் வசதியைப் பெறும்.

3. 9,000 கிலோ வாட்ஸ் மின்சக்தி உற்பத்தி செய்யப்படும்.

4. 30, 000 பேருக்கு குடி நீர் வசதி கிடைக்கும்.

5. 200, 000 பேர் குடியமர்த்தப்படுவார்கள்.

மேலே கூறப்பட்ட பாரிய எதிர்பார்ப்புகளுடன், அப்போது இலங்கையின் பிரதம மந்திரியாக இருந்த திரு. டி. எஸ். சேனநாயக்கா 1949 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 28 ஆம் திகதி, இங்கினியாகலையில் கல்லோயாத் திட்த்தினை ஆரம்பித்து வைத்தார். ஆனால் இத் திட்டத்தின் செயற்பாடுகள் அதன் அபிவிருத்தி நோக்கத்தினை அடையக் கூடியனவாக இருக்கவில்லை. நீர் வடிகாலமைப் புக்கு ஒரு சரியான திட்டம் கல்லோயா ஆற்றுப் பள்ளத் தாக்கு அபிவிருத்தித் திட்டத்திலிருக்க வில்லை. மேலும் இத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிலத்தின் அளவு பரந்த பயிர்செய்கையினை மேறகொள்வதற்கு மிகவும் சிறியதாக இருந்தது. அதே நேரத்தில் செறிவான் பயிர்ச் செய்கையினை மேற் கொள்வதற்கு இந் நிலத்தின் அளவு மிகவும் பெரிதாக இருந்தது. (Ceylon Economist vol 2 No. 1 Sept 1951 P. 69 – 76)


மேலும் 1970 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கல்லோயாத் திட்ட மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை, இத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பெருந்தொகைச் செலவீடு எதுவித நன்மையையும் பெற்றுத் தரவில்லை என்பதனைச் சுட்டிக் காட்டியது. கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றை உரு வாக்குவதற்கு 40 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. அதே நேரத்தில் இத் திட்டத்தின் அணைக்கட்டினைக் கட்டு வதற்கு 40 மில்லியன் ரூபாவிற்கு மேல் செலவிடப பட்டவில்லை.

கல்லோயாப் பிரதேசத்தில் உள் கட்டுமான வேலை களுக்கு மட்டும் 320 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது (1960 - 1966). எனவே இப்பிரதேசத்தில் மக்களைக் குடியமர்த்துவதற்குத் தேவையான அம்சங்களிலேயே அரசாங்கம் கூடுதலான கவனத்தைச் செலுத்தியது. அதற்காகவே பெருந்தொகைப் பணத்தினையும் செலவிட்டது. உற்பத்திப் பெருக்கம், விவசாய அபிவிருத்தி போன்ற பொருளாதார ரீதியான அம்சங்களில் அரசாங்கம் அதிகளவு அக்கறை செலுத்தவில்லை. இதன் அடிப் படையில் ஏற்கெனவே நடைமுறையிலிருக்கும் திட்டங் களை அபிவிருத்தி செய்வதற்கும் திட்டங்களைப் பலப் படுத்துவதற்கும் பதிலாக கல்லோயாத் திட்டம் போன்ற பெருமளவு செலவினைக் கொண்ட திட்டங்களில், அருமையாகவுள்ள தனது வளங்களை அரசாங்கம் ஏன் பயன்படுத்தியது? என்ற வினாவினை கல்லோயாத் திட்ட மதிப்பீட்டுக்குழு எழுப்பியது. அவ்வாறாயின் கல்லோயாத் திட்டத்தின் மூலம் அரசாங்கம் சாதித்தது என்ன?

உண்மையில் கல்லோய ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத் தித் திட்டத்தினை அரசாங்கம் ஒரு சிங்களக் குடியேற்றத் திட்டமாகவே நடைமுறைப்படுத்தியது. இதன் முதற்கட் டமாகவே பட்டிப்பளை என்ற பாரம் பரிய தமிழ்ப்பிரதேசம் கல்லோயா என்ற சிங்களப் பெயர் கொண்ட பிரதேசமாக மாற்றப்பட்டது. இக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் 44 குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்டன. இதில் 38 கிராமாங்கள் சிங்களக் கிராமங்களாகும். மிகுதி 6 கிராமங்கள் மட்டுமே தமிழ் மக்களுக்குரியதாக இருந்தன. மேலும் இத் தமிழ்க் கிராமாங்கள் நீர்ப்பாசன வசதியற் றவை அல்லது சிங்களக் கிராமங்களினூடாகச் செல்கின்ற நீர்ப்பாசன வசதிகளை உடையனவாகக் காணப்பட்டன. கல்லோயா குடியேற்றத் திட்டத்திலுள்ள இங்கினியா கல என்ற இடத்தில் 1956 ஆம் ஆண்டு வைகாசி மாதம் நடை பெற்ற இனக்கலவரத்தின் போதும் இத் தமிழ்க் கிராமங் களில் குடியேறியிருந்த தமிழ் மக்கள கொல்லப்பட்டனர் துரத்தியடிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்த இக் கிராமங்களிலும் சிங்களக் குடும்பங்கள் குடியேறினர். இதன் விளைவாக இது ஒரு பூரணமான சிங்களக் குடியேற் றத் திட்டமாக மாறியது.

கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் ஏற்பட்டதாகக் கூறப்படும் ஒரு நிகழ்ச்சி மூலம், இத் திட்டத்தில் எந்தளவிற்கு சிங்கள இன வாதம் புகுத்தப் பட்டது என்பது புலனாகின்றது. அத்தகைய நிகழ்ச்சி பின்வருமாறு: “ 1958 ஆம் ஆண்டின் முற்பகுதியில் அம்பாறைக்கு அருகேயுள்ள ஒரு குளத்தில் புல்டோசர் இயந்திரத்தினை இயக்கும் ஒரு சிங்களச்சாரதி ஒரு பழைமையான தூண் ஒன்றினைக் கண்டெடுத்தார். அப்போது அங்கு பணியிலிருந்த தமிழ் மேற்பார் வையாளர் அத் தூணை அருகில் உள்ள குளத்திற்குள் எறியும்படி கூறினார்: பின்னர் இத் தூண் அம்பாறையில் உள்ள கல்லோயா அபிவிருத்திச் சபையின் அலுவலகத் தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்ட போது, கல்லோயா அபிவிருத்திச் சபையின் தமிழ் உறுப்பினர் ஒருவர் அதனை எதிர்த்தார். இப்புராதன தூணில் நீர்ப்பாசன நீர் பங்கிடுவது தொடர்பான விதிகள் குறிக்கப் பட்டிருந்தன. அது மட்டுமின்றி கல்லோயாப் பிரதேசத்தின் ஒரு நூற்றாண்டுக்கும் முன்பாகவே சிங்கள மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதனைச் சந்தேகமற்ற நிரூபிக் கின்ற ஆதாரங்கள் இப்புராதன தூணில் குறிக்கப்பட் டிருந்தன என்றும் கூறப்பட்டது. எனவே கல்லோயாப் பிரதேசம் சிங்கள மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதனை நிரூபிக்க அரசாங்கமும் சிங்கள மக்களும் “கதைகள்” கூற ஆரம்பித்து விட்டனர். என்பதனையே இச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது. அது மட்டுமின்றி தமிழர்கள் சிங்களவர்களின் பாரம்பரிய பிரதேசத்தினை மறைக்க - மறுக்க முற்படுகின்றனர் என்ற வகையில் ஒரு இன முரண்பாட்டினை - இனவாதத்தினை உருவாக்க முயற்சிகள் நடந்துள்ளன என்பதனையும் இச் சம்பவம் காட்டி நிற்கின்றது.

கல்லோயாத் திட்டத்தினை விமர்சித்த கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ பின்வருமாறு குறிப்பிட்டார் “கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தின் வரலாறு இறுதியாக எழுதப்படும் போது, இலங்கை மக்கள் அல்ல, அமெரிக்க நிபுணர களும் ஒப்பந்தக்காரர்களுமே நன்மைகளைப் பெற்றனர் என்பது தெரிய வரும்.” அவ் வாறிருப்பின் கல்லோயாத் திட்டத்தின் மூலம் அரசாங்கம் சாதித்தது என்ன? 1946 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பிட்டின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் (அம்பாறைப் பிரதேசத்தையும் உள்ளடக் கியது) சிங்களவர்களின் எண்ணிக்கை 11,850 பேராகும். இது, மாவட்டத்தின் மொத்த சனத் தொகையில் 5.8 சதவீதமாகும். கல்லோயாத் திட்டத்தின் அறிமுகத்தின் பின்னர் 1953ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி இம் மாவட்டத்தில் சிங்களவர்களின் எண்ணிக்கை 31,1174 பேராகும். இது மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 11.5 சதவீதமாகும். 1946 - 1953 காலப் பகுதியில் இம் மாவட்டத்தின் மொத்த சனத் தொகை 33 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்திருந்தது. ஆனால் இதே காலப்பகுதியில் இம் மாவட்டத்தில் சிங்களவர்களின் தொகை 163 சதவீதத் தினால் அதிகரித்திருந்தது. மேலும் 1959 ஆம் ஆண்டு தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவின் சிபார்சின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதி யில் அம்பாறை என்னும் புதிய தொரு தேர்தற் தொகுதி உருவாக்கப்பட்டது. 1960 ஆம் ஆண்டு பங்குனி மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அம்பாறைத் தேர்தற் தொகுதியில் ஒரு சிங்களப் பிரதிநிதி வெற்றி பெற்றுப் பாராளுமன்றம் சென்றார். இதன்மூலம் கிழக்கு மாகா ணத்திலிருந்து ஒரு சிங்கப் பிரதிநிதி முதன் முதலில் பாராளுமன்றம் செல்வதற்கு வழி ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து 1961 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 10 ஆம் திகதி அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது. எனவே கல்லோயாத் திட்டத்தின் அறிமுகத்தினைத் தொடர்ந்து அடுத்த பத்தாண்டு காலத்திற்குள் கிழக்கு மாகாணத்தில் தமிழ்ர்களைச் சிறுபான்மையாக மாற்றுவதற்கு ஏதுவாக அம்பாறை என ஒரு புதிய மாவட்டமும், சிங்களவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் அம்பாறை




என்னும் ஒரு சிங்களத் தேர்தற் தொகுதியும் உருவாக் கப்பட்டது.


1963 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் பாணமப் பற்று, அக்கரைப்பற்று, கரவாகு - நிந்தாவூர் பற்று, சம்மாந்துறைப்பற்று ஆகிய 4 தமிழ்ப்பிரிவுகளும்: வேகம பற்று என்ற சிங்களப் பிரிவுமாக மொத்தம் ஐந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் இருந்தன. 1981 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் 7 தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் 5 சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் காணப்பட்டன. இதன்படி அம்பாறை மாவட் டத்தின் மொத்த நிலப்பரப்பான 4318 சதுர கிலோ மீற்றரில் 3391 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உரியதாகும். எனவே அம்பாறை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ 78.5 சதவீதமான நிலப்பரப்பு சிங்களவர் பெரும்பான்மை யாக வாழும் பிரதேசமாக உள்ளது. அம்பாறை மாவட்டத் தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தினதும் ஏனைய குடியேற்றத் திட்டங்களினதும் சாதனைகளாக இவற்றையே குறிப்பிடலாம்.

கிழக்கு மாகாணத்தில் பரவலாக பல்வேறுபட்ட குடி யேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு மாவட்டம் திருக்கோணமலை மாவட்டமாகும். விவசாய நீர்ப்பாசனக் குடியேற்றங்கள், மீனவக் குடியேற்றங்கள், புனித பிரதேசக் குடியேற்றங்கள், ஆயுதப் படையினர் குடியேற்றங்கள் என்ற பல்வேறு பட்ட பெயர்களில் குடியேற்றத் திட்டங்கள் இம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்துள்ளன. இவ்வகையில் 1948 - 1949 காலப்பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட கந்தளாய், பதவியாக் குடியேற்றத் திட்டங்கள் திருகோணமலை மாவட்டச் சனத்தொகையின் இன விகிதாசாரத்தினைப் பெரிதும் மாற்றியுள்ளது.

1881 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி திருக் கோணமலை மாவட்டத்தின் மொத்தச் சனத் தொகை யான 22,197 பேரில் 14,394 பேர் தமிழர்களாகவும், 935 பேர் மட்டுமே சிங்களவர்களாகவும் இருந்தனர். ஆனால் 1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி இம் மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையான 255,948 பேரில் 87,760 பேர் தமிழர்களாகவும் 85,503 பேர் சிங்களவர்களாகவும் இருந்தனர். எனவே 1881 - 1981 காலப்பகுதியில் திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழர்



களின் தொகை 510 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித் திருக்க, சிங்களவர்களின் தொகை, 9,045 சதவீதத் தினால் அதிகரித்திருந்தது. இதன் விளைவாக 1881 இல் இம் மாவட்டத்தின் மொத்தச்சனத்தொகையில் 65 சதவீதமாக இருந்த தமிழர்களின் பங்கு 1981 இல், 34 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அதே நேரத்தில் 1881 இல் இம்மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையில் 4 சதவீத மாக மட்டுமே இருந்த சிங்களவர்களின் தொகை 1981 இல் 33 சதவீதமாக உயர்ந்தது. எனவே 1881 இல் 15:1 எனக் காணப்பட்ட தமிழர், சிங்களவர் விகிதம், 1981 இல் ஏறத்தாழ 1:1 என மாற்றமடைந்து அது மட்டுமன்றி 1977




ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இம் மாவட்டத்தில் சேருவல என்ற புதிய தேர்தல் தொகுதி மூலம் ஒரு சிங்களப் பிரதிநிதி பாராளுமன்றம் சென்றார்.

எனவே, கிழக்கு மாகாணத்தில் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட முதல் பத்தாண்டு காலத்தில் அம்பாறைத் தேர்தல் தொகுதி மூலம் முதலாவது சிங்களப் பாராளுமன் றப் பிரதிநிதியும், அடுத்த பதினைந்து ஆண்டுக் காலத்தில் சேருவல தேர்தல் தொகுதி மூலம் மற்றுமொரு சிங்களப் பிரதிநிதியும் பாராளுமன்றம் செல்லக் கூடிய நிலைமை உருவாகியது.


வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் வவுனியா மாவட் டத்திலேயே முதலில் குடியேற்றத் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. 1956 ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்ட பாவற்குளம் குடியேற்றத்திட்டம் குறிப்பிடத்தக்கதொன் றாகும். ஆரம்பத்தில் இக் குடியேற்றத் திட்டத்தில் 595 தமிழ்க் குடும்பங்களும் 463 சிங்களக் குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டன. ஆனால் பிற்பட்ட காலங்களில் இங்குள்ள தமிழ்க் குடும்பங்கள் ,ங்கிருந்து துரத்தப் பட்டன. தற்போது இது ஒரு சிங்களக் குடியேற்றப் பிர தேசமாகவே உள்ளது. பிரதான குடியேற்றத் திட்டங்கள், நடத்தர மட்டத்திலான நீர்ப்பாசனத்திட்டங்கள், கிராம விரிவாக்கத்திட்டங்கள் என்ற பெயர்களில் பல்வேறுபட்ட குடியேற்றத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன இம் மாவட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் என்னவெனில், சிங்கள மக்களுக்கு என ஒரு தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. வவுனியா தெற்குப் பிரிவு இரண்டாகப் பிரிக்கப்பட்டு வவுனியா தெற்கு சிங்களப் பிரிவு என ஒரு உதவி அரசாங்க அதிபர் பரிவு உருவாக்கப் பட்டுள்ளது. இப் பிரதேசத்தில் அம்பலாங்கொடல்ல என்ற ஒரு கிராமம் வவுனியா தெற்கு (சிங்களம்) உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ளது. இலங்கையின் தென்மாகாணத்தில் உள்ள அம்பலாங்கொட என்ற கிராமத்திலிருந்து வந்து இங்கு குடியேறிய மக்கள், அம்பலாங்கொடல்ல என்ற பெயரில் ஒரு குடியேற்றக் கிராமத்தை உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது. இம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த குடியேற்றத் திட்டங்களின் விளைவாக இம் மாவட்டத்தின் இன விகிதாசாரம் பெருமளவு மாற்றமடைந்தது: 1881 இல் வவுனியா மாவட்டத்தில் 1,157 சிங்களவர்களும், 13,164 தமிழர்களும் காணப்பட்டனர். 1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி இம் மாவட்டத்தில் தமிழர்களின் எண் ணிக்கை 54,179 பேராகவும், சிங்களவர்களின் எண்ணிக்கை 15,794 பேராகவும் இருந்தது. எனவே வவுனியா மாவட்டத்தில் 1881 - 1981 காலப் பகுதியில் தமிழர்களின் எண்ணிக்கை 312 சத வீதத்தினால் மட்டுமே அதிகரிக்க, சிங்களவர்களின் தொகை 1265 சத வீதத்தினால் அதிகரித்திருந்தது. இதன் விளைவாக 1881 இல் வவுனியா மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையில் 7.4 சத வீதமாக இருந்த சிங்களவர்களின் தொகை 1981 இல் 16.6 சத வீதமாக அதிகரித்திருந்தது. மாறாக 1881 இல் 84.6 சத வீதமாக இருந்த தமிழர்களின் பங்கு 1981 56.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம்

அண்மை ஆண்டுகளில் அதாவது எண்பதுகளில் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் மேள்கொள்ளப்பட்ட மற்றுமொரு பாரிய குடியேற்றத் திட்ட நடவடிக்கை, துரித மகாவலி அபிவிருத்தித் திட்டமாகும். 1965ஆம் ஆண்டுக்கும் 1968 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்டகாலத்தில் தயாரிக்கப்பட்ட பெருந்திட்டத்தில் தயாரிக்கப்பட்ட பெருந்திட்டத்தில் (Master Plan). மகாவலி கங்கையில் பாயும் 43 லட்சம் சதுர அடி நீரை நாட்டின் உலர்வலயத்திலுள்ள 900,000 ஏக்கர் (364,500 ஹெக்டேயர்) பரப்பில் பயன்படுத்த உத்தேசிக் கப்பட்டது. மேலும் 15 பலநோக்குத் திட்டங்களையும் 6 வடிநிலக் குறுக்கு திசை திருப்புக் கால்வாய்களையும் மொத்தம் 500 மெகாவாட் மின்சக்தியை உற்பத்தி செய்யவல்ல பல மின்சார நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கும் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களைக் குடியேற்றுவதற்கும் முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது இப் பெருந்திட்டத்தின் ஒரு கட்டமாக வடமத்திய மாகாணத் திலும் வடமாகாணத்திலும் நீர்ப்பாய்ச்சுவதற்காகவும் சுமார் 300 மெகாவாட் மின் சக்தியை உற்பத்தி செய்யவல்ல மின்சார நிலையங்களை நிறுவுவதற் காகவும் கொத்மலை, ரந்தெனிகல போன்ற மற்றும் நீர்த்தேக்கங்களையும் உமா ஓயா, லொக்கல் ஓயா, அம்பன் கங்கையின் சில கிளை நதிகள் ஆகியவற்றின்



1977 ஆம் ஆண்டு முடிவில் பெருந்திட்டத்தில் உத் தேசிக்கப்பட்ட வேலைத் திட்டத்தின் நிறைவேற்றத்தை ஆறுவருட எல்லையில் நெருக்கமான காலத்திற்குள் அடக்குவது என அரசாங்கம் முடிவு செய்தபோது, பெருந் திட்டத்தில் கண்டுள்ள முக்கிய செயல் திட்டங்களை மட் டுமே துரிதப்படுத்திய வேலைத் திட்டத்தில் அது சேர்த்தது. பெருந்திட்டத்தின்படி வடமாகாணத்தின் தென்பகுதியில் அடங்கியிருந்த I, K, J, L, M ஆகிய பிரதேசங்கள் துரித மகாவலித் திட்டத்தில் சேர்க்கப்படாமல் கைவிடப்பட்டன. ஒரு வடமத்திய மாகாணக் கால்வாய் மூலம் இப்பிரதேசங் களிலுள்ள 94,268 ஹெக்டேயர் (232,760 ஏக்கர்) நிலம் நீர்ப்பாசன வசதியினைப் பெறமுடியும், ஒல்லாந்துப் பொறியியல் ஆலோசகர்கள் (Nedeco) இவ்வாறான ஒரு கால்வாயினை அமைப்பது தொழில்நுட்பரீதியாகச் சாத்திய மானது எனக் கூறியிருந்தபோதிலும் கூட, அரசாங்கம் இத்திட்டத்தினையும் இப்பிரதேசங்களையும் துரித மகா வலித் திட்டத்தில் புறக்கணித்திருந்தது. ,வ்வாறு ஒதுக் கப்பட்டிருந்த இப்பிரதேசங்கள் 1988 ஆம் ஆண்டு துரித மகாவலித் திட்டத்தின் சிறப்புப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டன. 1988 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 16 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மணலாறு பிரதேசம் வெலி ஓயா எனப் பெயர் மாற்றப்பட்டு, இலங்கையின் 26 ஆவது மாவட்டமாகப் பிரகடனப்படுத்



தப்பட்டது. துரித மாகவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உடனடி அபிவிருத்திக்காகத் திட்டமிடப்பட்ட பிரதேசமாக, வெலிஓயா (L பிரதேசம்) மாவட்டம் அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இராணுவமயப்படுத்தப்பட்ட சிங் களக் குடியேற்றங்கள் விரைவாக நடைபெறலாயின. 1988, 1989 ஆண்டுக் காலப் பகுதிகளில் இப்பிரதேசத்தில் 3364 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன.

விக்டோரியா நீர்த்தேக்கத் திட்டத்தின் தெல்தெனியாப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள். துரித மகா வலித்திட்டத்தின் கீழ் நிலங்கள் வழங்கப்பட்டுக் குடியமர்த் தப்பட்டனர். இதன்படி ஏறத்தாழ 35,000 மக்களை உள்ளடக்கிய 5,925 குடும்பங்கள் இவ்வாறு குடியமர்த் தப்பட்டன. இவர்களில் ஏறத்தாழ 85 சத வீதத்தினர் சிங்களவர்களாவர், 6 சத வீதத்தினர் முஸ்லிங்களாகவும் 5 சத வீதத்தினர் தமிழர்களாகவும் இருந்தனர். இதிற் குறிப்பிடத்தக்க அம்சம், என்னவெனில், வெளியேற்றப பட்ட சிங்கள மக்கள் அனைவரும் கிழக்கு மாகாணத்தில் மதுறு ஓயாத் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்டனர். மேலும் இக் குடியேற்றங்கள் அனைத்தும் தமிழர்வாழும் கிழக்கு மாகாணப் பிரதேசங்களிலேயே மேற்கொள்ளப் பட்டன. ஆனால் வெளியேற்றப்பட்ட தமிழர்களும் முஸ்லிங்களும் கண்டி மாவட்டத்திற்குள்ளேயே குடி யமர்த்தப்பட்டனர். கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் நகர்ப்புறப் பிரதேசங்களையும் தமிழ்க்கிராமப் பிரதேசங் களையும் இணைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்க வில்லை. மாறாக இங்கு நடைபெறும் குடியேற்றப் பிரதேசங்களைச் சிங்களப் பிரதேசங்களோடு இணைப் பதற்கு நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்கின்றது. இதன் ஒரு கட்டமாக சிங்கள மாவட்டங்களையும் கிழக்கு மாகாண மகாவலி அபிவிருத்திக் குடியேற்றப் பிரதேசங் களையும் இணைக்கும் வகையில் ஒரு புகையிரதப் பாதை அமைக்கும் ஒரு உத்தேசத்திட்டம், துரித மகா வலித் திட்டத்தில் உள்ளது. ஆனால் அதே நேரத்தில் கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகள் புகையிரதப் பாதைகளால் இணைக்கப்படவில்லை.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழான குடியேற் றங்களில் அரசாங்கம் சிங்கள இனம் என்பதனை மட்டும் முதன்மைப் படுத்தாமல் அதனோடு பௌத்த மதம் பௌத்த கலாசாரம் என்பவற்றையும் குடியேற்றங்களோடு இணைத்தது.

“கடந்த காலங்களில் இலங்கையில் நிலவிய பெருமை மிகுந்த சிங்கள பௌத்த கலாசாரத்தினைக் காட்டும் ஒரு சான்றாக மதுறு ஓயாத் திட்டம் விளங்கும்” என, இத்திட்டத திற்குப் புகழாரம் சூட்டப்பட்டது மகாவலித்திட்ட அதிகாரிகள் இங்கு குடியேறிய மக்களின் பொருள்சார் செல்வத்தினை உயர்த்துவதற்கு மட்டுமன்றி, அவர்களின் தெய்வீக வாழ்க்கைக்குத் தேவையான வழிகாட்டல்களையும் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டனர். பௌர்ணமி தினங்களில் ஒவ்வொரு குடும்பமும் பௌத்த மத அனுட்டானங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டது. (மகாவலி அபிவிருத்தி அமைச்சு - 1984 துரித மகாவலித் திட்டத்தின் கீழ் B பிரதேசத்தில் 43 பௌத்த விகாரைகளும் C பிரதேசத்தில் 41 பௌத்த விகாரைகளும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

ஒரு தேசிய இனத்தின் அடிப்படைப் பண்புகளில் ஒன்று அவ் இனத்திற்கு ஒரு பாரம்பரிய பிரதேசம் இருத்தலாகும். எந்தவொரு தேசிய இனத்தையும் அழிக்க முயலும் ஒடுக்குமறையாளர்கள் அவ்வினத்தின் பாரம்பரிய பிரதேசங்களைச் சூறையாடுவதவையும். அத் தேசிய இனத்தின் தனித்துவத்தினை வெளிப்படுத்தும் கலாசாரச் சின்னங்களை அழித்து ஒழிப்பதனையும், இன அழிப்பிற்கான நடைமுறைகளில் முக்கிய படிமுறை களாகக் கொள்கின்றனர். ஒரு இனம் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பிரதேசத்தினைச் சூறையாடுவதற்குக் குடியேற்றங்களை மேற்கொள்வதே ஒடுக்கு முறையாளர் களால் முதலில் செய்யப்படுகின்றது. பல்வேறுபட்ட பெயர்களில் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் இக்குடியேற்றங்கள், ஒரு இனத் தையே அழித்தொழிக்கும் நோக்கினைக் கொண்டவை.



இக்குடியேற்றத் திட்டங்கள் ஒரு இனம் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த நிலத்தைப் பறித்தெடுத்து அவ் இனத்தை அகதிகளாகத் துரத்தியடிக்கும் ஆபத் தினைக் கொண்டவை.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் கடந்த அரை நூற்றாண்டுகளுக் கும் மேலாக இலங்கை அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த - வருகின்ற - பல்வேறுபட்ட பெயர்களிலான குடியேற்றத்திட்டங்கள், இக்கருத்துக் களையே வெளிப்படுத்துகின்றன. இலங்கைவாழ் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயக உரிமையினை மறுப்பதற் காகவும் மறைப்பதற்காகவும், இலங்கை அரசாங்கம் குடியேற்றத் திட்டங்களைத் தனது கருவிகளாகப் பயன் படுத்திக் கொண்டது. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் வாழும் மக்களின் இன விகிதாசாரங்களை மாற்று வதனை நோக்கமாகக் கொண்டே இக்குடியேற்றத்திட் டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 1881 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி கிழக்கு மாகாணத்தில் 75,408 தமிழர்களும் 5,947 சிங்களவர்களும் இருந்தனர். 1981 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி இம்மாகாணத்தில் 399,788 தமிழர்களும் 243,129 சிங்களவர்களும் இருந்தனர். எனவே 1881-1981 காலப்பகுதியில் இம் மாகாணத்தில் தமிழர்களின் தொகை 430 சத வீதத் தினால் மட்டுமே அதிகரித்திருக்க, சிங்களவர்களின் தொகை 3988 சத வீதத்தினால் அதிகரித்திருந்தது. இதன் விளைவாக 1881 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் 4.7 சத வீதமாக மட்டுமேயிருந்த சிங்களவர்கள் 1981 ஆம் ஆண்டு மொத்தச் சனத்தொகையில் 24.9 சதவீதமாகக் காணப்பட்டனர். இதே நேரத்தில் 1881 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தின் மொத்தச் சனத்தொகையில் 59.1 சதவீதமாக இருந்த தமிழர்களின் பங்கு 1981 ஆம் ஆண்டு 41 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. எனவே 1881 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் 100 தமிழர்களுக்கு 8 சிங்களவர்கள் காணப்பட்டனர். 1981 ஆம் ஆண்டு 100 தமிழர்களுக்கு 61 சிங்களவர்கள் இருந்தனர். கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங் களின் விளைவே இதுவாகும்.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப் பட்ட குடியேற்றத் திட்டத்தின் மற்றுமொரு முக்கிய அம்சம் என்னவெனில், அக் குடியேற்றத்திட்டப் பிரதேசங்களுக்கு ஏற்கெனவே பாரம்பரியமாக இருந்து வந்த தமிழ்ப் பெயர்கள் நீக்கப்பட்டு அவற்றிற்குச் சிங்களப் பெயர்கள் கூட்டப்பட்டமையாகும்.

	பாரம்பரிய பெயர்	தற்போதைய பெயர்
1.	பதவில் குளம்	பதவியாக் குளம்
2.	முதலிக் குளம்	மொறவேவ
3.	பெரிய குளம்	நாமல் வத்த
4.	பட்டிப்பளை	கல்லோயா
5.	புடவைக் கட்டு	சாகரபுற
6.	அம்பாள் ஏரி	அம்பாறை
7.	மணலாறு	வெலி ஓயா
8.	குமரக் கடவை	கோமரங்கடவல
9.	பெரிய விளாங் குளம்	மகா திவுல் வெவ
10.	பனிக்கட்டி முறிப்பு	பனிக்கட்டியாவ

இவற்றை விட தெகிவத்த, சிறிமாபுர, அபயபுர, சேருவல, அம்பலாங்கொடல்ல என சிங்களப் பெயர்களைக் கொண் ட பல கிராமங்கள் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் உருவாக்கப்பட்டன. இவை எவற்றை வெளிப்படுத் துகின்றன? பிரதேசங்களின் பாரம்பரியப் பெயர்களை மாற்றுவதன் மூலமோ புதிய பெயர்களைச் சூட்டுவதன் மூலமோ அபிவிருத்தியினை ஏற்படுத்திவிட முடியுமா? தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களைச் சிங்கள வரின் பிரதேசங்களாக மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளாகவே இவற்றைக் கருதலாம்.

வெலி ஓயாத் திட்டம் கூட தமிழர்களின் பாரம் பரிய பூமியைப் பறித்தெடுப்பதனை நோக்கமாகக் கொண்டே மேற்கொள்ளப்படுவதா கும். 1987 ஆம் ஆண்டு ஆடி மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஒரு அம்சமாக, வட மாகாண மும் கிழக்கு மாகாண மும் தற்காலி கமாக இணைக் கப்பட வேண் டும் என்று கூறப் பட்டது. இதன் விளை வாகவே முன்னர் ஒதுக் கப் பட்டிருந்த மணலாறு (வெலி ஓயா) பிரதேசம், துரித மகாவலி அபி விருத்தித் திட்டத்தின் சிறப்புப் பிரதேசமாகவும், உடனடியாக அபிவிருத் தி செய்யப்பட வேண்டிய பிரதேசமாகவும் 1988 ஆம் ஆண்டு அரசாங் கத்தினால் அறிவிக்கப் பட்டது. இப் பிரதேசத்தில் சிங்கள மக்களைக் குடி யேற்றுவதன் மூலம் தமிழர்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசங்களை அதாவது, வடக்குப் பிர தே ச த் தி னை யு ம் கிழக் குப் பிரதேசத் தினையும் துண்டாடு வதற்கு அரசாங் கம் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

மேலும், 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நிறை வேற்றப் பட்ட அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத் தின்படி மாகாண சபை களுக்கு அரசகாணிகள் ஒதுக் கப் பட் டன. ஆனால் மகாவலி அபி விருத்திச் செயற்திட்ட பிரதேசம் மத்திய அர சாங்கத்தின் நிர்வாகத் திலேயே காணப்படும். இதன் காரணமாகவே முன்பு துரித மகாவலித் திட்டத்திலிருந்து விலக் கப்பட்டிருந்த K, J, L, M, I ஆகிய பிரதேசங்கள் 1988 ஆம் ஆண்டு துரித மகாவலித் திட் டத்தின் சிறப்புப் பிர தேசங்களாகச் சேர்க்கப்பட்டன. இதன் மூலம் இப் பிரதேசங் களை இலங் கை அரசாங் கம் தனது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்தது. எனவே குடியேற்றம் தொடர்பாக இலங்கையில் தற்போது மேற் கொள் ளப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளும், தமிழர் களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பறித்தெடுப்பதனையே நோக்கமாகக் கொண்டவையாக உள்ளன. இன்று இலங்கை அரசாங்கம் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் கையாள்கின்ற காணிக் கொள்கையினை -குடியேற்றத் திட்டங்களை பிரித்தானியரின் காலனித்துவக் காணிக் கொள்கையோடு ஒப்பிட முடியும். கண்டி, வெல்லச் மாகாணங்களில் நிலவிய விடுதலைப் போராட்டத்தை அடக்குவதனையும், கண்டி மாகாணத்தினை இலங்கை யின் ஏனைய பகுதிகளோடு இணைத்து அதனது தனித்து வத்தை இழக்கச் செய்வதனையும் நோக்கமாகக் கொண் டே, பிரித்தானியரின் காணிக் கொள்கையும் காணிச் சட்டங்களும் உருவாக்கப்பட்டன. அதே பின்னணியி லேயே இன்றைய இலங்கை அரசாங்கத்தின் காணிக் கொள்கையும் அமைந்துள்ளது. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற விடுதலைப் போராட்டத்தினைச் சிதைப்பதற்காகவும் இப் பிரதேச மக்களின் தனித்துவத்தினை இழக்கச் செய்வதற் காகவுமான காணிக்கொள்கையே இன்று உருவாக்கப் பட்டுள்ளது. தமிழர்வாழும் பிரதேசங்களை சிங்களப் பிரதேசங்களோடு இணைப்பதன் மூலம் இதனைச் சாதிக்க முடியும் என, அரசாங்கம் எண்ணியுள்ளது. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட குடியெற்றத்திட்டங்கள் குறித்து 1985 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், அப்பொழுது இலங்கை ஜனாதிபதியாக விருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா பாராளுமன்றத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

“நாம் எல்லைகளில் குடியேறாவிடின் எல்லைகள் எம்மை நோக்கி நகரும்” (If we do not occupy the border, the border will come to us). வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் குடியேற்றத் திட்டங்களின் பிரதான நோக்கம் இதுவேயாகும். அதே நேரத்தில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் வாழும் தமிழ்



GTA CHIROPRACTIC CENTRE

We are specialized in

- Motor Vehicle Accidents
- Slip & Fall
- WSIB
- Extended Health Care
- Sports Injuries
- Physiotherapy
- Chiropractic
- Orthotics Shoes
- Massage Therapy
- Acupuncture



Health is Wealth

Pathmaraj (Pat) Pathman

Tel: 416-321-0482 Cell: 416-528-5318

Fax: 416-321-0486

GTA Square Mall 5215 Finch Ave, E#206

Scarborough, ON, M1S 0C2

www.gtachiro.ca | Email: gtaphysio@gmail.com

ஒரு விரல் விஸ்வரூபம் எடுக்கவே முடியாது

R.S தங்கப் பட்டறை

நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்

குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்

திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்



பழைய நகைகளை மாற்றி
இன்றய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்

தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171

S.மூர்த்தி

Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough

FRONTLINE COMMUNITY CENTRE

குடிவரவாளர்களுக்கான சேவைகள்

பெண்கள் மற்றும் முதியோர்
நலதிட்டங்கள் கனடிய மனநல அமைப்பு

வருமான வரி பத்திரம் நிரப்புதல்
கனடிய வருமான வரித்துறை

பொதுவான திட்டங்கள்

மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்கள்

வேலைவாய்ப்பு சம்பந்தமான சேவைகள்

முதியவர்கள் சமூக நீரோட்டத்தில்
பங்குபெறுவதற்கான திட்டங்கள்

தன்னார்வத் தொண்டாற்றல்

(416) 840-4425
3031 Markham Rd, Unit 26 & 27
Scarborough ON M1X 1L9

Frontline Community Centre

frontlinecommunitycentre

http://fcccanada.org/

Nickon Photo & Video

நிக்கொன் போட்டோ & வீடியோ

Digital Album

டிஜிட்டல் அல்பம்





உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...



Call: Vijay


416.554.8899

Facebook ID:
Nickon Studio

வரலாற்று சிறப்புமிக்க சுதுமலை பிரகடனம்

04.08.1987

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க சுதுமலை பிரகடனம் லட்சக் கணக்கான தமிழர்கள் முன் அறிவிக்கப்பட்ட நாள் இன்று !



இந்தியா- இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் யாழ்ப்பாணம் சுதுமலை கோவில டியில் வரலாற்று சிறப்புமிக்க பிரகடனத்தை வெளியிட்டார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த பிரகடனம்:

"எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய தமிழீழ மக்களே.

இன்று எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. திடீரென எமக்கு அதிர்ச்சியூட்டுவதுபோல, எமது சக்திக்கு அப்பாற்பட்டது போல இந்தத் திருப்பம் ஏற்பட்டு இருக்கிறது. இதன் விளைவுகள் நமக்குச் சாதகமாக அமையுமா என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

திடீரென மிகவும் அவசரமாக, எமது மக்களையோ, எமது மக்களின் பிரதிநிதியாகிய எம்மையோ கலந்தாலோசிக்காமல் இந்தியாவும் - இலங்கையும் செய்து கொண்ட ஒப்பந்தம் இப்போது அவசர அவசரமாக அமலாக்கப்பட்டு வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் டெல்லி செல்லும் வரை இந்த ஒப்பந்தம் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது.

இந்தியப் பிரதமர் என்னைச் சந்திக்க விரும்புவதாகச் சொல்லி டெல்லிக்கு அவசரமாக அழைத்துச் சென்றார்கள். அங்கு சென்றதும் இந்த ஒப்பந்தம் எமக்குக் காண்பிக் கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் பல சிக்கல்கள் இருந்தன. பல கேள்விக்குறிகள் இருந்தன.

இந்த ஒப்பந்தத்தால் எமது மக்களின் பிரச்னைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுமா என்பதைப் பற்றி எமக்குச் சந்தேகம் எழுந்தது. ஆகவே, இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை இந்திய அரசுக்குத் தெள்ளத்தெளிவாக விளக்கினோம். ஆனால், நாம் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாமல் போனாலும் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியே தீருவோம் என இந்திய அரசு கங்கணம் கட்டி நின்றது.

இந்திய அரசின் நிலைப்பாடு குறித்து நாம் ஆச்சர்யப்பட வில்லை. இந்த ஒப்பந்தம் தமிழர் பிரச்னையை மட்டும் அரசியல் இலட்சியத்தைப் பாதிக்கிறது. எமது போராட்ட வடிவத்தைப் பாதிக்கிறது. எமது ஆயுதப் போராட்டத்துக்கு ஆப்பு வைப்பதாகவும் அமைகிறது. பதினைந்து வருடங் களாக ரத்தம் சிந்தி, தியாகம் புரிந்து, சாதனை ஈட்டி, எத்தனையோ உயிர்பலி கொடுத்துக் கட்டி எழுதப்பட்ட ஒரு போராட்ட வடிவம் ஒருசில தினங்களில் கலைக்கப்படுவ தென்றால் அதை நாம் ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது.

திடீரெனக் கால அவகாசமின்றி எமது போராளிகளின் ஒப்புதலின்றி, எமது மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இன்றி இந்த ஒப்பந்தம் எம்மை நிராயுதபாணியாக்குகிறது. ஆகவே, நாம் ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்தோம். இந்தச் சூழ்நிலையில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி என்னை அழைத்துப் பேசினார். அவரிடம், எமது பிரச்னைகளை மனம்திறந்து பேசினேன்.

சிங்கள் இனவாத அரசின் மீது எமக்குத் துளிகூட நம்பிக்கை இல்லை என்பதையும், இந்த ஒப்பந்தத்தை அவர்கள் நிறைவேற்றப் போவதில்லை என்பதையும் இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்தேன். எமது மக்களின் பாதுகாப்புப் பிரச்னை பற்றியும் அதற்கான உத்தர வாதங்கள் பற்றியும் பேசினேன். பாரதப் பிரதமர் எமக்குச் சில வாக்குறுதிகள் அளித்தார். எமது மக்களின் பாதுகாப புக்கு உத்தரவாதம் அளித்தார்.

பாரதப் பிரதமரின் நேர்மையில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது. அவரது உறுதிமொழிகளில் நம்பிக்கை இருக்கிறது. சிங்கள இனவாத அரசு மீண்டும் தமிழர் இன அழிப்பு நடவடிக்கையில் இறங்க, இந்தியா அனுமதிக்காது என நாம் நம்புகிறோம். இந்த நம்பிக்கையில்தான் நாம் இந்தியச் சமாதானப் படையிடம் ஆயுதங்களை ஒப் படைக்க முடிவு செய்கிறோம்.

நாம் எமது மக்களின் பாதுகாப்புக்காக எத்தனை அளப் பரிய தியாகங்களைப் புரிந்தோம் என்பதை நான் இங்கு விளக்கிக் கூறத் தேவையில்லை. எமது இலட்சியப் பற்றும்



1987-ம் ஆண்டு இலங்கையுடன் திடீரென அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி ஒப்பந்தம் போட முடிவு செய்து விட்டார். ஆனால் களத்தில் இருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் முதலில் ஆலோசிக்கவில்லை.

பின்னர் டெல்லி அசோகா ஹோட்டலில் பிரபாகரன் உள்ளிட்ட விடுதலைப் புலிகள் இயக்க தலைவர்கள் சிறை வைக்கப்பட்ட நிலையில் ஒப்பந்தத்தை ஏற்றாக வேண்டும் என மிரட்டல் விடுக்கப்பட்டது. ஆனாலும் இதுதான் ஒப்பந்தம் எனக் கூறிவிட்டு 1987-ம் ஆண்டு ஜூலை 29-ல் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவுடன் ராஜீவ் காந்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு வந்தார்.

இதனைத் தொடர்ந்து இலங்கை திரும்பிய பிரபாகரன் 1987-ம் ஆண்டு ஆகஸ்ட் 4-ந் தேதி சுதுமலை கோவிலடியில் லட்சக்கணக்கான மக்களிடையே "சுதுமலை பிரகடன"த்தை வெளியிட்டார்.

தொட்டு நிற்கவில்லை. இது, பிரதானமாக இந்திய - இலங்கை உறவு பற்றியது. இந்திய வல்லாதிக்க வியூகத தின் கீழ் இலங்கையைக் கட்டுப்படுத்தும் விதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இலங்கையில் அந்நிய நாசகாரச் சக்திகள் காலூன்றாமல் தடுக்கவும் இது வழிவகுக்கிறது.

ஆகவேதான், இந்திய அரசு அதிக அக்கறை காட்டியது. ஆனால், அதேசமயம் ஈழத்தமிழரின் அரசியல் தலை விதியை நிர்ணயிப்பதாகவும் இந்த ஒப்பந்தம் அமைகிறது. ஆகவேதான், எமது மக்களைக் கலந்தாலோசிக்காது எமது கருத்துகளைக் கேளாது இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதை நாம் கடுமையாக எதிர்த்தோம். ஆனால், நாம் எதிர்த்ததில் அர்த்தமில்லை. எமது அரசியல் தலைவிதியை எமது வல்லமைக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் வல்லரசு நிச்சயிக்க முடிவு செய்திருக்கும் போது நாம் என்ன செய்வது?

இந்த ஒப்பந்தம் எமது இயக்கத்தைப் பாதிக்கிறது. எமது

தியாக உணர்வும் எத்தன்மை வாய்ந்தது என்பதை எமது மக்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள். உங்களது பாதுகாப்புக்காக, உங்களது விடுதலைக்காக, உங்களது விடிவுக்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்திய அரசிடம் ஒப்படைக்கிறோம்.

நாம் இந்த ஆயுதங்களை ஒப்படைக்கும் கணத்திலிருந்து எமது மக்களாகிய உங்களின் பாதுகாப்புப் பொறுப்பையும் இந்தியாவிடம் ஒப்படைக்கிறோம். ஈழத் தமிழரின் ஒரே பாதுகாப்பு சாதனமாக இருந்துவந்த இந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடம் பெற்றுக் கொள்வதிலிருந்து மக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறது. ஆயுதக் கையளிப்பு என்பது, இந்தப் பொறுப்பு மாற்றத்தைக் குறிக்கிறது.

நாம் ஆயுதங்களைக் கையளிக்காதுப் போனால் இந்திய இராணுவத்துடன் மோதும் துர்பாக்ய சூழ்நிலை ஏற்படும். இதை நாம் விரும்பவில்லை. இந்தியாவை நாம் நேசிக்கிறோம். இந்திய வீரருக்கு எதிராக நாம் ஆயுதங்கள் நீட்டத் தயாராக இல்லை. எமது எதிரியிடம் இருந்து எம்மைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய இராணுவ வீரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். நாம் ஆயுதங்களை அவர்களிடம் கையளிப்பதிலிருந்து ஈழத் தமிழன் ஒவ்வொருவருடைய உயிருக்கும், பாதுகாப் புக்கும் இந்திய அரசுதான் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதை நான் இங்கு அடித்துக் கூற விரும்புகிறேன். இந்தியாவின் இந்த முயற்சிக்கு நாம் ஒத்துழைப்பதைத் தவிர, எமக்கு வேறு வழியில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் அவர்களுக்கு வழங்குவோம்.

ஆனால், இந்த ஒப்பந்தத்தால் தமிழரின் பிரச்னைக்குத் தீர்வு ஏற்படுமென நான் நினைக்கவில்லை. சிங்கள் இனவாத பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கிவிடும் காலம் வெகுதூரத்தில் இல்லை. தமிழீழத் தனியரசே, தமிழீழ மக்களின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

தமிழீழ இலட்சியத்துக்காகவே நான் தொடர்ந்து போராடு வேன் என்பதையும் இங்கு திட்டவட்டமாக உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால், போராட்ட இலட்சியம் மாறப்போவ தில்லை. எமது இலட்சியம் வெற்றி பெறுவதானால், எமது மக்களாகிய உங்களின் ஏகோபித்த ஆதரவு என்றும் எமக்கு இருக்க வேண்டும்.

தமிழீழ மக்களின் நலன் கருதி இடைக்கால அரசில் அல்லது தேர்தலில் போட்டியிட வேண்டிய சூழ்நிலை எமது இயக்கத்துக்கு ஏற்படலாம். ஆனால், நான் எந்தக் காலகட்டத்திலும் தேர்தலில் பங்குபெறப் போவதில்லை.

இனவெறிப் பிடிக்குள் இஸ்லாமியத் தமிழர்

இலங்கையின் இனவாத பாசிச அரசானது தமிழ் பேசும் மக்களை இலங்கைத் தமிழர்,



இந்தியத்தமிழர், முஸ்லீம்கள் என பிரித்தாள முயல்வதுடன், அவர்களுக்கிடையில் கல வரங்களை மூட்டவும், கசப்புணர்வுகளை வளர்க்கவும் முற்படுகிறது. அதே வேளை தீவின் மொத்தச் சனத்தொகையில் தமிழ் பேசும் மக்கள் மிகக்குறைந்த சதவீதமே எனப் பிரித்துக் காட்டவும் முனைகிறது. 1981ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, தீவின் சிங்களவர் தொகை 10,935,666 (74வீதம்). தமிழ் பேசும் மக்கள் தொகை 3,753,742 (24.3 வீதம்). ஆனால் இந்தியத் தமிழர் 5.5 வீதம், முஸ்லீம்கள் 7.1 வீதம், இலங்கைத் தமிழர் 12.6 வீதம் எனும்போது தமிழ் பேசும் மக்களின் ஒட்டுமொத்தமான வலிமையின் முக்கியத்துவம் குறைந்து விடுகிறது. இத்



தகைய தந்திரத்திற்கு தமிழ் பேசும் மக்களிடையே உள்ள துரோகத் தலைமைகள் சில பதவிகள், சலுகைகளுக்காக துணை போகின்றன. தென்னிலங்கை இஸ்லாமியத் தலைமைகள் வடக்கு, கிழக்கில் உள்ள இஸ்லாமியத் தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்துவதாக கூறமுடியாது. இஸ்லாமியத் தமிழர்களிடையே உள்ள 5 வீதம் பணக்கார வர்க்கத்தின் பிரதிநிகளாகிய இவர்கள் சிறு தொழில்களும், விவசாயமும் புரியும் ஏழை இஸ்லாமிய மக்களைப் பிரதிநிதித் துவப்படுத துவது இல்லை. கடந்த ஐம்பது வருடகாலத்தில் தீவின் கிழக்கில் இருந்து இஸ்லாமியப் பிரதிநிதி எவரும் அமைச்சரவையில் இடம் பெறவில்லை. முஸ்லீம் நாடுகளின் உதவி களைப் பெற பணக்காரவர்க்க நலன்களைப் பேணும் ஒரு சிலருக்கு கண்துடைப்பாக பதவிகளைக் கொடுத்து இஸ்லாமிய மக்களின் பிரதிநிதிகள் என்று உலகை ஏமாற்றுகிறது சிங்கள அரசு, மூன்றாக பிரிப்பதே ஒவ்வொன் றாக அழிக்கத்தான் என்பதை தமிழீழக் குழந் தைகளே புரிந்துகொள்ளவார்கள். சுதந்திரப் போராட்டம் ஒடுக்கப்பட்ட அனைத்து மக் களாலும் மேற்கொள்ளப்பட்டவேண்டிய ஒன் று. அப் போதுதான் அனைவரும் அடக்குமுறையாளனிடமிருந்து விடுதலை பெற முடியும்.

சிங்கள இனவாதம் பிரித்தழிக்க நினைக்கும் இஸ்லாமியத் தமிழரின் - அவலநிலையினை சற்றுப் பார்ப்போம். 1948ம் ஆண்டு வெள்ளை யர் ஆட்சியின் வெளியேற்றத்தின் பின் சிங்கள அரசு படிப்படியாக வர்த்தகத் துறையில் தனது ஆதிக்கத்தை விசாலப்படுத்தத் தொடங்கியது. அரசு கூட்டுறவுக்கடைகளும், மொத்த விற் பனை நிலையங்களும் ஸ்தாபிக்கப்பட்டன. ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தின் 70 வீதம் அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டவரப் பட்டது. அரசுடமை எனும் போது சிங்கள முதலாளித்துவ உடமை எனபதே பொருள். இன்று இஸ்லாமியத் தமிழர்களின் கையில் 3 வீதம் வர்த்தகம் கூட இல்லை. அரசு கூட்டுத் தாபனங்களின் 4 வீதம் வேலை வாய்ப்பையே இஸ்லாமிய மக்கள் பெற்றிருக்கின்றனர். சுதந்திர வர்த்தக வலயத்தில் இவர்கள் முற் றாக புறக்கணிக்கப்பட்டனர்.

கல்வித்துறையில் இஸ்லாமியத்தமிழர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். இவர்களது பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இல்லை. 683 இஸ்லாமியப் பாடசாலைகளில் 3822 ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. கட்டிடங்கள், தளபாடங்கள், விஞ்ஞான கூடங் கள், நூல் நிலையங்கள் போன்ற அத்தியா வசிய வசதிகள் மிகமிகக் குறைவு. பல்கலைக்கழக அனுமதியில் இஸ்லாமியத் தமிழர்களின் தொகை 3.8 வீதம் ஆக இருக்கின்றது. பாதுகாப்பு படையகளிலும் , பொலிஸ் படையிலும் இஸ்லாமிய மக்கள் ஒரு சதவீதமும் இல்லை. இலங்கை அரசு சிங் களக் குடியேற்றங்கள் மூலம் இஸ்லாமிய மக்களை அவர்களது நிலங்களில் இருந்து

அம்பாறை மாவட்டம் இனத்தொகை	1971	%	1981	%
சிங்களவர்	81,762	30	1,44,779	37.2
தமிழர்கள்	57,346	21	74,328	19.1
முஸ்லீம்கள்	1,26,033	46.2	1,61,754	41.6
பிறர்/துவர்கள்	7,625	2.8	7,665	2
மற்றவர்கள்	24	—	261	—
	2,72,790	100	3,88,786	100

விரட்டி வருகிறது. தமது நிலங்களிலேயே சிறு பான்மையினராகி, தனித்தன்மையை இழந்து பேரினவாதம் புரியும் கலாச்சாரப் படுகொலை, இனப்படுகொலை ஆகியவற்றின் விளைவால் அழிந்து போகும் ஆபத்தான நிலையை இஸ்லாமிய மக்கள் அடைந்துள்ளனர்.

அம்பாறை சிங்கள மாவட்டமாக மாறிக் கொண்டிருக்கிறது. அங்கு நடந்த நிலப் பறிப்புகளில் சில:-

அக்கரைப்பற்றில் இருந்து 5 மைல் தொலை வில் கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 1450 ஏக்கர் காட்டைத் திருத்தி நெல் காணிகளாக்கினர். இஸ்லாமிய மக்கள். எவ்வித முன்னறிவித்தலோ, நஷ்டஈடோ இன்றி அம் மண்ணின் மக்களைப் பலவந் தமாகக் கலைத்துவிட்டு அக் காணிகளைச் சீனிக்கூட்டுத்தாபனத்திடம் கையளித்தது சிங்கள அரசு. பின்னர் அக்காணிகளில் வெளிமாவட்டங்களில் இருந்து சிங்களவர் களைக் கொண்டு வந்து குடியேற்றியது.

இதே போன்று அம்பலத்தாறு, சேனை வட்டம், பொன்னன்வெளி, கோள வட்டை, கொண்டை வெட்டுவான் போன்ற பல கிராமங்களில் காடுகளை வெட்டி அபிவிருத்தி செய்த 7,000க்கு அதிகமான காணியில் இருந்து இஸ்லாமிய மக்களை அடித்து விரட்டி அக் காணிகளை அரசாங்கம் அபகரித்துக் கொண் டது.

1982 ஜனவரியில் பொத்துவில்லுக்கு அண் மையில் அறுகம்பை, உல்லை ஆகிய குடி யேற்றத்திட்டங்களில் சட்டபூர்வமாகக் குடியேற் றிய இஸ்லாமியத் தமிழர்கள் அடித்து விரட்டப் பட்டனர்.

உதாரணமா கும். 1956ல் இருந்து 1960 வரை இஸ்லாமியத் தமிழர்களின் வாக்காளர் தொகை 44, 000ல் இருந்து 52, 000 ஆக 9 வீதம் அதிகரித்த வேளை சிங்கள வாக்காளர் களின் தொகை 3905ல் இருந்து 23,000 ஆக 500 வீதம் அதிகரித்தது.



திருகோணமலை மாவட்டத்திலும் இதே கதைதான். 1952-1954ம் ஆண்டுகளில் கந்தளாய், அல்லை குடியேற்றத்திட்டங்களின் கீழ் தம்பலகாமப்பகுதியில் இருந்த 4,000ம் ஏக்கர் விவசாயக் காணியில் இருந்து இஸ்லாமிய மக்கள் துரத்தப்பட்டு, வெளி மாவட்டச் சிங்களவர் அங்கு குடியமார்த் தப்பட்டனர். விரட்டப் பட்ட அம்மக்கள் கிண் ணியாவுக்கு அருகில் இருந்து காடுகளை வெட்டி 10,000 ஏக்கர் விவசாயக் காணிகளை ஏற்படுத்தினர். 1967ம் ஆண்டு அங்கிருந்தும் அவ்விவசாய மக்கள் கலைக்கப்பட்டனர். இதனை இஸ்லாமிய மக்கள் எதிர்த்தபோது வனஎல பொலிஸ் நிலையம் நிறுவப்பட்டு பொலிசாரின் பாதுகாப்புடன் சிங்கள குடியேற் றம் தொடர்ந்தது.

பதவியாக் குடியேற்றத்திட்டத்தின்படி உரு வான காணிகளில் திருகோணமலை மாவட்டத்துன் இருந்தவை முழுவதிலும் சிங் களவர்கள் குடியமர்த்தப்பட்டனர்.

இதே வேளை சிங்களப் பகுதிகளில் நடப்பவற் றை அவதானித்தால் இனவாத அரசின் முகத்திரை கிழியும். சிங்கள பௌத்த பெறிக் கொடூரம் தாண்டவமாடும் முகம் அங்கு வெளிப்படும். எம்பிலிப்பிட்டிய, செவனகல சீனி அபிவிருத்தித் திட்டப்பகுதியில் அத்துமீறிக் குடியேறிய சிங்கள மக்களை விரட்டியடிக்காது வேறு இடங்களில் மாதம் 550 மானியத்துடன்

இனவெறிப் பிடிக்குள் இஸ்லாமியத் தமிழர்

தற்காலிகமாக குடியேற்றினர். (பக38). அங்கிருந்த காணிகள் திருத்தியமைக்கப் பட்ட பின்பு அம்மக்கள் ஒவ்வொருவருக்கும் 5 ஏக்கர் வரை காணிகள் வழங்கப்பட்டன. அதுதவிர 1 ஏக்கர் மேட்டு நிலக் காணியும் கொடுக்கப்பட்டு, குடியிருக்க வீடும் கட்டிக் கொடுக்கப்பட்டது.

பௌத்த மதத்தின் பேரிலும், இஸ்லாமியத் தமிழரின் காணிகள் பறிக்கப்படுகின்றன. 1984 தை 1ம் திகதியிட்ட "சிலுமின" என்னும் சிங்களப்பத்திரிகை செய்தியொன்று வெளியிட்டது. தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 273 பௌத்த சின்னங்களை புதைபொருள் ஆணைக்குழு அகழ்ந்து எடுத்துள்ளது: அவற்றைப் புனரமைத்துப் பாதுகாக்க பௌத்த குருமாரும், சிங்கள மக்களும் அவ்விடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் என்பதே அச்செய்தியாகும்.

அம்பாறை மாவட்டத்தில் இஸ்லாமியத் தமிழர் வாழும் பகுதிகளில் மாத்திரம் 43 பௌத்த சின்னங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்தது.

இத்தகைய சின்னங்கள் கிடைத்ததாக கதையைக் கட்டிவிட்டு அவ்விடங்களில் பௌத்த விகாரைகளை அமைத்து பௌத்த பூமியாக்குவது தான் இத்திட்டத்தின் நோக்கம்... மத ரீதியான குடியேற்றத்திற்கு ஒரு சிறு உதாரணம் தீகவாபி விகாரை யாகும். அம்பாறை மாவட்டத்தில் பாழடைந்த இவ்விகாரைக்கு ஒரு பௌத்த பிக்கு வந்தார். அவருக்குத் தானம் வழங்கி உதவினர். 1960ம் ஆண்டளவில் சில பௌத்த பிரமுகர்கள் விகாரையும், அதனைச் சூழ்ந்த காணிகளும் பௌத்த மத வளர்ச்சிக்காக, அரசால் சுவீகரிக்கப் படவேண்டும் என்று கூறினர். அதனைத் தொடர்ந்து விகாரையைக் சூழ்ந்த காணிகள் அரசால் சுவீகரிக்கப்பட்டு அங்கிருந்த இஸ்லாமிய மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

பாலஸ்தீனத்தில் காஸா, ஜோர்தானின் மேற்குக் கரை ஆகிய பகுதிகளில் இருந்து பாலஸ்தீனியரை விரட்டிவிட்டு யூதரைக் குடியேற்ற இத்தகைய முறைகளையே இஸ்ரேல் அரசு கைக்கொள்கிறது. பாலஸ்தீனியர்களை அழிக்கப் பயன்படும் யூத மூளையும், ஆயதங்களும் இங்கு இஸ்லாமிய மக்களை அழிக்க இஸ்ரேலால் வழங்கப்படுகிறது.

பாரம்பரியமாக மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுவரும் இஸ்லாமியத் தமிழர்களையும் இனவாத அரசு விடவில்லை. கிழக்கு மாகாணத்தில் கல்லோயா, சேனநாயக்க சமுத்திரம், அம்பலம் ஓயாக்குளம், நாவலடி, புடவைக்கட்டு, புன்னைக்குடா ஆகிய பகுதிகளில் சிங்களவர்களைக் குடியமர்த்த, இஸ்லாமியத் தமிழர்களை அச்சுறுத்தி வெளியேற்றி வருகிறது. சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தவும், அவற்றிற்கு பாதுகாப் பளிக்கவும், அம் மண்ணுக்குரியவர்களை வெளியேற்றவும் பொலிஸ், ஆயுதப்படைகள் இருக்கின்றன. கல்லோயா, பதவியா, அல் லை, கந்தளாய் திட்டங்களினால் ஏற்பட்ட சிங்களக்குடி யேற்றங்களால் திருகோணமலை மாவட்டத்தில் சேருவில தொகுதியும் அம்பாறை மாவட்டத்தில் அம்பாறைத் தொகுதியும் ஆக இரண்டு சிங்களத் தொகுதிகள் ஏற்பட்டன. குடியேற்றங்களால் இந்த இரண்டு மாவட்டங்களிலும் 65 வீதமான காணிகள் சிங்கள மயமாக்கப்பட்டன. தீவு முழுவதும் சிங்கள, பௌத்த ஆதிக்கத்தை ஏற்படுத்த வேண்டும், அந்நோக்கம் ஈடேறவிடாமல் தடுப்பவர்களை, எதிர்ப்பவர்களை அழிக்க வேண்டும். இது தான் இலங்கை அரசின் கொள்கை. எதிர்க்கின்ற மக்கள் அனைவரினதும் உயிர்களைப் பறித்தாவது தனது பாசிசக் கொள்கையை நிறைவேற்றவேண்டும் என எண்ணுகிறது இனவாத ஆட்சி. பல சந்தர்ப்பங்களில் இஸ்லாமியத் தமிழ் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்பட்டனர். அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. வீடுகள் எரிக்கப்பட்டன. 1974ம் ஆண்டு மகியங்கனையில், பங்கரகம எனும் இஸ்லாமியத் தமிழரது கிராமம் சிங்களக் காடையரால் அழிக்கப்பட்டது. 1976ம் ஆண்டு புத்தளம் ஜும்மா மசூதியன் உள்ளே தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 7 இஸ்லாமியத் தமிழர்கள் அரச ஆயதப் படையினரால் கொல்லப்பட்டனர்.

1983ம் ஆண்டு கலவரத்தின்போது 2வது கட்டமாக இஸ்லாமியத் தமிழர்களை பெரிய அளவில் தாக்கியழிக்கும் திட்டமும் சிங்கள ஆட்சியாளரின் குண்டர் படையினரிடம் இருந்தது. ஆனால் ஏதோ காரணத்தினால் அது நடைபெறவில்லை. ஆயினும் அக் கலவரத்தின்போது சுமார் 25 கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்களை இஸ்லாமியத் தமிழர்கள் இழந்தனர். பலர் சிங்கள இனவாதிகளால் கொல்லப்பட்டனர். 350ற்கு கூடுதலான இஸ்லாமியத் தமிழர்களது வீடுகளும், வியாபார நிலையங்களும் கொள்ளையடிக்கப்பட்டுத் தீவைக்கப்பட்டன. சமீப காலங்களில் இஸ்லாமியத் தமிழருக்கு எதிரான வன்செயல்கள் அலுத்கம, பாணத்துறை, நொச்சி யாதுவ, நிக்கவரட்டியா, அத்துலுகம ஆகிய இஸ்லாமியக் கிராமங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்டன.


கடந்த 13-07-86ம் திகதி மன்னார் மாவட்டத்தில் அடம்பன் கிராமத்தில் 10 இஸ்லாமியத் தமிழர்கள் இராணுவத்தின் துப்பாக்கிகளுக்கு இரையாக்கப்பட்டனர்.

சிங்கள மொழியை இஸ்லாமியத் தமிழரின் மேல் திணிக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறுகிறது. இஸ்லாமியத் தமிழர்கள், அவர்களது தாய்மொழியாம் தமிழிருக்க சிங்களத்தைப் பயிலுமாறு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். 60 வீதம் தமிழ் பேசும் மக்களைக் கொண்ட அம்பாறை மாவட்டத்தில் அரசு அலுவலங்கள் அனைத்திலும் நிர்வாகமும், பதிவுகளும் சிங்கள மொழியிலேயே நடைபெறுகின்றன. அம்பாறை மாவட்டத்தில் உள்ள 12 உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளில் 6 இஸ்லாமியத் தமிழர்களது பிரிவுகளாகும். தமிழ் தெரியாத சிங்கள உதவி அரசாங்க அதிபர்களே இவைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் சிங்களம் பேசத் தெரியாத இஸ்லாமியத் தமிழர்கள் படும் கஷ்டம் கொஞ்சமல்ல.


இன்று அமுலில் உள்ள விகிதாசார தேர்தல் முறையில் 12.5 வீதத்துக்கு குறைவான வாக்குகளைப் பெறும் எந்த அரசியல் கட்சியோ அல்லது தனிக்குமுவோ நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற முடியாது. 14.4 வீதம் ஆக வன்னி, 41.6 வீதம் ஆக அம்பாறை, 24.1 வீதம் ஆக மட்டக்களப்பு, 29.5 வீதம் ஆக திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வாழுகின்ற இஸ்லாமியத் தமிழர்கள் மாத்திரமே தமது பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்கு அனுப்பும் வாய்ப்புடையவர்கள். செறிவின்றி மற்ற மாவட்டங்களில் வாழும் இஸ்லாமியத் தமிழ் மக்கள் இம்முறை காரணமாக கணிசமான பிரதிநிதித்துவத்தை இழக்கின்றனர். மேலே கூறிய 4 மாவட்டங்களில் கூட குடியேற்றவாதிகளுக்கு ஆயதப் பயிற்சி அளித்து அரசு திட்டமிட்டுச் செய்யும் குடியேற்றங்கள் இஸ்லாமிய மக்களின் அரசியல் பிரதி நிதித்துவத்திற்கு ஆபத்தை காலப்போக்கில் ஏற்படுத்தப்போகின்றன.

சிங்கள இனவாத பாசிச ஆட்சியின் நடைமுறைகள், இஸ்லாமியத் தமிழ் மக்களுக்கு தமிழீழமே பாதுகாப்பு என்பதை வலியுறுத்துகின்றன. சமத்துவ சமுதாயத்தை உள்ளடக்கிய தமிழீழத்தை உருவாக்குவதில் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். அடிமைப்பட்ட மக்களின் ஒன்று திரண்ட போராட்டமே விடுதலையைப் பெற்றுத் தரும் என்பதை இஸ்லாமியத் தமிழ் மக்கள் உணர்ந்து போராட்ட ஓட்டத்தில் தங்களை மேலும் மேலும் இறுக்கமாக இணைத்துக் கொள்ள வேண்டும்.

ஆதாரம் - எம். ஐ. எம். முஹியத்தீன்



வருடம்	முஸ்லிம்கள்	அதிகரிப்பு	சிங்களவர்	அதிகரிப்பு
1947	37.000	—	2.394	—
1952	42.000	13%	3.119	30%
1956	44.000	5%	3.905	25%
1960	52.000	9%	23.000	500%
1963	57.000	9%	31.000	35
1970	62.000	9%	39.000	26
1977	68.000	10%	46.000	17%
1980	78.000	14%	68.000	48%



2022 ஆம் ஆண்டின்

உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை

விளம்பரத் தொடர்புகளுக்கு

437 345 4203





thamilarvanikam@gmail.com

டோக்கியோ ஒலிம்பிக் 2021 பதக்க பட்டியல்





டோக்கியோ ஒலிம்பிக் 2021 பதக்க பட்டியல் உலகளாவிய COVID-19 நோய்த் தொற்று காரணமாக, 2020 ஆம் ஆண்டில் ஒத்திவைக்கப்பட்ட டோக்கியோ ஒலிம்பிக், இறுதியாக ஜூலை 23, 2021 அன்று தொடங்குகிறது. உலகின் மாபெரும் சர்வதேச விளையாட்டுத் திருவிழா என்று அழைக்கப்படும் இந்த ஒலிம்பிக் தொடரில், 11000 க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த 11000-க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் 205 நாடுகளில் இருந்து வருகிறார்கள். 17 நாட்களில் 50 துறைகளில், 33 வகையான விளையாட்டுகளில் 339 போட்டிகளில் வீரர்கள் பங்கேற்கிறார்கள். ஜப்பான் தலைநகரில், இந்த 32வது ஒலிம்பிக் போட்டிகளை சிறப்பாக நடத்துவதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில், 300 க்கும் மேற்பட்ட பதக்கங்கள் கைப்பற்றப்பட உள்ளன. இங்கே டோக்கியோ ஒலிம்பிக்கின் பதக்கங்கள் குறித்த விவரங்களை பார்க்கலாம்.





தரம்	நாடு	தங்கம்	வெள்ளி	வெங்கலம்	மொத்தம்
1	யுனைட்டட் ஸ்டேட்ஸ்	39	41	33	113
2	சீனா	38	32	18	88
3	ஜப்பான்	27	14	17	58
4	கிரேட் ப்ரிட்டன்	22	21	22	65
5	ரஷ்யன் ஒலிம்பிக் கமிட்டி	20	28	23	71
6	ஆஸ்திரேலியா	17	07	22	46
7	நெதர்லாந்து	10	12	14	36
8	ஃப்ரான்ஸ்	10	12	11	33
9	ஜெர்மணி	10	11	16	37
10	இத்தாலி	10	10	20	40
11	கனடா	07	06	11	24
12	ப்ரேசில்	07	06	08	21
13	நியூசிலாந்து	07	06	07	20
14	க்யூபா	07	03	05	15
15	ஹங்கேரி	06	07	07	20
16	தென் கொரியா	06	04	10	20
17	போலாந்து	04	05	05	14
18	சிசெக் ரிப்பப்ளிக்	04	04	03	11
19	கென்யா	04	04	02	10
20	நார்வே	04	02	02	08
21	ஜமைக்கா	04	04	01	09
22	ஸ்பெயின்	03	08	06	017
23	ஸ்வீடன்	03	06	0	09
24	ஸ்விட்சர்லாந்து	03	04	06	13
25	டென்மார்க்	03	04	04	11
26	க்ரோடியா	03	03	02	08
27	ஈரான்	03	02	02	07
28	செர்பியா	03	01	05	09
29	பெல்ஜியம்	03	01	03	07
30	பல்கேரியா	03	01	02	06
31	ஸ்லோவேனியா	03	01	01	05

தரம்	நாடு	தங்கம்	வெள்ளி	வெங்கலம்	மொத்தம்
32	உஸ்பெகிஸ்தான்	03	0	02	05
33	ஜார்ஜியா	02	05	01	08
34	சைனிஸ் டைபெய்	02	04	06	12
35	டர்க்கி	02	02	09	13
36	க்ரீஸ்	02	01	01	04
36	உகாண்டா	02	01	01	04
38	குஹாடர்	02	01	0	03
39	ஜயர்லாந்து	02	0	02	04
39	இஸ்ரேல்	02	0	02	04
41	கத்தார்	02	0	01	03
42	பஹாமஸ்	02	0	0	02
42	கொசாவோ	02	0	0	02
44	உக்ரைன்	01	06	12	19
45	பெலாரஸ்	01	03	03	07
46	ரோமானியா	01	03	0	04
46	ஃபெனுசுலா	01	03	0	04
48	இந்தியா	01	02	04	07
49	ஹாங்க் காங்	01	02	03	06
50	பிலிப்பின்ஸ்	01	02	01	04
50	ஸ்லோவோகியா	01	02	01	04
52	தென் ஆப்ரிக்கா	01	02	0	03
53	ஆஸ்ட்ரியா	01	01	05	07
54	எகிப்த்	01	01	04	06
55	இந்தோனேஷியா	01	01	03	05
56	எதியோபியா	01	01	02	04
56	போர்ச்சுகல்	01	01	02	04
58	ட்டுனிசியா	01	01	0	02
59	எஸ்டோனியா	01	0	01	02
59	ஃபிஜி	01	0	01	02
59	லட்வியா	01	0	01	02
59	தாய்லாந்து	01	0	01	02

தரம்	நாடு	தங்கம்	வெள்ளி	வெங்கலம்	மொத்தம்
63	பெர்முடா	01	0	0	01
63	மொராக்கோ	01	0	0	01
63	ப்யூர்டோ ரிகோ	01	0	0	01
66	கொளம்பியா	0	04	01	05
67	அலேபெய்ஜின்	0	03	04	07
68	டொமினிசியன் ரிப்பப்ளிக்	0	03	02	05
69	அர்மேனியா	0	02	02	04
70	கைர்கிஸ்தான்	0	02	01	03
71	மங்கோலியா	0	01	03	04
72	அர்ஜெண்டினா	0	01	02	03
72	சான் மரினோ	0	01	02	03
74	ஜோர்டன்	0	01	01	02
74	மலேசியா	0	01	01	02
74	நைஜிரியா	0	01	01	02
77	பாஹ்ரைன்	0	01	0	01
77	லிதூயேனியா	0	01	0	01
77	நமிபியா	0	01	0	01
77	நார்த் மெசிடோனியா	0	01	0	01
77	சவுதி அரேபியா	0	01	0	01
77	டர்க்மெனிஸ்டான்	0	01	0	01
83	கசகஸ்தான்	0	0	08	08
84	மெக்ஸிகோ	0	0	04	04
85	ஃபின்லாந்து	0	0	02	02
86	பாட்ஸ்வானா	0	0	01	01
86	பர்கினா ஃபாசோ	0	0	01	01
86	க்ஹானா	0	0	01	01
86	க்ரேனாடா	0	0	01	01
86	கோட் டி இவோய்ரே	0	0	01	01
86	குவைத்	0	0	01	01
86	மோடோவா	0	0	01	01
86	சிரியா	0	0	01	01

அகஸ்ட் 15
1977
தமிழ் இனப்படுகொலை



1500க்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை
10,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் காயமடைந்தனர்
80,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் சொத்துக்களை இழந்தனர்
70 கோடிக்கு மேல் மதிப்புள்ள சேதமடைந்த தமிழர் சொத்துக்கள்
இதனால் பல இலட்சம் தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்

கொழும்பு –இரத்தினபுரி – களுத்துறை – காலி – மாத்தறை
அம்பாந்தோட்டை – மொனராகலை – பதுளை – மட்டக்களப்பு
யாழ்ப்பாணம் – அனுராதபுரம் – வவுனியா – மன்னார் – முல்லைத்தீவு
கண்டி – குருநாகல் – கேகாலை –திருகோணமலை – நுவரெலியா
மாத்தளை